# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 473 பிலவ வருடம், மாசி மாதம் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (08.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 04, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30


## ஒரேநாளில் 13 விபத்துகள்; 14 உயிரிழப்புகள்

02 பக்கம்



## எரிவாயு விநியோகம் முற்றாக இடைநிறுத்தம்

(படப்பிடிப்பு: ஏஷான்.தசநாயக்க)

02 பக்கம்



# உக்ரைனில் 17 இலட்சம் மக்கள் இடம்பெயர்வு

ரஷ்யா, உக்ரைன் மீது நேற்று 12ஆவது நாளாகவும் கடும் தாக்குதல்களை மேற்கொண்டது. உக்ரைனின் பெரும்பாலான பகுதிகளில் ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்துவதன் காரணமாக நேற்று மாலைவரை சுமார் 17 இலட்சம் பேர் பல்வேறு நாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

14,15 பக்கம்



## பிரதமரின் கூற்று முட்டாள்தனமானது

விமல் வீரவங்ச ஆவேசப் பேச்சு

யோ.தர்மராஜ்

பொறுப்பற்றவகையிலும் மக்களை பாதிப்புக்குள்ளாக்கும் வகையிலும் கருத்து தெரிவித்தமை யினாலேயே நாங்கள் அமைச்சுப் பதவி களிலிருந்து நீக்கப்பட்டதாக பிரதமர் மட்டுமல்ல, வேறு யார் கூறினாலும் அது முட்டாள்தனமான கருத்தாகும் என பதவி நீக்கப்பட்ட...

02 பக்கம்

## சபையில் விமல் இன்று விசேட உரை

யோ.தர்மராஜ்

அரசாங்கத்தை விமர்சித்ததாகக் கூறி அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச, இன்று ஆரம்பமாகவுள்ள...

02 பக்கம்



## நெதுங்கமுவ ராஜா உயிரிழந்தது

நா. தினுஷா

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் புனித கடமைகளில் ஈடுபட்டுவந்த, தேசிய மரபுரிமையாக அறிவிக்கப்பட்டுள்ள நெதுங் கமுவ ராஜா என்றழைக்கப்படும் யானை நேற்றுக்காலை உயிரிழந்தது.

ஒரு நாள் முழுவதும் சுகவீனமுற்றிருந்த நிலையிலேயே நேற்று உயிரிழந்துள்ளதாக அதன் பராமரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

02 பக்கம்

## ஈஸ்டர் தாக்குதல் அரசியல் சதியே!

ஐ.நாவின் தலையீட்டை ஜெனீவாவில் கோரினார் பேராயர்

நமது விசேட செய்தியாளர்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுடன் தொடர்புடைய ஆதாரங்களைத் திரட்டுவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் அதன் உறுப்பு நாடுகளும் உதவிசெய்ய வேண்டு மென ஜெனீவாவில் கோரிக்கை விடுத்துள்ள கொழும்பு மறைமாவட்ட பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, தாக்கு தல்களில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி...

02 பக்கம்

## எகிறியது பணவீக்கம்




* இலங்கையில் கடந்த இரு வருடங்களில் 1.7 ட்ரில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட்டுள்ளது.

* வரலாற்றில் அதி உச்ச பணவீக்கம் 2022 மார்ச்சில் பதிவு.

* மார்ச் 02 - பணம் அச்சிடுவதை உடனடியாக நிறுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு.



* மார்ச் 04 - ஆளுநர் கப்ராலின் பரிந்துரை

- எரிபொருள், மின்கட்டணத்தை உடனடியாக அதிகரித்தல்.
- அத்தியாவசியமல்லாத 700 பொருட்களின் இறக்குமதிக்கு வரிவிதித்தல்.

INFOGRAPHIC : UDESH SELVARAJ

© THAMILAN GRAPHIC DESK

நமது விசேட செய்தியாளர்

வரலாற்றில் என்றும் இல்லாதவாறு பணவீக்கம் மிக வேகமாக அதிகரித்துவருவதால் நாட்டில் பொருட்கள், சேவைகளின் விலைகள் மேலும் உயரும் நிலை உருவாகியுள்ளது.

பணவீக்கமானது மார்ச் மாத முதல் வாரத்தில் 16.8 வீதமாக உயர்வடைந்துள்ளது. இதன் காரணமாக பொருளாதார ரீதியில் மேலும் தாக்கம் ஏற்படுமென பொருளாதார நிபுணர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை மத்திய வங்கியினால் கடந்த இரண்டு ஆண்டுகளில் 1.7 ட்ரில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட்டுள்ளது.

### பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும்

02 பக்கம்

## ஐ.ம.ச. தலைமையகத்தின் மீது முட்டை வீச்சுத் தாக்குதல்

யோ.தர்மராஜ்

கொழும்பு, கோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தின் மீது நேற்று முட்டை வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் மக்களுக்கு என்ன செய்ததென கேள்வியெழுப்பி, பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் வருகைதந்த சிலர் அலுவலகத்திற்கு முன்பாக முதலில் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

02 பக்கம்

## சர்வதேச மகளிர் தினம் இன்று



உலகம் முழுவதும் இன்று சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. "நிலை பேறான நாளைக்கு இன்றைய பாலின சமத்துவம்" எனும் தொனிப்பொரு ளில் இம்முறை சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

04 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



ஜெனீவாவுக்கு போனதால இனி பேராயரையும் புலி எண்டு சொல்லுவாங்களோ...

## 60 வீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு

யோ.தர்மராஜ்

வரலாற்றில் மிகப்பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த எத்தியோப்பியா, சோமா லியா, வடகொரியா, உக்ரைன் போன்ற நாடு களில் கூட காணப்படாத மருந்துகளுக்கான தட்டுப்பாடு இலங்கையில் காணப்படுவதாக சுகாதார நிபுணர்கள்...

02 பக்கம்

## முட்டை வீச்சுத் தாக்குதலுக்கு ஐ.ம.சக்தி செயலர் கண்டனம்

ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையெனவும் சுட்டிக்காட்டு

02 பக்கம்



சிறுபான்மை கட்சிகளின் எம்.பிக்களை இணைத்து அரசாங்க மொன்றை அமைப்பது குறித்து அரச மேல்மட்டத்தில் தீவிர ஆலோசனை நடக்கிறது.

ஆனால் 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்கள் பலர் இப்போது அரசில் பதவிகளை ஏற்க தயக்கம் காட்டி வருகின்றனராம்.

இதனால் அதிர்ச்சியடைந்துள்ள அரசு, மலையகத்தின் சில எம்.பிக்களை அரவணைக்கத் தூதுவிட்டு வருகிறதாம்.



## வீதி விளக்குகளை அணையுங்கள்!

மின்சார நெருக்கடியைத் தீர்க்க பெசில் ஆலோசனை

யோ.தர்மராஜ்

நாட்டில் மின்வெட்டைக் குறைப்பதற்காக நேற்றுமுதல் எதிர்வரும் 31ஆம் திகதிவரை அனைத்து பிரதேசங்களிலுமுள்ள வீதி விளக்குகளை அணைத்து வைக்குமாறு நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ உள்ளூராட்சி மன்ற நிர்வாகிகளுக்கு வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு மின் பாவனையைக் குறைப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு கோரி...

02 பக்கம்

## மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பு

நமது நிருபர்

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை கடந்த வெள்ளிக்கிழமை 118.03 டொல ராக காணப்பட்ட நிலையில், நேற்று 139.13 டொலராக அதிகரித்துள்ளது.

சர்வதேச சந்தையில் மேலும் உயரும் அபாயம்

02 பக்கம்

## மண்ணெண்ணெய்க்கு தொடரும் தட்டுப்பாடு

(நா. தினுஷா)

நாட்டில் மண்ணெண்ணெய்க்கும் பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக தலைநகர் கொழும்பு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெருந்திரளான மக்கள் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு காரணமாக மண்ணெண்ணெய் அடுப்புகளைப் பெற்றுக் கொண்டோர் தாம் எதிர்நோக்கியுள்ள இக்கட்டான சூழ்நிலை குறித்து விசனம் வெளியிட்டனர்.

கிராண்ட்பாஸ், ஒருகொடவத்தை, ராஜகிரிய, தெமட்டகொட, கிருலப்பனை ஆகிய பகுதிகளிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று அதிகாலை முதல் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.



(படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

### எரிவாயு விநியோகம்...

(யோ.தர்மராஜ்)

நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக எரிவாயு விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு அடங்கிய மூன்று கப்பல்கள் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்தாலும் அதனை விடுப்பதற்கு உரிய கடன் கடிதம் விடுவிக்கப்படாதமையினால் எரிவாயுவை தரையிறக்க முடியாதுள்ளதாக குறித்த நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனால், நாட்டில் தற்போது எரிவாயு தட்டுப்பாடு நிலவுவதுடன் லிட்ரோ எரிவாயுவின் விநியோகமும் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

எனினும், நாளை (09) ஒரு கப்பலையேனும் விடுவிப்பதற்கு முடியும் என எதிர்பார்ப்பதாகவும் லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த 03ஆம் திகதி முதல் லாவ்ப் எரிவாயு நிறுவனத்தின் விநியோகமும் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதால் தற்போது நாட்டில் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது.

குறிப்பாக, எதிர்வரும் வாரத்தில் டீசல் மற்றும் பெற்றோலை விடவும் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு உக்கிரமடையும் என லாவ்ப் நிறுவனத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், எரிவாயு தட்டுப்பாட்டை உடனடியாக கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண தெரிவித்துள்ளார்.

### ஒரே நாளில்...

(நா. தினுஷா)

நாட்டில் நேற்று முன்தினம் (06) மாத்திரம் 13 வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்துகளில் 14 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிரிபாவ, இங்கிரிய, பூவரசன்குளம், அநுராதபுரம், பொரளை, பதியதாலவ, ஹபரண, ஆனமடுவ, நவகுருந்துவத்த, இரத்தினபுரி, அங்குனுகொலபெலெஸ்ஸ, கிளிநொச்சி மற்றும் வெலிக்கடை ஆகிய பிரதேசங்களிலேயே இந்த விபத்துகள் பதிவாகியுள்ளன.

இந்த விபத்துகளில் 12 தொடக்கம் 78 வயதுக்கிடைப்பட்டவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

அதற்கமைய, 12 வயது சிறுவன் ஒருவரும் விபத்தில் உயிரிழந்துள்ளதுடன், 18 முதல் 30 வயதுக்கிடைப்பட்டவர்கள் ஐவரும், 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் எட்டு பேரும் உயிரிழந்துள்ளனர்.

தற்போதைய காலக்கட்டத்தில் நாட்டில் அதிகளவான வாகன விபத்துகள் இடம்பெறுவதாகவும் கவனமின்மை, வீதி ஒழுங்குகளை மீறுதல், அதிக வேகத்தில் வாகனங்களை செலுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் இந்த விபத்துகள் சம்பவிப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகளும் ஒப்பீட்டளவில் அதிகரித்து வருவதாகவும், இதுபோன்ற விபத்துகளை தவிர்த்துக்கொள்ள வாகன சாரதிகள் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியம் என தெரிவித்துள்ள பொலிஸார், வீதி விபத்துகளை தவிர்த்துக்கொள்வதற்கான போக்குவரத்து விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

### ஐ.ம.ச. தலைமையகத்தின்...

பின்னர் அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகம் மீது அழுகிய முட்டைகளால் தாக்குதல் நடத்தியதுடன், அலுவலகத்தின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த கார்கள் மீது சுவரொட்டிகளையும் ஒட்டியுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகேயுடன் சென்ற குழுவினரே இந்த தாக்குதலை மேற்கொண்டதாக அலுவலகத்திலிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

### முட்டை வீச்சுத் தாக்குதலுக்கு...

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்துக்கு திட்டமிடப்பட்ட குண்டர்கள் குழு ஒன்றினால் நேற்று மேற்கொள்ளப்பட்ட இழிவான செயலானது நாட்டின் ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட கடுமையான எச்சரிக்கையாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டு மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்க தவறியதால் மக்கள் மத்தியில் அதிருப்திக்குள்ளாகியுள்ள அரசாங்கம், மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான எதிர்க்கட்சியின் தலைமையகம் மீது நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதலில் மக்களின் கருத்தை நசுக்குவது வருந்தத்தக்க தவறு என்பதை அரசாங்கத்துக்குச் சொல்கிறோம்.

எரிபொருள் நெருக்கடி, எரிவாயு நெருக்கடி, மருந்து தட்டுப்பாடு, அத்தியாவசிய உணவு மற்றும் பானங்களுக்கான பற்றாக்குறை, விலை உயர்வு, போக்குவரத்து சேவை செயலிழப்பினால் நாட்டில் அரசாங்கம் ஒன்று இல்லாத அராஜக ஆட்சி உருவாகும் இந்நேரத்தில், இத்தகைய கேவலமான செயல்களில் இருந்து அவர்களின் இயலாமையை மறைக்க முயல்வது தீக்கோழியின் தலையை மணலில் மறைப்பது போன்ற செயலாகும்.

அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் அபிப்பிராயத்துக்கு அரசாங்கம் அடக்குமுறையையே தீர்வாகத் தேர்ந்தெடுத்திருந்தால், அதற்கெதிராக மக்களுடன் இணைந்து செயற்பட ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் தயங்காது என்பதை இங்கு சுட்டிக்காட்டுகிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகம் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டர் தாக்குதல் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தி இதற்குக் காரணமானவர்கள், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று பொலிஸார் உட்பட பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் வலியுறுத்திக் கூறிக் கொள்கிறோம். ஒரே நாடு ஒரே சட்டத்தை யதார்த்தமாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்நிற்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

இதுபோன்ற கோழைத்தனமான செயல்களால் ஐக்கிய மக்கள் சக்தியின் மக்கள் சார்ந்த வேலைத்திட்டங்களை நிறுத்த முடியாது என்பதை குண்டர் குழுக்களுக்கு நாங்கள் கூறிக்கொள்கிறோம். இன்று மக்களை வாட்டி வதைக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் பதில் இல்லை என்பதையே இவ்வாறான சம்பவங்களில் இருந்து தெளிவாகின்றது.

மக்கள் மீதான அடக்குமுறை, ஊடக அடக்குமுறை, சமூக ஊடக அடக்குமுறை, தொழிற்சங்கங்கள் மீதான அடக்குமுறை, ஆர்ப்பாட்டங்களை முடக்குவதற்கான அடக்குமுறைகளிலிருந்து ஜனநாயக அரசியல் கட்சிகளின் அடக்குமுறைக்கு அரசாங்கம் தமது இலக்குகளை மாற்றுவதன் ஊடாக வரப்போகும் ஆபத்துக்கு எதிராக மக்களைத் ஒன்று திரட்டும் போராட்டம் மிக வேகமாக முன்னெடுக்கப்படும் என்பதை வலியுறுத்தி கூறிக்கொள்கிறோம். இதற்காக அனைத்து மக்கள் சார்ந்த அமைப்புகளையும் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

### 60 வீதமான...

சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளதுடன் 60வீதமான மருந்துகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு நிலவுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மருந்துகளை இறக்குமதி செய்யும் திட்டம் இல்லையென்றால், பிரச்சினையை மறைக்காமல், பொதுமக்களின் பாதுகாப்புக்காக மருந்துகளுக்கான மனிதாபிமான உதவியைப் பெற விண்ணப்பம் செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் மிகப்பெரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த எத்தியோப்பியா, சோமாலியா, வடகொரியா, உக்ரைன் போன்ற நாடுகளில் கூட மருந்துகள் இல்லாத நிலைமை ஏற்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் மருந்தகங்களுக்கு மருந்துகளை வழங்கும் களஞ்சியங்களில் இதுவரை 60 வீதமானவை முடிடைந்துள்ளன. மீதமுள்ளவை 4 முதல் 6 வாரங்களில் முடிவடைந்துவிடும் நிலைமை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினாலேயே இந்த நிலைமை உருவாக்கப்பட்டுள்ளதுடன், ஔடதங்களின் ஏகபோக உரிமையை பயன்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்தலில் காணப்படுகின்ற மாஃபியாவே இந்த தாமதங்களுக்கு காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பிரதமரின் கூற்று...

முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

நீதிமன்ற வளாகத்தில் நேற்று (07) ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடி குறிப்பாக, அந்நிய செலாவணி பற்றாக்குறையால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தே நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் தெரிவித்தோம். இதனால் எங்களை அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கியதால் அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும் என அரசாங்கம் எண்ணியுள்ளது. அவ்வாறு பெற்றுக்கொள்ள முடிந்தால் நாட்டில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது.

மார்ச் 05ஆம் திகதிக்கு பின்னர் மின்வெட்டு இருக்காது என அரசாங்கம் அறிவித்துள்ளபோதிலும் மின்வெட்டுக்கான அறிவிப்புகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. அதேபோன்று, தற்போது நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடும் நிலவுகின்றது. எதிர்கால நிலைமைகள் குறித்து ஆராயாது, உரிய நேரத்தில் உரிய தீர்மானங்கள் எடுக்காதமையே தற்போதைய நெருக்கடிகளுக்கு முக்கிய காரணமாகும்.

மேலும், இந்த நெருக்கடியை அதிகரிப்பதற்கு எதிர்பார்த்திருக்கும் நிதி அமைச்சர் இருப்பதும் இதற்கு காரணம். நெருக்கடியை மேலும் அதிகரித்து, நாட்டை சர்வதேசங்கள் ஆக்கிரமிப்பதற்கு இடமளிக்கும் வகையில் செயற்படுகின்றார். இதனை நாங்கள் அறிந்தும் அறியாதவர்களை போல இருப்பதற்கு முடியாது. அதனாலேயே இதனை நாங்கள் நாட்டுக்கு வெளிப்படுத்தினோம். இதற்கு பிரதிபலன் எங்களுடைய அமைச்சுப் பதவி பறிப்பு என்றால் அதற்கு நாங்கள் கவலையடைய மாட்டோம்.

இதேவேளை, பொறுப்பற்றவகையிலும் மக்களை பாதிப்புக்குள்ளாக்கும் வகையிலும் கருத்து தெரிவித்தமையினாலேயே நாங்கள் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டதாக பிரதமர் மட்டுமல்ல வேறு யாரு கூறினாலும் அது முட்டாள்தனமான கருத்தாகும்.

இரு நாட்களுக்கே எரிபொருள் இருக்கின்றது எனக் கூறியதால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படவில்லை. அவ்வாறாயின், எதிர்வரும் வாரத்துக்குள் எரிபொருள் தட்டுப்பாட்டை நூறு வீதம் கட்டுப்படுத்தி காட்டுங்கள்.

எரிபொருள், எரிவாயு இறக்குமதிக்கு தேவையான கடனுக்கான கடிதத்தை வழங்க முடியாவிட்டால் நாட்டில் எவ்வாறு எரிபொருள் மற்றும் எரிவாயு கையிருப்பில் இருக்கும். எனவே, நாட்டில் டொலர் தட்டுப்பாடே நிலவுகின்றது. இதனை இல்லையென யாரும் கூற முடியாது – என்றார்.

### சபையில் விமல்...

நாடாளுமன்ற அமர்வில் விசேட உரையொன்றை ஆற்றவுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் இன்று (08) விசேட சந்திப்பொன்றும் இடம்பெறவுள்ளது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு நிதி அமைச்சரின் பொறுப்பற்ற செயற்பாடுகளே காரணம் எனக் கூறி கடந்த 02ஆம் திகதி நடத்தப்பட்ட மாநாட்டில், அரசாங்கத்தை விமர்சித்த குற்றச்சாட்டில் விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர்.

இதனையடுத்து, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகளும் இன்று (08) சுயாதீனமாக செயற்படுவது குறித்து பல்வேறு பேச்சுவார்த்தைகளை நடத்திவருகின்றன. இதனிடையே, பதவி நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச இன்றைய நாடாளுமன்ற அமர்வின்போது, விசேட உரை ஒன்றை ஆற்றவுள்ளதாக அறிய முடிந்தது.

இந்த அறிவிப்பில் தங்களுடைய எதிர்கால செயற்பாடுகள் மற்றும் பதவி நீக்கப்பட்டது குறித்து கருத்து தெரிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், இன்றைய சபை அமர்வில் சுயாதீனமாக செயற்படுவது குறித்து முக்கிய தீர்மானம் ஒன்றை எடுக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கிடையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். அதன்படி, இன்று பிற்பகல் 04 மணிக்கு இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக 10 யோசனைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்திடம் முன்வைத்திருந்தது. இந்த யோசனை முன்வைக்கப்பட்டு ஒரு மாதத்துக்கு பின்னரே ஜனாதிபதி இந்த சந்திப்புக்கு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வீதி விளக்குகளை...

நேற்று (07) அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் மின் உற்பத்தில் 30 வீதத்துக்கும் அதிகமான பங்கை நீர் மின்உற்பத்தி நிலையங்களே வகிக்கின்றன. ஆனால், தற்போது நாட்டில் மழை வீழ்ச்சி இல்லாத காரணத்தினால் நீர் மின் உற்பத்தி நிலையங்கள் இயங்காதுள்ளன. இந்த பற்றாக்குறையை எரிபொருளில் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்கள் ஊடாக உற்பத்தி செய்து தேசியக் கட்டமைப்புக்கு இணைந்துகொள்வதே ஒரே மாற்றுவழியாகும். எனினும், இந்த மின் உற்பத்திகளுக்காக நாங்கள் அதிக செலவுகளை தாங்கிக் கொள்ள வேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே.

இதேவேளை, உலக சந்தையில் தற்போது வரை எரிபொருளின் விலை அதிகரித்துள்ள நிலையில், இந்த விலை அதிகரிப்பானது தொடர்ந்தும் அதிகரிக்கலாம் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது. நாட்டின் அந்நிய செலாவணி அடிமட்டத்தில் இருப்பதால் எங்களுடைய நிலைமை மேலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை நாங்கள் கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால் மின்சாரத்தை நாங்கள் கட்டுப்பாடுகளுடன் பயன்படுத்துவதே இதற்கான ஒரே மாற்றுவழியாகும். எனவே, நேற்று (07) முதல் 31ஆம் திகதி வரை அனைத்து பிரதேசங்களிலுமுள்ள வீதி விளக்குகளை அணைத்து வைக்குமாறு வலியுறுத்தப்படுகின்றீர்கள்.

மேலும், மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மின்சாரத்தை வரையறுக்கப்பட்ட வகையில் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் இருந்தால் அதனையும் நடைமுறைப் படுத்துமாறும் வலியுறுத்துகின்றோம் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மசகு எண்ணெயின்...

சர்வதேச சந்தையில் 14ஆண்டுகளுக்கு பிறகு இவ்வாறான விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ரஷ்யா- உக்ரைன் நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமையே இதற்குக் காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ரஷ்யாவிலிருந்து மேற்குலக நாடுகளுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படாத காரணத்தினால் சர்வதேச சந்தையில் விலை அதிகரித்துள்ளது.

ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெய்யை தடைசெய்வதற்கான பேச்சுவார்த்தைகளில் நேட்டோ அமைப்பு நாடுகளுடன் அமெரிக்கா ஈடுபட்டுவருகிறது. ஆயினும், பெரும்பாலான நாடுகளுக்கான மசகு எண்ணெய் ஏற்றுமதியை ரஷ்யா ஏற்கனவே நிறுத்தியுள்ளது.

இந்த நிலைமை தொடருமானால் எதிர்வரும் வாரங்களில் 05 மில்லியன் எண்ணெய் பீர்ப்பாய்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் அதன் விலை 200 டொலர்கள் வரை உயரும் என அமெரிக்க வங்கி எதிர்வு கூறியுள்ளது.

### எகிறியது...

பண வீக்கத்தின் சடுதியான அதிகரிப்புக்கு இதுவே முக்கிய காரணமாகும்.

“பணவீக்கம் வழமையானதை விட அதிகரித்துள்ளது. ஒற்றை இலக்கத்தில் இருந்த பணவீக்கம் இரட்டை நிலைமையை அடைந்துள்ளமை குறித்து நாம் கவலையடைகிறோம். எனினும் பொருட்களின் விலைகளில் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்வது எங்களுடைய பொறுப்பாகும்” என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், பணவீக்கத்தை கட்டுப்படுத்த முடியாததால் பொருட்களின் விலை அதிகரிப்பையும் கட்டுப்படுத்த முடியாத சூழல் உருவாகியுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

### நெதுங்கமுவ ராஜா...

2005ஆம் ஆண்டு முதல் கடந்த வருடம் வரையில், கண்டி வரலாற்று சிறப்பு மிக்க தலதா மாளிகை எசல பெரஹெர இறுதி நிகழ்வுகளின் போதும் அநேகமான ஊர்வலங்களில் ஸ்ரீ தலதா புனித கடமைகளை நெதுங்கமுவ ராஜா நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதற்கமைய, இந்த குறுகிய காலப்பகுதியில் நான்கு சந்தர்ப்பங்களைத் தவிர 13 வருடங்கள் முழுவதும், நெதுங்கமுவ ராஜா இறுதி பெரஹெராக்களில் முக்கிய பங்காற்றியிருந்தது.

1953 ஆம் ஆண்டு இந்தியாவின் மைசூர் மாநிலத்தை பிறப்பிடமாகக் கொண்ட இந்த யானை கடந்த காலங்களில் கம்பஹா ஹர்ஷ தம்ம விஜய என்பவரின் பராமரிப்பில் வாழ்ந்து வந்தது.

ஆசியாவிலுள்ள மிகப்பெரிய யானையாக நெதுங்கமுவ ராஜா கருதப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

இந்நிலையில், தலதா மாளிகையின் புனித கடமைகளில் ஈடுபட்டு வந்தநிலையில் திடீரென உயிரிழந்த நெதுங்கமுவ ராஜாவை தேசிய மரபுரிமையாக பிரகடனப்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

புத்த சாசன, சமய மற்றும் கலாசார நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தனவுக்கு இதுதொடர்பான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்வதற்காக நெதுங்கமுவ ராஜாவின் உடலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். இதற்கமைய தேசிய அருங்காட்சியகத்தின் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று கம்பஹா வெலிவேரிய, நெதுங்கமுவ பிரதேசத்துக்குச் சென்றுள்ளது.

வீடியோவைக் காண...

### ஈஸ்டர் தாக்குதல்...

கிடைக்கப்பெறாமையானது, அடிப்படை மனித உரிமை மீறலாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை பேரவையின் 49ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. பேரவையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 14 வெளிநாடுகளைச் சேர்ந்த 47 பேர், 82 சிறுவர்கள் உள்ளிட்ட 269 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 500இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தார்கள்.

இந்த மிகப்பெரிய படுகொலையின் பின்னணியில் முற்றிலும் ஒருசில இஸ்லாமிய தீவிரவாதிகள் இருப்பது முதல்பார்வையில் புலனாகிறது. எனினும், இது பாரிய அரசியல் சதியின் ஒருபகுதியென்பது அடுத்தகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நாமும் சிவில் அமைப்புகளும் பலமுறை கோரிக்கை விடுத்தபோதிலும் தற்போதைய அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கவில்லை. இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக் கொண்டுவருவதற்கும் தொடர்ந்து நீதியை நிலைநாட்டுவதற்கும் பதிலாக நியாயத்துக்காக கோரிக்கை விடுப்பவர்கள் மீது துன்புறுத்தல்களும் மிரட்டல்களும் இடம்பெறுகின்றன.

இதன் விளைவாக இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்று மூன்று ஆண்டுகளாகின்றவேளையில் உண்மையை அறிந்துகொள்ள முடியாதவர்களாக இருளுக்குள் தள்ளப்பட்டிருக்கிறோம்.

இது பாதிக்கப்பட்டோரின் அடிப்படை உரிமையை மீறும் நடவடிக்கை என்பதால் ஐ.நா. பேரவையின் கடந்த அமர்வில் உறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம் இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய ஆதாரங்களைத் திரட்டுவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் அதன் உறுப்பு நாடுகளும் உதவிசெய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# வங்கித்துறையின் முன்னோடியினால் மகளிருக்காக அறிமுகப்படுத்தப்படும் 'DFCC ஆலோக்கா'



திட்டமிடலில் மிகுந்த ஆற்றல்மிக்க எமது பெண்களுக்காக பல்வேறு வாய்ப்புகளை வழங்க DFCC வங்கி தயாராகவுள்ளது. இவ்விடயம் தொடர்பாகவும், DFCC வங்கி அறிமுகப்படுத்திய சேமிப்பு மற்றும் நிதிச் சேவைகள் பற்றி பேசவும் நாம் DFCC வங்கியின் சிரேஷ்ட உப தலைவர் (நுகர்வோர் வங்கியியல் மற்றும் சிறிய நடுத்தர நிதிச் சேவை) ஆசிறி இத்தமல்கொடவை தொடர்பு கொண்டோம்.

### Q DFCC வங்கி தனித்துவமான வங்கியாக சிறப்பு பெற்று எவ்வாறு திகழ்கின்றது?

ஆரம்பத்தில் DFCC வங்கி அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி பங்களிப்பினை வழங்குகின்றமையை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டது. இலங்கையில் 66 ஆண்டுகால அனுபவத்தினை தக்கவைத்துக்கொண்டு தற்காலத்தில் அனைத்துவிதமான நிதிச் சேவைகளை வழங்குகின்ற வணிக வங்கியாக DFCC வங்கி செயற்படுகின்றது. தற்போது அனைவருக்கும் ஏற்ற அனைத்துவிதமான நிதி சம்பந்தப்பட்ட சேவைகளையும் சேமிப்புக்கான வசதிகளையும் வழங்கிக் கொண்டு பிறந்த குழந்தைமுதல் சிரேஷ்ட பிரஜைகள்வரையும், வியாபார தொழில்முயற்சியாளர்கள்முதல் பெருநிறுவனங்கள்வரையும் பல்வேறு தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நிதிச் சேவைகளில் வழிகாட்டும் வங்கியாக எமது வங்கி திகழ்கின்றது.

### Q மகளிர் தினத்திற்காக DFCC வங்கி எவ்வாறான ஏற்பாடுகளை செய்துள்ளது?

அண்மையில் 'DFCC ஆலோக்கா' பெண்களுக்காக மட்டும் விசேடமாக நலன்கள்கொண்ட சேமிப்பு கணக்கு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். குறிப்பாக, இலங்கைப் பெண்களை முதன்மைப்படுத்தி அவர்களின் அபிப்பிராயங்களை புதிய நிதி மற்றும் நிதியற்ற தீர்வுகளினூடாக பலப்படுத்தி முன்னோக்கி அழைத்துச்செல்லும் புதியதோர் ஆரம்பமாக இதனை குறிப்பிட முடியும். மகளிர் தினத்தை முன்னிட்டு எமது கிளைக் காரியாலய வலையமைப்புகள் முழுவதும் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக எதிர்வரும் மகளிர் தினத்தை முன்னிட்டு ஆலோக்கா கணக்கினை ஆரம்பிக்கும்போது விசேட நலன்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விளம்பரத்துடன் உள்ள QR கோட்ஐ உங்கள் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியினூடாக ஸ்கேன் செய்து தேவையான விபரங்களை பதிவுசெய்ய வேண்டும். இவ்வாறு விபரங்களை வழங்கும் முதல் 100 பேருக்கு வங்கியினால் ரூ.1000 அவர்கள் ஆரம்பிக்கும் 'DFCC ஆலோக்கா' வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

அதேபோன்று எதிர்வரும் பெண்கள் தினத்தை முன்னிட்டு விழாவொன்றும் எமது DFCC வங்கி தலைமை காரியாலயத்தில் அன்றைய தினம் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதுடன், எமது DFCC You Tube ஊடாகவும் Faceebook பக்கத்தினூடாகவும் இந்நிகழ்வில் நேரடியாக உங்கள் அனைவரையும் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

### Q DFCC வங்கியின் புதிய அறிமுகமான 'DFCC ஆலோக்கா' பற்றி மேலதிக விபரங்களைத் தர முடியுமா?

தனிநபர் கடன்,வீட்டுக்கடன் மற்றும் விசேட வட்டி விகிதங்களுக்கு உரித்தாகுதல், குறிப்பாக கடன் விண்ணப்பத்தின்போது திட்டமிடல் கட்டணத்திற்கான விசேட கட்டணக் குறைப்புகள், DFCC தங்கவரம் அடகு சேவைக்கான விசேட வட்டி விகிதம், ஆரம்ப மற்றும் முதல் வருடத்திற்கான வருடாந்த கட்டணமற்ற கிரடிட் கார்ட் அட்டை, ரூ. 25,000இற்கு அதிக கிரடிட் கார்ட் கொடுக்கல் வாங்கலுக்காக வட்டியற்ற 6 மாதங்கள் இலகு கொடுப்பனவு திட்டங்கள், அதிகபட்சம் ரூ. ஒரு மில்லியன் வரையிலான சேமிப்புக்கு ஆயுள் காப்புறுதியை பெற முடிதல் ஆகியன 'DFCC ஆலோக்கா'வினால் கிடைக்கும் கவர்ச்சிகரமான சிறப்பு நலன்களுக்குள் அடங்கும்.

இவ்வாறான நலன்களைப் பெறுவதற்கு ஆகக்குறைந்தது ரூ.1000 ஐ வைப்பிலிடுவதனூடாக 'DFCC ஆலோக்கா' கணக்கு ஒன்றை ஆரம்பிக்க முடியும். உங்கள் சேமிப்புக்கு 4.25% வரையிலான கவர்ச்சிகரமான வட்டி விகிதம் வழங்கப்படும். 'DFCC ஆலோக்கா' சேமிப்பு கணக்கின் உரிமையாளராகும் உங்கள் வாழ்வின் முக்கியமான தருணங்களை கடக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அந்த மகிழ்ச்சியான பொழுதுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள சிறப்பு அன்பளிப்பு சான்றிதழ்கள் உங்களுக்காக தயாராகவுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியது என்னவெனில், நீங்கள் அந்த சிறப்பு வாய்ந்த தருணங்களை 03 மாதங்களுக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும் என்பதுடன் உரிய சேமிப்புத் தொகையை தக்கவைத்துக்கொள்வது மட்டுமே அவசியம்.

### Q குறிப்பாக, பெண்கள் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்க எவ்வாறான பங்களிப்பினை DFCC வங்கி வழக்கவுள்ளது?

ஆம். உண்மையில் 'DFCC ஆலோக்கா' கணக்கினை ஆரம்பிக்கும் உங்களுக்கு வங்கி மிகைப்பற்று / வங்கி பிணை, நீண்டகால அல்லது குறுகியகால கடன் வசதிகள் ஆகியவற்றை நாங்கள் வழங்கவுள்ளோம். கடன் வசதிக்காக சலுகை அடிப்படையிலான வட்டி விகிதம் பெண்களாகிய உங்களுக்காக வழங்கப்படும். சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வர்த்தக ரீதியிலான உதவிகள் அளிக்கப்படும். ஆரம்பகாலத்தில் பெரும்பாலும் பெண் தொழில்முயற்சியாளர்களை விட ஆண் தொழில்முயற்சியாளர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோதிலும் கடந்த 2, 3 ஆண்டு காலப்பகுதியில் பெண் தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கையில் வளர்ச்சியினைக் காண முடிகின்றது.

கொவிட் நிலைமை பொதுவான விடயமாக மாறிய பின்பு மீண்டும் ஆலோசனை சேவைகளை இலங்கை முழுவதும் நடத்துவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

### Q இறுதியாக DFCC வங்கியின் மீது நம்பிக்கை வைத்துள்ள கணக்கு வைப்பாளர்கள் மற்றும் DFCC வங்கியின் வாடிக்கையாளர்களாக விரும்புபவர்களுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?

DFCC வங்கியுடன் தொடர்புகொண்டு 'DFCC ஆலோக்கா' கணக்கினை ஆரம்பிக்க முடியும். அதுமட்டுமல்லாது சிறுவர்கள், சிரேஷ்ட பிரஜைகள், இளைஞர்கள், யுவதிகள் ஆகிய அனைத்து தரப்பினருக்கும் தேவையான அனைத்துவிதமான நிதி சேவைகள் மற்றும் சேமிப்பு கணக்குகளையும் நாம் உங்களுக்கு வழங்குகின்றோம். வாழ்வில் எதிர்பாராத தருணங்களை எதிர்கொள்வதற்கு சிறந்த முறையில் தயாராகிக்கொள்வதற்காகவும் தமது எதிர்கால இலக்குகளை அடையவும் முதலீடுகளில் ஈடுபடவும் DFCC வங்கி உங்களுக்கு வழிகாட்ட எப்பொழுதும் தயாராகவே உள்ளது.




DFCC ஆலோக்கா

தேசத்தின் முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் அனைத்து மகளிர்களுக்கும்,
சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவிக்கும் DFCC வங்கி அவர்களின் அளப்பரிய சேவையை அடையாளப்படுத்தும் முகமாக அன்பளிப்பொன்றையும் வழங்குகின்றது.

விஷேட வட்டி விகிதங்கள் மற்றும் நன்மைகளுடன் மகளிர்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட DFCC ஆலோக்கா கணக்கில் இணைவதற்காக அனைவரையும் வரவேற்கின்றோம்.

புதிதாக ஆரம்பிக்கப்படும் முதல் 100 கணக்குகளுக்கு, முதல் வைப்பாக ரூ.1000/- ஐ DFCC வங்கி வழங்கவுள்ளது.

நீங்கள் செய்யவேண்டியது,

01. உங்கள் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்தி மேல்காணும் QR Code ஐ ஸ்கேன் செய்யுங்கள்.
02. அதில் கோரப்படும் விபரங்களை வழங்கிடுங்கள்.
03. உங்கள் அருகாமையில் உள்ள DFCC வங்கிக் கிளையிலிருந்து உங்கள் விபரங்களை உறுதி செய்வதற்கான அழைப்பு கிடைக்கும் வரை காத்திருந்து ஆலோக்கா கணக்கை செயற்படுத்திடுங்கள்.

ரூ.1,000



DFCC ஆலோக்கா, உங்கள் வாழ்வின் உன்னதமானதோர் உறவு

மேலதிக விபரங்களுக்கு, 0112 35 00 55 ஊடாக ஆலோக்கா துரித அழைப்பு மையத்தை தொடர்புகொள்ளுங்கள்

*விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

0112 350000 www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் பஸ்கள் மற்றும் வேன்களுக்கு எரிபொருள் வழங்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படாவிட்டால் பாரிய சவால்களை சந்திக்க நேரிடும் - என அகில இலங்கை பாடசாலை சிறுவர் போக்குவரத்து சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்கத்திடம் சரியான வேலைத்திட்டம் இல்லை என சங்கத்தின் தலைவரான மல்சிறி டி சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது டீசல் தட்டுப்பாடு காரணமாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகவும், தாங்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்த அவர், இது தொடர்பில் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளதாகவும் எனினும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சலுகைகளை வழங்கத் தவறியதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை போக்குவரத்து சபையின் களஞ்சியசாலைகள் அல்லது அரசாங்கத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக டீசலை வழங்க பல கோரிக்கைகளை விடுத்தும் அரசாங்கம் தவறியதாக சுட்டிக்காட்டிய அவர், பாடசாலை போக்குவரத்துக்கு டீசல் வழங்கப்படாவிட்டால் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்வதில் சிரமங்களை எதிர்நோக்க நேரிடும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை 139 அமெரிக்க டொலர்கள் வரை உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 20 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 2008ஆம் ஆண்டுக்குப் பின்னர் 13 வருடங்களில் இவ்வாறு கச்சா எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது.

இதற்கிடையில் தற்போது சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் நாட்டின் பிரதான நகரங்களிலுள்ள 60 சதவீதமான சிற்றுண்டிச்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

சுமார் 1,500 சிற்றுண்டிச்சாலைகள் கொழும்பு மற்றும் அதனை அண்மித்த புறநகர் பகுதிகளில் மூடப்பட்டுள்ளன. அத்துடன், அரச வைத்தியசாலைகளிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளை மூடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மார்ச் 08ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# நீங்குமா சாபக்கேடு?

மேலும், மின் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படுகின்றமையால் குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்படவேண்டிய உணவுகளிலும் பாதிப்பு ஏற்படுகின்றது. இதனால் சிற்றுண்டிச்சாலை துறைசார்ந்தோர் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர் .

மறுபுறம், கல்வி அமைச்சினால் தொகுதிவாரியாக மாணவர்களை மீள அழைக்கும் நடவடிக்கைகளால் நேற்று பாடசாலைகளின் வருகைப்பதிவு வெகுவாகக் குறைந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வகுப்புகளை சீரற்ற முறையில் நடத்தினால் மூன்றாம் தவணைக்கு மாணவர்களைத் தயார்படுத்துவது நடைமுறைச் செயல் அல்ல என சங்கத்தின் பிரதம செயலாளரான ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளரினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையினால் ஒட்டுமொத்த பாடசாலைகளும் சிக்கலை எதிர்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முழுமையாக ஆய்வு செய்யாமல் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதால் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்சார நெருக்கடியால் கல்வித்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலை போக்குவரத்துச் சேவைகளும் எரிபொருளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு ஒருபுறம், மின்வெட்டு மறுபுறம், சமையல் எரிவாயு பற்றாக்குறை இன்னொருபுறமென மக்கள் படாதபாடு படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. மின்வெட்டு மார்ச் 5ஆம் திகதிக்குப் பின்னர் இருக்காதென அரசாங்கம் திட்டவட்டமாக கூறியது. ஆனால், தொடர் மின்வெட்டு அமுலில் இருக்கிறது. சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு இல்லையென முன்னர் கூறியது. ஆனாலும் நிலைமை சீராகவில்லை. எரிபொருள் நெருக்கடி திட்டமிட்டு உருவாக்கப்பட்டதென கூறுகிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அரசுக்குள் ஒரு குழு அப்படி திட்டமிட்டு முழு நாட்டையும் ஸ்தம்பிக்க வைக்குமானால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் இருப்பதாக கூறிக்கொள்ளும் ஆட்சியாளர்கள் மௌன விரதம் இருந்தார்களா என்றே கேட்கத் தோன்றுகிறது.

அரசாங்கத்திடம் ஒரு திட்டமில்லை. அரசின் மூத்த அமைச்சர்களுக்கு ராஜபக்ஷ சகோதரர்களை புகழ்வதற்கே நேரம் சரியாக இருக்கிறது. நாட்டின் நிலைமையோ அல்லது மக்களின் நிலைமையோ அவர்களுக்கு பெரிதில்லை. இந்த எரிபொருள் வரிசைகளில் எங்கேயாவது சொகுசு வாகனங்கள் நீண்டநேரம் காத்திருந்தனவா? அல்லது சமையல் எரிவாயு சிலிண்டர்களை பெற அரசியல்வாதிகள் எவராவது வரிசையில் நிற்பதை காணமுடிந்ததா? இல்லை. ஏனெனில், அவர்கள் தங்களுக்கு இருக்கும் செல்வாக்கை வைத்து பிழைப்பை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இதில் பாதிக்கப்பட்டு வீதியில் நிற்பது நடுத்தர வர்க்கத்திற்கு கீழான நாட்டு மக்கள்தான்.

ஜனாதிபதியின் இல்லத்திற்கு முன்னர் ஆர்ப்பாட்டம் செய்த ஹிருனிக்காவின் வீட்டுக்கு முன்னால் சென்று சண்டித்தனம் காட்டுவதும், ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்திற்கு முட்டைகளை வீசுவதும் என்ற வகையிலான தங்களுக்கு தெரிந்த வேலைகளையே ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் செய்துகொண்டிருக்கின்றனர், மக்கள் நலனைத் தவிர. இந்த சாபக்கேடு எப்போது நீங்கும் ?

# பெண்கள் குறித்தான எதிர்பார்ப்பும் மனப்பதிவும் தகர்க்கப்பட வேண்டும்






**2022ஆம் வருடத்துக்கான சர்வதேச பெண்கள் தினத்தின் கருப்பொருள் "பேண்தகு தன்மைமிக்க நாளைக்கான இன்றைய பால்நிலை சமத்துவம்" என்பதாகும். இக்கருப்பொருளானது, உலகளாவிய ரீதியில் அனைவருக்கும் பேண்தகு எதிர்காலம் ஒன்றை கட்டியெழுப்பும் நோக்கில் காலநிலை மாற்றத்துக்கு பழகிக்கொள்ளல், அதனை தடுத்தல் மற்றும் எதிர்வினையாற்றுவதில் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் வழங்கும் பங்களிப்புக்கு அங்கீகாரம் அளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.**

இலங்கையில் பல்துறை சார்ந்த பெண்களின் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் பால்நிலை சமத்துவத்துக்காகவும் குரல் எழுப்புவதற்காக நாடளாவிய ரீதியில் அணித்திரளும் பெண்களில் மலையகப் பெண்கள் விசேடத்துவமிக்கவர்களாக காணப்படுகின்றனர். ஏனெனில், மலையகப் பெண்களது அரசியல், சமூக, பொருளாதார, கலாசார விடயங்கள் முற்றிலும் மாறுபட்டதாகவும் மறுக்கப்பட்டதாகவும் இருப்பது இன்னும் வெளியுலகத்துக்கு வெளிச்சம் போட்டு காட்டப்படாததான திரைமறைவான விடயமாகவே இருந்து வருகின்றது. கடந்த காலங்களில் பெருந்தோட்டத் தொழில் துறையில் தொழில் புரியும் பெண்களின் பிரச்சினைகளை மாத்திரமே பேசி வந்ததுடன், அதற்கப்பால் வீட்டுப் பணியாளர்கள், ஆடைத் தொழிற்சாலை, கடை மற்றும் காரியாலயங்களில் பணிபுரியும் பெண்கள், புலம்பெயர் தொழிலாளர்கள், நுண்நிதிக் கடனால் பாதிக்கப்பட்ட பெண்கள், முறைசாரா தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் உட்பட இல்லத்தரசிகளாக இருப்பவர்கள் போன்ற பல்வகை துறைசார்ந்த பெண்கள் இக்கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படுகின்றனர் என்ற உண்மையை வெளியேகொண்டு வருதல் முக்கியமாகின்றது.

பொதுவாக மலையகப் பெண்கள் சுகாதாரம், பாலியல் துஷ்பிரயோகம், வீட்டு வன்முறைகள், தொழிற் பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு, தொழில் சுரண்டல் போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதோடு உழைப்புக்கேற்ற ஊதியத்தினை பெற்றுக்கொள்வதிலும் சாதாரணமாக கிராம மட்டத்தில் காணப்படும் பெண்களுக்கான அமைப்புகள் இங்கு இன்மை மற்றும் மொழிசார்ந்த பிரச்சினைகள் போன்றவற்றுக்கு (அரச நிறுவனங்களில் தமது மொழியில் கடமைகளை முன்னெடுக்க முடியாமை உதாரணமாக பொலிஸ், வைத்தியசாலை, பிரதேச செயலாளர் காரியாலயங்கள்) தொடர்ச்சியாக முகங்கொடுத்துவருவது மேலும் உக்கிரமடைந்து வரும் பிரச்சினைகளாகும். அத்துடன், கொவிட்-19இற்குப் பின்னர் நிலவும் சுகாதார மற்றும் பொருளாதார நெருக்கடியும் இவர்களின் அன்றாட வாழ்க்கையின் அசாதாரண நிலையை மேலும் மோசமானதான சூழ்நிலைக்கு இட்டுச்செல்லும் சூனியமாக அமைந்துவிட்டது.

இவ்வாறானதொரு நிலையில், முழு மலையக சமூகமும் இருப்பதற்கான பிரதான காரணம் இருநூறு வருடங்கள் சென்றும் மலையகத் பெருந்தோட்ட சமூகத்துக்கு கௌரவமான இலங்கைப் பிரஜைகள் என்ற உரிமையை இதுவரை அவர்களால் வென்றெடுக்க முடியவில்லை. முடிவற்ற சமத்துவமின்மையும் மனித உரிமை மீறல்களும் தொடர்ந்தும் நடைபெறுகின்றன. இவர்களது சந்ததியினர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வெளிநாட்டவர்கள் என்றே கருதப்படுகின்றனர். ஆனால், இவர்கள் வாக்களிக்கும் இயந்திரங்களாகவே உள்ளனர். எனினும், ஏனைய சமூகத்தினருடன் ஒப்பிடும்போது அவர்களுடனான சமநிலை இவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. இன்றும் இவர்கள் இந்நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கணிக்கப்படுகின்றனர். அதிலும் பெண்களின் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார பின்னடைவுகள் குறிப்பிட்டுக் கூறமுடியாதளவில் உள்ளதும் இக்காலகட்டத்திலுள்ள மிக முக்கியமான விடயங்களாகும். மலையக சமூகம் இவ்வாறானதொரு நிலைமைக்குத் தள்ளப்பட்டிருப்பது இந்நாட்டில் ஓர்அங்குல நிலத்துக்கேனும் உரிமைகோர முடியாத காரணத்தினாலேயே. ஆகையால் மலையக பெருந்தோட்டக் குடும்பங்களுக்கு நில உரிமையைப் பெற்றுக்கொடுத்தல் இலங்கை ஜனநாயகத்தின் பிரதான அம்சமாக அமைகின்றது. அந்தவகையில், இச்சமூகம்சார்ந்த அமைப்புகள் காணி உரிமையை பெற்றுக்கொள்வதற்கு பல்வேறுபட்ட முயற்சிகளை எடுத்துவருவது முக்கியமானதொன்றாகும். எனவே, புதியதொரு அரசியல்யாப்பை தயார்செய்யும்போது, இனங்களுக்கிடையே புரிந்துணர்வைக் கட்டியெழுப்பும்போது, வடக்கையும் தெற்கையும் ஒன்றிணைக்கும் போது மலையக சமூகத்துக்கு வாழ்வதற்கும் வாழ்வாதாரத்துக்குமான காணி உரிமைக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுப்பது போன்றன அடிப்படை ஜனநாயக செயற்பாடுகளில் ஒன்றாகும்.

தோட்டங்களில் அதிகமாக தொழில் செய்பவர்கள் பெண்கள், அதிக வருமானத்தை ஈட்டுபவர்கள் பெண்கள், அதிகமாக தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் வகிப்பது மற்றும் சந்தா செலுத்துவது என சகலதும் பெண்களாவர். அதேபோல் பொது நிகழ்வுகளுக்காக நன்கொடைகளும் இவர்களினாலேயே அதிகளவு வழங்கப்படுகின்றன. உதாரணமாக, தோட்டங்களில் அமைக்கப்பட்டுவரும் கோயில்கள், மரண நிதி சங்கங்கள் ஏனைய ஸ்தாபனங்களுக்கு இவர்களது பொருளாதார பங்களிப்பு இன்றியமையாதவொன்றாகும். அத்துடன், இந்நாட்டின் முதுகெலும்புக்கான தேசிய வருமானத்தில் பெருந்தோட்டத்துறை சுமார் 85 வருடங்களுக்கும் மேலாக பங்களிப்பு செய்துவந்ததுடன், இதில் பெண்களின் உழைப்பே மிக முக்கியமானதொன்றாகும். இருப்பினும், இவர்களுக்கு வழங்கப்படும் முன்னுரிமை, தலைமைத்துவப் பங்கீடு, சமவுரிமை என்பன விரல் விட்டு எண்ணக்கூடியதாகவுள்ளன. ஏனைய துரைசார் பெண் தொழிலாளர்கள் அனுபவிக்கும் உரிமைகள் பெருந்தோட்டத் தொழில்சார் பெண்களுக்கு மிகவும் குறைவானதாகவே காணப்படுகின்றது. அதாவது தொழிற்சார்ந்த உரிமைகள், வேலைத்தள சுகாதாரப் பாதுகாப்பு போன்ற விடயங்களில் பெருந்தோட்டப் பெண்கள் மிகவும் பின்தள்ளப்பட்டவர்களாக காணப்படுகின்றனர்.

இவைகளுடன் பெருந்தோட்டப் பெண்கள் குடும்ப வன்முறைகள், சமூக வன்முறைகள் போன்றவற்றுக்கும் பெரிதும் முகங்கொடுக்கும் அதேவேளை, கலாசார பின்னடைவையும் எதிர்நோக்கி வருவது இவர்களின் மற்றுமொரு வளர்ச்சிப்படியின் தடைகளாக அமைகின்றன. இவைகளு டன் இவர்களுக்கு கிடைக்கவேண்டிய அடிப்படை உரிமைகள்கூட சிலவேளைகளில் தட்டிப் பறிக்கப்படுகின்றன. ஆகவே, சமூக பொறுப்புவாய்ந்த நிறுவனங்களாக செயற்படும் அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், சமூக மற்றும் சமய/பொது நிறுவனங்கள் இவர்களில் அக்கறை செலுத்துவது காலத்தின் கட்டாயமாகும். அத்துடன், வெறுமனே தோட்டத் தொழிலாளர்கள் அல்லது சந்தா செலுத்து பவர்கள் என்றில்லாது சமூக கட்டமைப்பின் சரிபாதி பங்குதாரர்களாக இருப்பதை உறுதிசெய்யவேண்டும். இச்சமூகத்தைச் சேர்ந்த ஏனைய பெண்கள் தொழில் புரியும் தொழில் நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் தனிநபர் சாலைகள் பற்றியும் நாம் கவனம் செலுத்துவது அவசியமாகும். அந்தவகையில் பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த பெண்கள் ஈடுபாடு காட்டிவரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு, ஆடைத் தொழிற்சாலை, தனியார் நிறுவனங்கள், சிறு கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் சிறு முதலீட்டாளர்களில் தங்கியிருக்கும் பெண்களின் நிலைப்பாட்டிலும் அக்கறை காட்டவேண்டியது சமூகத்தின்பால் நாம் செலுத்தும் அக்கறையாகும்.

இதைவிட இன்று மலையகத்திலிருந்து வீட்டுப் பணிப்பெண்களாக வெளியிடங்களுக்குச் செல்லும் பெண்களின் நிலை மிகவும் மோசமானதாக காணப்படுகின்றது. இவர்கள் பற்றிய அண்மைக்கால செய்திகள் எம்மை மிகவும் சிந்திக்கவும் செயற்படவும் தூண்டுகின்றன. இவர்களுக்கு தொழில் உரிமைகள், தொழில் பாதுகாப்பு, சம்பளம், காப்புறுதி என்பன இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. மாறாக, சிறுமிகளை தொழிலுக்காக அமர்த்தி அவர்கள் மரணித்த சம்பவங்களும் இவ்வாறான சம்பவங்களுக்குப் பின்னால் தரகர்களின் செயற்பாடுகள் இருந்துள்ளதை யும் அவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளதையும் மறந்துவிட முடியாது. அத்துடன், இன்றுவரை வீட்டுப் பணியாளர்களை முறைசாரா தொழிலாளர்களாகவே கணிப்பிடுகின்றனர். சர்வதேச தொழில் ஸ்தாபனம் தனது 100ஆவது அமர்வில் வீட்டுப்பணியாளர்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கியுள்ளது. அன்றைய அச்சூழலில் இலங்கை அரசும் அதற்கு ஆதரவாக வாக்களித்திருக்கின்றது. ஆனாலும் இன்னும் இலங்கை அரசாங்கம் இவர்களை சட்ட ரீதியாக அங்கீகரிக்காத நிலை காணப்படுவது வீட்டுப் பணியாளர்களையும் சர்வதேச சட்டங்களையும் உதாசீனம் செய்வதாகவே காணமுடிகின்றது. அத்துடன், தொழில் அமைச்சு இதன்பால் கவனம் செலுத்துதலை இன்னும் விரைவுபடுத்தவில்லை.

முறைசாரா தொழிலாளர்களுடைய நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, அடிப்படை சம்பளம், தொழில் ஒப்பந்த நிர்ணயம், தொழில் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பான வேலைத்தள சூழல் என்பன இல்லாதவர்களாக காணப்படுகின்றனர். ஆகவே, இதன் விளைவு பாரதூரமானதாக வும் சமூகப் பிரச்சினைகளாகவும் உருவெடுத்துள்ளதுடன், இத்தொழிலில் ஈடுபடுகின்றவர்களில் அதிகமானோர் பெண்களாகவும் காணப்படுவது மற்றுமோர் முக்கிய விடயமாகும். முறைசாரா தொழிலாளர்களில் வீட்டுப் பணியாளர்கள் மாத்திரமன்றி பராமரிப்பு வேலை, விவசாயம், மீன்பிடி, வீட்டுத்தோட்டம் போன்ற தொழில்களில் ஈடுபடுபவர்களும் காணப்படுவது குறிப்பிடத்தக்க விடயம். இதனுடன் இன்று மலையகத்தில் உருவெடுத்துள்ள நுண்நிதிக் கடனால் பாதிக்கப்பட்ட பெண்களின் பிரச்சினைகள் மற்றும் அது சார்ந்த சமூக சிக்கல்கள், தற்கொலைகள், வன்முறைகள் என்பன பெரிதாக தலைதூக்கியுள்ள மற்றுமொரு பாரிய பிரச்சினையாகும். பெண்களுக்கான உரிமை சாசனம் 1840ஆம் ஆண்டளவில் லண்டனில் நடைபெற்ற அனைத்துலக அடிமைத்தனத்துக்கு எதிரான மாநாடு இடம் பெற்றபோது முதலாவது பெண்கள் உரிமை சாசனம் மும்மொழியப்பட்டதாக வரலாறு கூறினாலும் மலையக பெருந் தோட்ட துறைசார் மற்றும் ஏனைய துறை சார்ந்த மலையகப் பெண்கள் இன்னும் அடிப்படை உரிமை தொடர்பாகவும் அவர்களை இதில் விழிப்புணர்வு அடையச் செய்தலிலும் கவனம் செலுத்தாததோர் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில், சமூக நீரோட்டத்தில் எமது பெண்களின் பங்களிப்பை உறுதிசெய்வதற்கான வலுவான நடவடிக்கைகள் அத்தியாவசியமானவை. இதில் மற்றுமொரு பக்கத்தை மறந்துவிட முடியாது. அதுதான் ஜனநாயகத்தில் பங்குபற்றவும், பேரம் பேசவும், ஆண்களோடு அதிகார வெளியை பகிர்ந்துகொள்ளவும் எமது பெண்கள் வலுவான நிலையை அடைய வழியமைக்க வேண்டும். அதனடிப்படையில் பிரதேச சபைகளிலும், மாகாண சபைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் எந்தளவு என்பது சொல்லி தெரிந்து கொள்ளத் தேவையில்லை. மற்றும் நாடாளுமன்றத்தில் எமது பெண்களின் பங்குபற்றுதல் பூச்சியமாகவே காணப்படுகின்றது. இதைவிடவும் பெருந்தோட்டத்துறையில் 65 விகிதத்துக்கு மேல் பெண் தொழிலாளர்கள் வேலை செய்தாலும் அவர்களது அனைத்து செயற்பாடுகளையும் ஆண்கள் தீர்மானிக்கும் நிலை மாற்றமடையவில்லை என்பது நிதர்சனமான உண்மையாகும்.

அத்துடன், ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி சமூக மட்டத்திலான நிறுவனங்களில் அதாவது கூட்டுறவுச் சங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், சமய நிறுவனங்கள், மரண உதவிச் சங்கங்கள், இளைஞர் அமைப்புகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் என்பவற்றில் பெண்களின் உறுப்புரிமை எந்தளவு காணப்படுகின்றது என்பது முதலில் கவனிக்கப்படவேண்டியதாகும். இவ்விடயங்களுடன் சம்பந் தப்பட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியதுடன் அங்கு பால்நிலை, பால்நிலை பாகுபாடு, பால்நிலை சமத்துவம் என்பன பற்றிய வேலைத்திட்டங்களை சமயாசமயத்தில் கவனிக்கப்படுவதுடன், திட்டமிடப்பட்டுள்ள சகல வேலைத்திட்டங்களிலும் பால்நிலை சம்பந்தமான விடயம் காணப்படுகின்றதா என்பதை கண்காணித்தல் தற்போதைய நிலையில் அத்தியாவசியமாகின்றது. வெறுமனே குடும்பப் பொறுப்புகள் பெண்களுக்கு மட்டுமே உரித்தானதாகக் கருதப்படும் பாரம்பரியமான ஓர் எதிர் பார்ப்பும் மனப்பதிவும் ஆகும். எவ்விதமான கேள்விகளுக்கும் உட்படுத்தப்படாமல் அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிலை மாற்றியமைக்கப்பட்டு சமூக ரீதியிலான பங்குபற்றல் என்பது பெண்களுக்கு அத்தியாவசியமானது. இது பெண்களின் இயல்புக்கும், ஆற்றலுக்கும் முக்கியமானது என்பதை புரிந்து செயற்படவேண்டியது கட்டாயத் தேவையாகவுள்ளது. "ஏங்கல்ஸ்" குறிப்பிட்டதுபோல் பெண்கள் மீதான அடக்குமுறையானது உண்மையில் வர்க்க சமூகத்தின் விருத்தி நிலையுடன் தொடர்புபட்டதாகும். எனவே, மலையகத்தில் ஒடுக்கப்பட்ட பெண்களின் விடுதலைக்கான குரலாக உழைக்கும் பெண்கள் தினம் அவசியமானது என்பதே நிகழ்காலத்தின் தேவையாக உள்ளது. அதனை வலுப்பெறச் செய்வதற்காக அனைவரும் ஒன்றுதிரள்வது இத்தினத்துக்கான தேவையாகவும் உள்ளது.

**எஸ்.டி.கணேசலிங்கம்,**
**தலைவர்,**
**மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் (MPPLR)**
**பெருந்தோட்ட சமூக அபிவிருத்தி நிறுவனம் (SIDPS)**

## தவக்கால சிந்தனை

### உன் சகோதரரை உன் உள்ளத்தில் பகைக்காதே



மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்.

நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது பிற இனத்தவரைப்போல் பிதற்ற வேண்டாம். மிகுதியான சொற்களை அடுக்கிக்கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப்போல் இருக்க வேண்டாம். ஏனெனில், நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்.

விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல் மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல் எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். ஆமென்.

மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.

## இன்றைய நாளில்...

- 1618 – யோஹான்னஸ் கெப்லர் கோள்களின் இயக்கங்களுக்கான மூன்றாவது விதியைக் கண்டுபிடித்தார்.
- 1817 – நியூ யோர்க் பங்குச் சந்தை நிறுவன மயப்படுத்தப்பட்டது.
- 1910 – ரேமொன்டே டெ லாரோச் என்ற பிரான்சியர் வானோடிக்கான உரிமத்தைப் பெற்று, உலகின் முதலாவது பெண் விமானியானார்.
- 1911 – அனைத்துலக மகளிர் நாள் முதன் முதலாக டென்மார்க்கில் கொண்டாடப்பட்டது.

1920 – முதலாவது நவீன அரபு நாடு சிரிய அரபு இராச்சியம் உருவாக்கப்பட்டது.

1950 – சோவியத் ஒன்றியம் தன்னிடம் அணுகுண்டு இருப்பதாக அறிவித்தது.

## நக்கல் நமசிவாயம்

வாழ்க்கையில இப்போவெல்லாம் பெரிய ஆசைகள் இல்ல பாருங்கோ... வாகனத்துக்கு புல் டேங் டீசல், முழுசா நிரப்பின சமையல் சிலிண்டர் ரெண்டு இருந்தாலே திருப்தியா இருக்கும் வாழ்க்கை...



# இன்றைய ராசி பலன்

**08.03.2022 செவ்வாய்க்கிழமை மாசி 24**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: கார்த்திகை**
அ.கா. 5.54 - 09.03.2022 காலை 8.31 வரை

**யோகம்: வைதிருதி**
அ.கா. 12.01 - 09.03.2022 அதிகாலை 12.28 வரை

**திதி: பூர்வபட்ச ஷஷ்டி**
09.03.2022 அதிகாலை 12.31 வரை

**முற்கரணம்: கௌலவம்**
காலை 11.27 வரை

**பிற்கரணம்: தைதுலம்**
காலை 11.27 - 09.03.2022 அதிகாலை 12.31 வரை

**சுப நேரங்கள்**
காலை 10.52 - பி.ப 12.20

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
மாலை 3.22 - 4.52

**குளிகை காலம்**
பிற்பகல் 12.21 - 1.52

**எமகண்ட காலம்**
காலை 9.21 - 10.51

**துர் முகூர்த்தம்**
**காலை 8.45 - 9.33**
இரவு 11.09 - 11.57

லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** விலை மதிப்பு கூடிய பரிசுகள் கிடைக்கலாம். கடனாக கொடுத்த பணத்தின் வரவு உண்டாகலாம். மாணவர்களின் கல்வியில் சிறப்பு ஏற்படலாம். இல்லத்திலும் மகிழ்ச்சி நிலவும்.

**ரிஷபம்:** வணிக விரிவாக்கம் ஏற்படலாம். ஏற்றுமதி/இறக்குமதி சம்பந்தப்பட்ட வர்த்தக இலாபங்கள் கிடைக்கப் பெறலாம். பணிகளில் உற்சாகத்தால் பணித்திறன் மேம்படும். சமுதாயத்தில் மதிப்பு கிடைக்கலாம்.

**மிதுனம்:** அவசரமற்ற தூர பயணங்களை தவிர்ப்பது நல்லது. காலநிலை மாற்றத்தால் உடல்நலத்தில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். வேலைகளில் தடைகள் உண்டாகலாம். தன்னம்பிக்கை குறையலாம். இறைவணக்கம் தேவை.

**கடகம்:** மருத்துவம் சம்பந்தப்பட்ட தொழிலில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். செலவுகளில் பண இருப்பை மனதில் இருத்தி செய்வது நல்லது. காதலர்களுக்கு இனிமையான நாளாக அமையலாம்.

**சிம்மம்:** சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு நல்ல நாளாக அமையலாம். வணிகத்தில் இலாபங்கள் அதிகரிக்கலாம். வேலைத்தளங்களில் உங்களுக்கு கீழ் பணியாற்றுபவர்களுடன் அனுசரிப்பு தேவைப்படலாம். வாழ்க்கைத்துணையின் ஆலோசனை நன்மை தரலாம்.

**கன்னி:** தரகு சம்பந்தப்பட்ட வேலைகளில் வருவாய் மேம்படும். இல்லத்தில் சுப மங்கள நிகழ்வுகள் உண்டாகலாம். கோபத்தை தவிர்ப்பது நன்மை. வாழ்க்கைத்துணையின் உணர்வுகளில் அக்கறை தேவைப்படலாம்.
**சந்திராஷ்டமம்: சித்திரை நட்சத்திரம் பாதம் 1/2க்கு பிற்பகல் 12.31 வரை**

**துலாம்:** வேலைகளில் பணிச்சுமை அதிகரிக்கலாம். காலில் சிறிய வலி உண்டாகலாம். ஆடம்பர செலவுகளை தவிர்ப்பதிலும் கவனம் தேவைப்படலாம்.
**சந்திராஷ்டமம்: சித்திரை நட்சத்திரம் பாதம் 3/4க்கு பி.ப. 12.31 - 09.03.2022 அதிகாலை 1.50 வரை**

**விருச்சிகம்:** வணிகத்தில் பங்குதாரர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம். வழக்கு விடயங்களில் சாதகமான நிலை உண்டாகலாம். தொழில் விடயங்களில் சாதகமானநாளாக அமையலாம். தடைப்பட்ட வேலைகள்நிறைவேறதொடங்கும்.

**தனுசு:** பணிக்கான நேர்முக தேர்வுகளில் நல்ல நிலை உருவாகலாம். தொழிலில் விரிவாக்கம் இடம்பெறலாம். குடும்பத்தினருடன் இன்றைய நாள் நல்ல நாளாக அமையலாம்.

**மகரம்:** பிள்ளைகளுக்கு கல்வியில் அதிக ஈடுபாடு உண்டாகலாம் . இன்று சில நல்ல செயல்கள் உங்களால் செய்யப்படலாம். தொழிலில் சந்திப்பு ஏற்படலாம்.

**கும்பம் :** மின்னணு சாதனங்கள் சம்பந்தப்பட்ட வணிகத்தில் இலாபங்கள் அதிகரிக்கலாம். பணிகளில் உங்களால் மேலதிகாரிகளுக்கு மகிழ்ச்சி கிடைக்கலாம். வாகனம் வாங்கும் திட்டம் உருவாகலாம். செல்வாக்கு மிகுந்தவர்களின் சந்திப்பு உண்டாகலாம்.

**மீனம்:** வணிகத்தில் புதிய செயல்களில் கவனம் தேவைப்படலாம். பணிகளில் சக ஊழியர்களுடன் சகிப்புத்தன்மை தேவைப்படலாம். வரவேண்டிய பண வரவுகள் கிடைக்கலாம். வருவாய்க்கு தகுந்த செலவிலும் கவனம் தேவைப்படலாம்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்

## கண்டியில் ரவூப் ஹக்கீம் எம்.பி. திட்டவட்டம்



நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் தற்காலிகமாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் சகல சமூகத்தினரையும் பாதிக்கும் விதத்தில் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டு வருவதால் அதனை முற்றாக நீக்க வேண்டியது அவசியமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கண்டி நகரில் வார இறுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பதற்கான கையெழுத்துத் திரட்டும் நிகழ்வின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் கூறியதாவது,

பௌத்தர்களைப் பொறுத்தவரை அவர்களது புனிதஸ்தலமான தலதா மாளிகை அமைந்துள்ள கண்டி மாநகரில் இன்று நூற்றுக்கணக்கான சிங்கள மக்கள் உட்பட எல்லாச் சமூகத்தவர்களும் இந்த கையெழுத்திடும் நிகழ்வில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

பொதுவாக இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது ஒரு சமூகத்துக்கு மட்டும் உரியதல்ல. இந்தச் சட்டத்தின் விளைவாக எல்லா சமூகத்தினரும் இந்த நாட்டில் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கையெழுத்திடுவதில் பொதுமக்கள் அதிக ஆர்வங்காட்டி வருகிறார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற போர்வையில் இன்று தன்னுடைய அரசியல் எதிரிகளை வேட்டையாடுவதற்கும் தங்களுக்கு எதிராக விமர்சனம் செய்கின்ற சிவில், சமூக செயற்பாட்டாளர்களைப் பிடித்து கைதுசெய்து வகைதொகை இல்லாமல் அடைத்துவைத்து, அவர்களைப் பலவந்தப்படுத்தி, அவர்களிடமிருந்து குற்ற ஒப்புதல்களைப் பெற்று, அதன்மூலம் நடக்கும் அராஜகத்தை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் பெறப்படுகின்ற குற்ற ஒப்புதல்கள் ஒரு பொலிஸ் அதிகாரியின் முன்னால் கொடுக்கப்படுகின்றபோது அது நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றதோர் ஏற்பாடு இருக்கின்ற காரணத்தினால் சாதாரணமாக குற்றவியல் சட்டத்தில் ஒரு சந்தேக நபருக்கு இருக்கின்ற குறைந்தபட்ச பாதுகாப்பும் இல்லாத நிலைமை காணப்படுகிறதென்பது குறித்தும் தொடர்ந்தும் பல நீதிமன்றங்கள் அதற்கு எதிரான விமர்சனங்களை முன் வைத்திருக்கின்றன.

சர்வதேச ரீதியாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பலரும் அதனை விமர்சித்திருக்கிறார்கள். அது மாற்றப்பட வேண்டும்; இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. இந்நிலையிலேயே ஜெனீவாவில் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளுக்கான ஆணையாளர் அதுபற்றித் தெளிவாக கூறியிருக்கிறார்.

இங்கிருந்து சென்றிருக்கின்ற பேராயர் பெருந்தகை அங்கிருக்கிற மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆணையாளரைச் சந்தித்த பிறகு, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னால் இந்த நாட்டினுடைய பாதுகாப்புத் தரப்பு இருந்திருப்பதான விஷயம் சம்பந்தமாக சரியான விசாரணைகள் செய்யப்பட வேண்டும் என்று மிக வலிமையான ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

இதன்மூலம் வேண்டுமென்று இந்த நாட்டில் 250இற்கும் மேற்பட்ட எங்களுடைய கிறிஸ்தவ சகோதரர்களின் உயிர்களைப் பலியெடுத்த, படுபயங்கரமான செயலுக்குப் பின்னால் முஸ்லிம்கள் சிலர் தற்கொலைக் குண்டுதாரிகளாக இருந்தார்கள் என்ற உண்மைக்குப் பின்னால், வேறு இரகசிய உளவுத்துறைச் செயற்பாடுகள் இருந்திருக்கின்றனவா என்பதைப் பற்றி ஆராயவேண்டிய கடப்பாடு இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது என்பதை இன்று மனித உரிமைகள் ஐக்கிய நாடுகள் ஆணையாளரே ஜெனீவாவில் சொல்கின்ற அளவுக்கு நிலைமை மோசமாகியிருக்கிறது.

இந்தக் கட்டத்தில்தான் மத்துகமையில் தன்னுடைய குழந்தைகளுக்கு பால்மா வாங்கிக் கொடுக்க முடியாமல் - உணவளிக்க முடியாமல் ஒரு தந்தை தன்னுடைய உயிரை மாய்த்துக்கொண்டிருக்கிறார்; தற்கொலை செய்துகொண்டிருக்கிறார். இப்படியாக இந்த நாடு இன்று படுமோசமான பொருளாதார நிலைமைக்கு ஒரு பஞ்ச நிலைமைக்கு போய்க்கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணமான பொருளாதாரத்தை இந்த ஈன நிலைக்குக் கொண்டுவந்திருக்கின்ற இந்த அரசாங்கத்தினர் எல்லாவற்றுக்கும் ஏதோவொரு முகமூடியைப் போட்டுக் கொள்கிறார்கள். ஏதோ ஒருவகையில் கவசமாக அதாவது, கொவிட் தொற்றை இந்த நாட்டில் பரவாமல் தடுத்துவிட்டோம்.

ஆனால், இந்தப் பிராந்தியத்தில் இருக்கின்றதுபோல் வேறு எந்த நாட்டிலுமே இவ்வாறான பொருளாதார நெருக்கடிகள் கிடையாது. எல்லா நாட்டிலும் பொருளாதார வளர்ச்சி வீதம் கூடிக் கொண்டிருக்கின்றது. பங்களாதேஷில், இந்தியாவில், பாகிஸ்தானில் ஏன் மாலைதீவிலும் பொருளாதார வளர்ச்சி பல மடங்கு கூடியிருக்கிறது. ஆனால், எங்களுடைய நாட்டில் மட்டும் இன்று எங்களுடைய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து செல்வதற்குக் காரணம் இந்த ஆட்சியாளர்களின் இயலாமை என்பதை நாங்கள் மிகத் தெளிவாகச் சொல்கிறோம்.

எனவே, இந்த ஆட்சியாளருக்குள் இருந்த அமைச்சர்கள் சிலரும் கூட இன்று விலக்கப்பட்டிருக்கிறார்கள்; விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அமைச்சர்களைப் பற்றி நான் ஒன்றும் பேச வரவில்லை. அவர்கள் சார்பாக பேசுவதற்கு எந்த அவசியமும் கிடையாது. இருந்தாலும், அந்த அமைச்சர்களும் இந்த ஆட்சியாளர்களைக் கொண்டுவருவதற்குச் சொன்ன பொய்ப் பிரசாரங்களைப் பற்றி அவர்கள் தாங்களாக நினைத்து அதற்கான பாவமன்னிப்பைத் தேடுகின்ற காலம் வந்துவிட்டது.

இந்தக் கட்டத்தில் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பதற்கான, இந்தச் சட்டப்புத்தகத்திலிருந்து கிழித்தெறிவதற்கான இந்தக் கையெழுத்து வேட்டையில் சாரிசாரியாக மக்கள் கண்டி நகரில் கூடி கையெழுத்திட்டிருக்கிறார்கள். இதனை வெற்றிகரமாக முடிக்கும் வரையில் நாங்கள் ஓயமாட்டோம்.

புலனாய்வுப் பணிப்பாளர் ஷானி அபேசேகர இதனால் பழிவாங்கப் பட்டிருக்கிறார். அதற்காக சக அதிகாரிகள் உண்மையில் வெட்கப்பட வேண்டும். அதாவது, பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களே அவர்களது சகாவுக்கு எதிராக அவர் சம்பந்தப்பட்ட விடயத்தில் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அவருடைய பிணை மனு தீர்ப்பை வழங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அவர் பற்றி குறிப்பிடும் போது அவருடைய வழக்கு புனையப்பட்டது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆகவே, இவ்வாறு இந்தச் சட்டத்தின் மூலம் பலரும் பழிவாங்கப்படுகிறார்கள். எல்லா மட்டங்களிலும் அதன் பாதிப்பை பற்றி இப்பொழுது கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறது.

நாட்டைப் பொறுத்தவரையில் ஜனநாயக உரிமைகள் இன்று மறுக்கப்பட்டு வருகின்றன. மக்கள் சுதந்திரமாக வாழமுடியாத சூழ்நிலை உருவாகி இருக்கிறது. சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியாத நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருகிறார்கள்.

ஆகவே, நிறைவேற்று அதிகாரத்தைக்கொண்டு மக்களுடைய உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற காலகட்டத்தில் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இதற்கு எதிராக கிளர்ந்தெழவேண்டிய காலம் வந்திருக்கிறது. ஆகவே, இவ்வாறான சட்டத்தை நாங்கள் எந்த நிலையிலும் அனுமதிக்க முடியாது. சட்டப்புத்தகத்திலிருந்து அது கிழித்தெறியப்பட வேண்டும். அதற்குரிய முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

அமெரிக்க டொலரோடு ஒப்பிடும்போது இலங்கை நாணயத்தின் பெறுமதியில் வீழ்ச்சி காணப்படுவதன் காரணமாக பொருளாதார ரீதியில் நாடு பாரிய பின்னடைவை நோக்கி பயணிப்பதைப் பற்றி குறிப்பிட்டேன். அதனால் வெளிநாடுகளில் தொழில் புரிகின்றவர்களுடைய பணத்தைக் கூட அவர்கள் இந்த நாட்டுக்கு அனுப்புவதில் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

ஆகவே, இவ்வாறாக நாடு பொருளாதார ரீதியில் பாரியளவில் பின்னடைவைக் கண்டிருப்பதன் விளைவாகவும் எல்லா மட்டங்களிலும் இன்று நிலைமை மோசமாகி அதலபாதாளத்தில் சென்றுகொண்டிருப்பதை நாங்கள் கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம் - என்றார்.

# ஆர்ப்பாட்டம் நடத்தி பொதுமக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கிய சம்பவம்!

## விமலுக்கு எதிரான வழக்கு மே 20 வரை ஒத்திவைப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் அல்-ஹுஷேன் இலங்கைக்கு வந்தது தொடர்பில் போராட்டம் நடத்தி பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிரான வழக்கை எதிர்வரும் மே மாதம் 20ஆம் திகதிவரை ஒத்திவைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் சந்திம லியனகே நேற்று (07) உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சாட்சியாளர்கள் பிணை வழங்கப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் செய்த் அல்-ஹுசேன் இளவரசர் நாட்டுக்கு வருகை தந்திருந்த சந்தர்ப்பத்தில், இவர்கள் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலத்துக்கு முன்னால் பிரதான வீதியை மறித்து பொதுமக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தனர்.

முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச, இராஜாங்க அமைச்சர் ஜயந்த சமரவீர, நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸாம்மில், தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களான வீரகுமார திஸாநாயக்க, பியசிறி விஜேநாயக்க மற்றும் ரொஜர் செனவிரத்ன ஆகியோர் இந்த வழக்கின் சாட்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## தத்துவம் தங்கராசு



**ரஷ்யாவில் பேஸ்புக், டிஃடொக் உட்பட்ட பல சமூக ஊடகங்களை தடை செய்திருக்கிறதா வந்த ஒரு செய்தியை பார்த்தேன்.**

**இதை வாசித்த பலர் ஐயோ என்று நினைக்கக்கூடும்.**

**ஆனால், இதில் உள்ள மற்ற பக்கத்தையும் பார்க்கவேண்டும். ரஷ்யாவில் இந்த ஊடகங்களை தடை செய்வதால் பெரும் வருமான இழப்பு இந்த நிறுவனங்களுக்குத்தான். ரஷ்யாவுக்கல்ல..**

**மறுபுறம், இந்த சமூக ஊடகங்கள் நிறுத்தப்படுவதால் ரஷ்யா உருப்படும் தவிர வீணாய்ப்போகாது... இளைஞர், யுவதிகள் அந்த நேரத்தை பயன்படுத்தி நல்ல வேலைகளில் ஈடுபடுவார்கள்...**

**ரஷ்யாவுக்கு எதிரான தடை என்று கூறிவிட்டு அதற்கு நல்லதையே செய்துகொண்டிருக்கிறது மேற்குலகம்.**

# யாழில் தங்கத்தின் விலை உயர்வு

**(யாழ். செய்தியாளர்)**

யாழ்ப்பாணத்தில் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். வரலாற்றில் முதல் தடவையாக தங்கத்தின் விலை புதிய உச்சத்தைத் தொட்டுள்ளதாக வர்த்தகர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

ரஷ்யா – உக்ரைன் நெருக்கடி நிலைமையினால், சர்வதேச பங்குச் சந்தை மீதான முதலீடு குறைவடைந்து தங்கம் மீதான முதலீடு அதிகரித்துள்ளது. இதனால் உலக சந்தையில் தங்கத்தின் விலை பெருமளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் நேற்று (07) திங்கட்கிழமை 22 கரட் தங்க ஆபரணத்தின் விலை ஒரு இலட்சத்து 21 ஆயிரம் ரூபாவாக உயர்வடைந்துள்ளது. கடந்த சனிக்கிழமை ஒரு பவுண் தங்க ஆபரணம் ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 625 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

**தூய தங்கத்தின் விலை**

நேற்று 24 கரட் ஒரு பவுண் தூய தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாவாக அதிகரித்துள்ளது. கடந்த சனிக்கிழமை 24 கரட் ஒரு பவுண் தூய தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 500 ரூபாவாகக் காணப்பட்டதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.





நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் மின்வெட்டை கண்டித்து தீப்பந்தம் ஏந்திய போராட்டமொன்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (06) நாவலப்பிட்டி நகரில் இடம்பெற்றது.

# ஆளக்கூடியவரிடம் நாட்டை ஒப்படைத்து அரசு உடன் பதவி விலகவேண்டும்

## வலியுறுத்துகிறார் திகா எம்.பி.



(க.கிஷாந்தன்)

''இந்த அரசால் நாட்டை நிர்வகிக்க முடியவில்லை. தன்னால் முடியாது என்பதை ஆளுங்கட்சியினர் மீண்டும், மீண்டும் உறுதிப்படுத்தி வருகின்றனர். எனவே, ஆளக்கூடிய தலைவரான சஜித்திடம் நாட்டை ஒப்படைப்பதற்காக இந்த அரசு உடன் பதவி விலகவேண்டும்" - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்றுமுன்தினம் (06) நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, நீண்டநேர மின்வெட்டு, பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் திகாம்பரம் எம்.பி. மேலும் கூறுகையில், இந்த நாட்டில் என்ன நடக்கின்றது என்பது பெரும் புதிராகவே இருக்கின்றது. ஆட்சியாளர்களின் முறையற்ற முகாமைத்துவத்தால் எதிலும் நிலையற்ற தன்மையே காணப்படுகின்றது. இரவில் நித்திரைக்குச்சென்று காலையில் கண்விழித்தால் ஏதேனும் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. கட்டுப்பாட்டு விலையும் இல்லை. இதனால் வியாபாரிகள் தங்களுக்குத் தேவையான விலையில் விற்பனை செய்துவருகின்றனர். இதனால் மக்களுக்கே பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல, புதிய புதிய வரிசைகளும் உருவாகி வருகின்றன. சமையல் எரிவாயுவுக்கு வரிசை, பால்மாவுக்கு வரிசை, சீனிக்கு வரிசை, தற்போது டீசல், பெற்றோலுக்கு வரிசை என வரிசைகள் உருவாகியுள்ளன. இந்த ஆட்சி தொடர்ந்தால் மேலும் பல வரிசைகளும் உருவாகும் அபாயம் உள்ளது.

ஆட்சியாளர்களிடம் ஆளும் திறமை இல்லை. இனவாதம் பேசியே ஆட்சிக்கு வந்தனர். இறைவன் தக்க தண்டனை வழங்கியுள்ளார். தங்களால் முடியாது என தெரிந்தும், அதிகார ஆசையில் தொடர்ந்தும் ஆள முற்படுகின்றனர். முடியாவிட்டால் வீடு செல்லுமாறு நாம் வலியுறுத்துகின்றோம். இந்த நாட்டை சிறப்பாக ஆளக்கூடிய தலைவராக சஜித் இருக்கின்றார். அவருக்கு பக்கபலமாக நாம் இருக்கின்றோம். எனவே, நாட்டு மக்களின் நலன்கருதி அரசு பதவி விலகவேண்டும்" - என்றார்.

# நுவரெலியா மாவட்டத்தில் திறமையற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களே உள்ளனர்

## முன்னாள் எம்.பி. திலகராஜ் குற்றச்சாட்டு



(க.கிஷாந்தன்)

''நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியும் அதனை வென்றெடுக்க முடியாத திறமையற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களே நுவரெலியா மாவட்டத்தில் இருக்கின்றனர்."

- இவ்வாறு மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்தார்.

அத்துடன், மட்டக்களப்பிலிருந்து வந்ததால் தான் சாணக்கியனுக்கு மல்லியப்பூ சந்தி எது, ஹட்டன் அம்பிகா சந்தி எது என தெரியாமல் போயுள்ளது எனவும் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு விடயம் தொடர்பில் ஹட்டன், மல்லியப்பு சந்தியில் நேற்று முன்தினம் (06) முன்னெடுக்கப்பட்ட கையெழுத்து திரட்டும் நடவடிக்கையில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்தில் காட்டப்படும் பாரபட்சத்துக்கு எதிராக நாடுமுழுவதும் கையெழுத்து திரட்டி வருகின்றோம். அன்றாடம் கோஷம் எழுப்பும் அரசியல் எமக்கு தேவையில்லை. உரிமை அரசியலே எமக்கு முக்கியம். பிரதேச செயலகங்கள் அதிகரிக்கப்படவேண்டும் என்பதே நுவரெலியா மாவட்டத்தின் தேவை. அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியுள்ளது. அதனைக்கூட கேட்டுபெற முடியாத, கதிரைகளை மட்டும் சூடாக்கிக்கொண்டிருக்கும் திறமையற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களே இருக்கின்றனர். இவர்களால் குரல் எழுப்ப முடியவில்லை. நாம் நாடு முழுவதும் சென்று கையெழுத்து திரட்டுகின்றோம். எமது மக்களை தலைகுனிய இடமளிக்கமாட்டோம். அதிகாரப்பகிர்வு என்பது மலையகத்துக்கும் அவசியம்.

இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களில் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேச செயலகங்கள் அதிகரித்துள்ளன. நுவரெலியாவுக்கு அதனை பெற்றுக்கொடுக்க முடியாத நாடாளுமன்ற உறுப்பினர்களே இங்கிருக்கின்றனர்.

அதேவேளை, மல்லியப்பூ சந்தியில் கூட்டம் நடத்துமாறு சாணக்கியனே எங்களிடம் கேட்டுக்கொண்டார். மட்டக்களப்பில் இருந்துவந்த அவருக்கு மல்லியப்பூசந்தி எது, ஹட்டன் அம்பிகா சந்தி எது என தெரியாமல்போனது, அவரின் குறைபாடே தவிர, எமது குறைபாடல்ல. பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதற்கு நாம் ஆதரவு. இலங்கை முழுவதும் செல்வதற்கான தைரியம் எமக்கு இருக்கின்றது" - என்றார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# தொழிற்சங்கத் தலைவர்கள் மக்களை சிரமத்துக்கு ஆளாக்கினால் அவர்களது சம்பள விபரம் உட்பட இரகசியங்களை வெளிப்படுத்துவேன்

## சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல

(கண்டி நிருபர்)

மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களிடம் அவற்றின் விலைகளை குறைத்து சாதாரண விலையில் பொதுமக்களுக்கு வழங்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

கண்டி, குண்டசாலையில் நேற்று (07) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 60 சதவீதத்துக்கும் மேற்பட்ட மருந்துப் பொருட்களை எட்டு நிறுவனங்களே பிரதானமாக இறக்குமதி செய்கின்றன. அவைகளே அதிகளவு இலாபமீட்டு கின்றன. அவர்களிடம் மக்களுக்கு குறைந்த



விலையில் மருந்துப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி நான் வேண்டுகோள் விடுத்துள்ளேன். நாடு மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கும்போது மேற்படி நிறுவனங்கள் அதிகளவு இலாபம் உழைப்பது நியாயமாகாது.

அதேநேரம், சில தொழிற்சங்கத் தலைவர்கள் நாட்டுமக்களை சிரமத்துக்கு ஆளாக்கி தமது கோரிக்கைகளை வென்றெடுக்க முற்படுகின்றனர். அவர்களது கோரிக்கைகளில் நியாயமானதும் உண்டு. சில நியாயமற்றதாகவும் உள்ளன. ஏனெனில், இன்று நாடு இக்கட்டான நிலையில் இருக்கும்போது சிலவற்றை நிறைவேற்ற முடியாதுள்ளது.

மேலும், நாட்டு மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும்வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கும் சில தொழிற்சங்கத் தலைவர்கள் மிக உயர்ந்த ஊதியத்தையும் பெற்றுக்கொண்ட நிலையில் அவர்கள் தொடர்ந்தும் மக்களை சிரமத்துக்கு ஆளாக்கினால் அவர்களது சம்பள விபரம் உட்பட பல இரகசியங்களை வெளிப்படுத்துவேன். அப்போது எது சாதாரணம், எது அசாதாரணம் என பொதுமக்கள் தெரிந்துகொள்வர்.

கடந்த கொவிட் காலத்தில் சுகாதாரத்துறையினரின் அளப்பரிய சேவையை நாம் குறைத்து மதிப்பிடவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# வறட்சி காலநிலையால் குடிநீர்த் தட்டுப்பாடு:

## ஊற்றுநீரைப் பெற பல மைல்கள் செல்லும் நிலை







(மஸ்கெலியா நிருபர் செ.தி.பெருமாள்)

நீர் ஏந்தும் பகுதிகளான மாவுஸாகலை, விமலசுரேந்திர, கென்யோன், லக்ஸபான, பொல்பிட்டிய, காசல்ரீ, மேல்கொத்மலை ஆகிய நீர்த்தேக்கங்களுக்கு நீரை வழங்கும் சகல ஆறுகளும் கடந்த சில மாதங்களாக வறண்ட நிலையில் உள்ளன. இதனால் நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது.

மாவுஸாகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் இன்றைய நிலையில் 32.6 அடி குறைந்துள்ளது. காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 50 சதவீதம் குறைந்துள்ளது. இதேபோல் ஏனைய நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளதாக நீர் மின்நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில், மலையகப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

ஒருசில தோட்டங்களில் தற்போது சுத்தமான குடிநீர் பெற பல மைல் தூரம் வரை சென்று ஊற்று நீரை பெற்றுவரும் நிலை தோன்றியுள்ளதால் பெருந்தோட்ட மக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

தொடந்தும் வறட்சி நிலவும் பட்சத்தில், மின் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படலாம் என நீர் மின்நிலைய அதிகாரி மேலும் தெரிவித்தார். மாவுஸாகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்து வருவதால் சண்முகநாத சுவாமி கோயில், புத்தபெருமானின் சிலை, இஸ்லாமிய மசூதி, கங்குவத்தை விநாயகர் கோயில், சாமிமலை கருங்கள் பாலம் என்பன நீரில் மூழ்கியுள்ளதை தற்போது காணக்கூடியதாக உள்ளது.

# தான்தோன்றித்தனமான செயற்பாடுகளினால் நாடு அதலபாதாளத்துக்குள் செல்கின்றது

## வடிவேல் சுரேஷ் எம்.பி.



(பதுளை நிருபர்)

அரசின் தவறான செயற்பாடுகளினால் நாடு இன்று அதலபாதாளத்துக்குள் சென்றுகொண்டிருக்கின்றது. இதனால் நாட்டு மக்கள் பல்வேறு பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். இதுபோன்ற விடயங்களை மக்களின் பிரதிநிதி என்ற வகையில் வெளிக்கொணரவேண்டும். அதற்காக எந்தவொரு விசாரணைக்கும் நான் செல்லத் தயார் - என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் 26ஆவது மாநாடும், மகளிர் தின நிகழ்வும் கடந்த 05ஆம் திகதி பதுளையில் நடைபெற்றபோது நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

எதிர்வரும் 9ஆம் திகதி (நாளை) ஜனாதிபதி ஆணைக்குழு என்னை விசாரணைக்கு உட்படுத்தவுள்ளது. அவ்விசாரணைக்கு நான் செல்வேன். அதுபற்றி நான் பெரிதாக அலட்டிக்கொள்ளப்போவதில்லை.

பெருந்தோட்டத்துறை மக்களே எனது சொத்துகள். எனக்கு மதுபானசாலைகள், தொழிற்சாலைகள் போன்ற இன்னோரன்ன சொத்துகள் இல்லை. பெருந்தோட்டத்துறை மக்களின் மேம்பாடுகளை முன்னிலைப் படுத்தியே எனது செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இலங்கை அரசின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளினால் நாடு இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் வாழ வழியின்றி தவிக்கின்றார்கள். பெருந்தோட்டத்துறை மக்களைப பொறுத்தவரை அவர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர். நாட்டு மக்கள் தமது வாழ்வாதாரங்களை மேற்கொள்ள யாசகம் எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். எமது மக்கள் இத்தகைய துன்பங்கள், துயரங்களை நிவர்த்திசெய்ய என்னாலானதை மேற்கொள்வேன்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 1000 ரூபா தினச் சம்பளத்தில் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டு குறைவான சம்பளமே அம்மக்களுக்கு வழங்கப்படுகின்றது. அவர்கள் கொய்யும் தேயிலை தளிர்களை எடை போடுவதிலும் பல்வேறு சுரண்டல்கள் தோட்டங்களில் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. இந்நாட்டின் தேசிய வருமானத்துக்கு முதுகெலும்பாகவே எம் மக்கள் செயற்பட்டனர். எமது மக்களை உரசிப்பார்க்க எவரும் நினைக்கவேண்டாம் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

நாட்டின் இன்றைய விலைவாசி உயர்வுகளை எம் மக்களினால் தாங்கிக்கொள்ள முடியாது அவ்விலைவாசி உயர்வுக்கு 1000 ரூபா சம்பளம் எவ்வகையிலும் போதாது. அவர்களுக்கு தினச் சம்பளமாக 2,500 ரூபா வழங்கப்பட வேண்டும்.

தற்போதைய எமது எதிர்க்கட்சித் தலைவரின் தந்தையாரான ரணசிங்க பிரேமதாச, பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொடுத்தார். அவரின் மகன் எம்மக்களுக்கு வீட்டுரிமையை வழங்கவேண்டும். அம்மக்கள் எமக்கே வாக்களித்தனர். நாட்டின் 10 மாட்டங்களிலும் எம் மக்கள் 15 இலட்சம் பேர்வரை இருந்து வருகின்றனர். அவர்கள் அனைவருமே ரணசிங்க பிரேமதாசவுக்கு நன்றி செலுத்தும் முகமாக அவரது மகன் சஜித் பிரேமதாசவுக்கே வாக்களிப்பார்கள். இது உறுதி. ஆகையினால், எந்தவொரு தேர்தல் வந்தாலும் அதனை எதிர்கொள்ள நாம் தயாராகவே உள்ளோம். அநேகமாக மாகாண சபைத் தேர்தல் விரைவில் வரலாம். அத்தேர்தலில் அனைத்து மாகாண சபைகளின் ஆட்சிகள் எம்வசமே ஆகும். பட்டம், பதவிகள் ஆகியவற்றுக்கு அப்பால் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற மூவின மக்களும் கைகோர்த்து, சஜித் பிரேமதாசவின் கரங்களை வலுப்படுத்தி, அவரை ஜனாதிபதியாகும் இலக்கை நோக்கி பயணிப்போம் - என்றார்.

# மாவனெல்ல பிரதேச சபைக்கு புதிய தலைவர் நியமனம்



(இரத்தினபுரி நிருபர்)

மாவனெல்ல பிரதேச சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஆர்.பி.எம்.லசந்த ஸ்ரீவன் கடந்த வெள்ளிக்கிழமை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

மாவனெல்ல பிரதேச சபையின் தலைவர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதையடுத்து புதிய தலைவர் ஒருவரை தெரிவுசெய்வது குறித்த வாக்கெடுப்பின்போதே லசந்த ஸ்ரீவன் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். இதனையடுத்து, அவர் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதன்போது மாகாண ஆளுநரின் செயலாளர் எச்.டி.சிசிர, சப்ரகமுவ மாகாண உள்ளூராட்சி சபை ஆணையாளர் துலிப் சொமிரத்ன உட்பட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.



இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் 26ஆவது மாநாடும் மகளிர்தின நிகழ்வும் பதுளை மாநகர மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க பொதுச் செயலாளரும் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் ஆகியோரையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஏனையோரையும் படங்களில் காணலாம். (படங்கள்: பதுளை நிருபர்)

தமிழன்
www.thamilan.lk

# வணிக உலகம்
Business world

## MAS படைப்பாற்றல் கொண்ட பெண்களின் தைரியத்தையும் சிறப்பையும் பாராட்டுகிறது



MAS Holdingsஇனால் ஏற்பாடு செய்யப்பட்ட 14ஆவது MAS அபிமானி - அதிகாரம் பெற்ற பெண்மணி விருது வழங்கும் நிகழ்வில், நிறுவனத்தில் மற்றும் சமூகத்தினுள் சிறந்து விளங்க பாடுபடுவதில் அவர்களின் சிறந்த செயல்திறனை அங்கீகரிக்கும் வகையில், நாடு முழுவதும் உள்ள பெண்களின் சேவையில் அதன் சிறந்த பங்களிப்பை நிறுவனம் கௌரவித்தது.

கடந்த பெப்ரவரி 21ஆம் திகதி BMICH இல் "நமது தேசத்தின் பெருமை" என்ற தொனிப் பொருளின் கீழ் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில், ஐந்து நாடுகளில் 40க்கும் மேற்பட்ட இடங்களில் இருந்து 500க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்களில் இருந்து நிறுவனத்தின் அனைத்து சேவை நிலைகளிலும் உள்ள 77 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொழில்முனைவு, புத்தாக்கம், சமூக சேவை மற்றும் பேண்தகைமை, தொழில்முறை மற்றும் தலைமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பெண்களின் தனித்துவமான திறனை இந்த விருதுகள் அங்கீகரிக்கின்றன.

ஆண்டின் அதிகாரம் பெற்ற பெண் விருதின் கீழ் 44 விருதுகளும், தொழில்முனைவு, புத்தாக்கம் மற்றும் நிலைத்தன்மை ஆகிய துறைகளில் முன்மாதிரியான செயல்திறனுக்காக ஆறு சிறப்பு விருதுகளும் வழங்கப்பட்டன. 'Frontier Challenge' கீழ், 13 விருது பெற்றவர்கள் அங்கீகரிக்கப்பட்டு மேலும் 14 பெண்களுக்கு தலைமைத்துவ விருதுகள் வழங்கப்பட்டன. 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுக்கான இந்த வருடத்துக்கான விருது வழங்கும் நிகழ்வில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவி சமரி அத்தபத்து பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

2004ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் MAS அபிமானி விருதுகள், நிறுவனத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள அனைத்து பாலின சமத்துவத்தை அடைய, ஊக்குவிக்க மற்றும் அதிகாரம் அளிப்பதற்காக நிறுவனத்தின் கூட்டு முயற்சிகளின் ஒரு பகுதியாகும். தொடர்ந்து சவால்களை சமாளித்து, அவர்கள் நினைத்ததை சாதித்து, அனைவருக்கும் முன்மாதிரியாக இருக்கும் படைப்பாற்றல் பெண்களின் வெற்றிகரமான வாழ்க்கைக் கதைகளைப் பகிர்ந்துகொள்வதன் முக்கியத்துவத்தை இந்த விருதுகள் அங்கீகரிக்கின்றன. இந்த விருதுகள் 2003இல் தொடங்கப்பட்ட MAS 'Women Go Beyond' திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது UNஇன் பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளின்(SDGs) கொள்கைகளை பின்பற்றுகிறது. தற்போது, 15 நாடுகளில் MAS தொழிற்சாலை வலைப்பின்னலில் உள்ள ஒரு இலட்சத்து 15ஆயிரம் வாடிக்கையாளர்களில் 70வீதத்துக்கும் அதிகமானோர் பெண்கள் ஆவர்.

இது குறித்து கருத்து தெரிவித்த Women Go Beyond மற்றும் MASஇன் பெண்களுக்கான அதிகாரமளித்தல் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான பொது முகாமையாளர் தனுஜா ஜயவர்தன, "ஆடைத் தொழிலையும் நாட்டையும் வழிநடத்தும் பாரம்பரிய யோசனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு சவால் விடும் அனைத்து பெண்களுக்கும் பெண்களின் சிறப்பம்சம் நேர்மறையான மாற்றத்துக்கு பங்களிக்கிறது. மறுபுறம் பொருளாதாரம், நமது சாதனைகள் குறித்து பெருமிதம் கொள்கிறோம். பாலின சமத்துவத்தை அடைவதற்கான நீண்ட பயணத்தில் MAS முழுமையாக ஈடுபட்டுள்ளது." என தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டில், இந்தத் திட்டத்தின் மூலம், நாடு முழுவதும் உள்ள அனைத்து நிறுவனங்களிலும் செயல்படுத்தப்பட்ட 730க்கும் மேற்பட்ட திட்டங்களின் மூலம் சுமார் 02இலட்சத்து 20ஆயிரம் பெண் உறுப்பினர்களின் வாழ்வில் MAS குழுவால் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த முடிந்தது. இதில் தொழில் முன்னேற்றத்துக்கான 45ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள், தொழில்முனைவோர் மேம்பாடு உட்பட திறன் மேம்பாட்டில் 13ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள், சுகாதாரத் துறையில் பெண்களுக்கு 93ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள், முன்மாதிரி படைப்பாற்றலில் 11ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்களும் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை தவிர்ந்த 55ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை உள்ளடக்கியது.

இதற்கு மேலதிகமாக MAS முகாமைத்துவத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் நோக்கத்தோடு பல்வேறு செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தி உள்ளது. இதில் Unconscious bias reduction செயலமர்வுகள், வழிநடத்தல் மற்றும் அதற்கு அனுசரணை வழங்குதல் ஆட்சேர்ப்பில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகப்படுத்துவதற்கான உபாயங்கள் நெகிழ்வுடன் கூடிய வேலை நேரம் மற்றும் சிறுவர் பராமரிப்புக்கான உதவி போன்ற செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் நிறுவனம் குறிப்பிடத்தக்க இலக்குகளை வெற்றிகரமாக அடைந்துள்ளது. இதில் குறிப்பிடத்தக்க வகையில் சிரேஷ்ட முகாமைத்துவ குழுவில் பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றும் நிறைவேற்றுனர் வெற்றிடங்களுக்கும் அதற்கு மேலேயும் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட்டுள்ளமை மற்றும் பெண் அங்கத்தவர்கள் வேலையிலிருந்து நிற்பதை குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சிறந்த கைத்தொழிலுக்கான தங்கப் பதக்கத்தை வென்ற பிரிட்டிஷ் கொஸ்மெட்டிக்ஸ் நிறுவனம்



அழகுக்கலை சாதனங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதில் சர்வதேச அங்கீகாரத்தை வென்ற இலங்கை நாமமாக விளங்கும் பிரிட்டிஷ் கொஸ்மெட்டிக்ஸ் தனியார் நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் (IDB) ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த கைத்தொழில்களுக்கான விருது வழங்கும் விழாவில் அழகு கலைத்துறை மற்றும் அது சார்ந்த உற்பத்திப் பிரிவின் தங்கப் பதக்க விருதை வென்றுள்ளது. மேற்படி விருது வழங்கும் விழா அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் கைத்தொழில் அமைச்சராக இருந்த விமல் வீரவங்ச ஆகியோரின் தலைமையில் வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

"இந்த சிறப்பான விருதை வெல்லக் கிடைத்துள்ளமை தொடர்பாக நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம்.

நாம் எப்பொழுதும் உயர்தரத்திலான பொருட்களை உற்பத்தி செய்வதோடு அவற்றை வாடிக்கையாளர்களுக்கு இலகுவில் கொண்டு சேர்ப்பதற்கான சிறந்த சந்தைப் படுத்தல் வேலைத்திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்துகின்றோம்.

இந்த வெற்றி தருணத்தில் எமது பெறுமதி மிக்க வாடிக்கையாளர் பெருமக்களுக்கும் ஊழியர்களுக்கும் நாடெங்கிலுமுள்ள எமது விற்பனை முகவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்." என நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி திருமதி நிரோஷா ஜாகொட ஆராச்சி தெரிவித்தார். இவர் Career & Professional Woman Awards 2019 விருது விழாவில் சிறந்த 50 பெண்களில் ஒருவராகவும் தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரிட்டிஷ் கொஸ்மெட்டிக்ஸ் நிறுவனம் 1993ஆம் ஆண்டில் மிகச் சிறிய அளவில் தொடங்கப்பட்ட நிலையில் தற்பொழுது சுமார் 300 ஊழியர்கள் பணியாற்றுகின்ற பெரும் நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளது. திமுத் ஜாகொட ஆராச்சி மற்றும் திருமதி நிரோசா ஜாகொட ஆராச்சி ஆகியோர் நிறுவனத்தின் வெற்றிக்காக நீண்டகால தொலைநோக்கு பார்வையுடன் மனித வளங்களை மிகச் சிறப்பாக வழிநடத்தி வருகின்றனர்.

சருமம், சிகை மற்றும் நகம் ஆகியவற்றை ஆரோக்கியத்துடனும் கவர்ச்சியுடனும் பேணுவதற்கு தேவையான சர்வதேச தரத்துடன் கூடிய சிறந்த பல உற்பத்திகள் பிரிட்டிஷ் கொஸ்மெட்டிக்ஸ் உற்பத்திகளில் அடங்கும். ISO 9001: 2015 தரச் சான்றிதழை வென்றுள்ள பிரிட்டிஷ் கொஸ்மெட்டிக்ஸ் நிறுவனத்தின் (www.Britishcosmetics.lk) சருமத்தை பளபளப்பாக வைத்திருப்பதற்கு உதவும் உற்பத்திகள் பெரும் வரவேற்பை பெற்றுள்ளன. அதன் பயன்களை உள்நாட்டு, வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் அனுபவித்து வருகின்றார்கள்.

பிரிட்டிஷ் கொஸ்மெட்டிக்ஸ் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு விலைக் கழிவுகளையும் பல்வேறு சலுகைகளையும் தொடர்ந்து வழங்கி வருகின்றது. அத்தோடு, மேற்படி உற்பத்திகளை இணைய வழி ஊடாக வாடிக்கையாளர்களுக்கு தமது வீட்டுக்கே தருவித்துக் கொள்வதற்கான வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

## முன்கூட்டிய ஓடர்களுக்கு விசேட கொடுப்பனவுகளுடன் Galaxy S22 5G Series ஐ வழங்கும் Samsung

★ Galaxy S22 Ultra 5G, Samsungகின் மிகவும் பலம்வாய்ந்த சாதனம், Note மற்றுதம் S series இன் சிறந்த Galaxy அம்சங்களை ஒருங்கிணைக்கிறது.

★ Galaxy S22 5G ஆனது உங்களின் சிறந்த தருணங்களை உருவாக்க, தன்வசப்படுத்த மற்றும் பகிர்ந்து கொள்ள சார்பு தர AI கெமரா அம்சங்களுடன் வருகிறது.

★ Samsung இலவச Galaxy Buds, Data, OneDrive சேமிப்பு, Adobe premium மற்றும் Spotify பிரீமியம் சலுகைகளை முன்கூட்டிய ஓர்டர்களுக்கு வழங்குகிறது

இலங்கையின் நம்பர்-1 ஸ்மார்ட்போன் பிராண்டான Samsung, அதன் மிக பிரீமியம் பிரதான ஸ்மார்ட்போனான - Galaxy S22 5G Seriesகளை முன்கூட்டிய ஓர்டர்களுக்காக அண்மையில் அறிமுகம் செய்தது. இலவச Galaxy Buds முதல் இலவச Data வரையிலான அற்புதமான தொகுப்பு சலுகைகள் இதில் அடங்கும். Galaxy S22 Ultra 5G ஆனது, Note Series இன் நிகரற்ற பலம்வாய்ந்த மற்றும் Iconic S-Pen உடன் Pro-grade கெமரா மற்றும் S Series இன் செயற்றிறனுடன் இணைந்து பிரீமியம் ஸ்மார்ட்போன்களுக்கான புதிய தரநிலையை அமைக்கிறது. ஒரு சிறந்த உறுதியான வடிவமைப்புடன் உருவாக்கப்பட்ட, Galaxy S22 5G ஆனது ஒவ்வொரு தருணத்தையும் காவியமாக்குவதற்கு மேம்பட்ட அறிவார்ந்த பட செயலாக்கத்துடன் கூடிய Dynamic கெமராவைக் கொண்டுள்ளது. Galaxy S22 5G Series இன் எல்லையற்ற திறமைகளைச் சேர்க்க, இந்தச் சாதனங்கள் Dialog premier 5G trail networkஇல் செயற்படுத்தப்பட்டது.

"ஸ்மார்ட்போன் எல்லையற்ற முன்னேற்றத்துக்கான ஒரு நுழைவாயில். Samsung, நாங்கள் அதை ஒருபோதும் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. பிரமிக்க வைக்கும் Prograde கெமராக்கள் முதல் ஈர்க்கும் பொழுதுபோக்கு வரை, Galaxy S22 5G Series பாவனையாளர்கள் தொடரும் ஒவ்வொரு ஆர்வத்திலும் சிறந்து விளங்குவதற்கான உற்பத்தி வழிகளை வழங்கப்போகிறது. எங்களின் சமீபத்திய பிரீமியம் பிரதான ஸ்மார்ட்போன், எங்கள் Samsung Galaxyஇன் சிறந்த அனுபவங்களை உள்ளூர் ஸ்மார்ட்போன் ஆர்வலர்களுக்கு ஒரு அதிரடியான சாதனமாக வழங்கும். Galaxy S22 நிச்சயமாக இலங்கையில் ஸ்மார்ட்போன்களின் எதிர்கால வரலாற்றை மீண்டும் எழுதப் போகிறது," என Samsung இலங்கையின் முகாமைத்துவப் பணிப்பாளர் Kevin SungSu YOU தெரிவித்துள்ளார்.

### Galaxy S22 Ultra 5Gஇன் மிகவும் பலம்வாய்ந்த தொலைபேசி

Galaxy S22 Ultra 5Gஇல் உள்ள உள்ளமைக்கப்பட்ட S Pen, இதுவரை உருவாக்கிய வேகமான, மிகவும் பதிலளிக்கக்கூடிய S Pen ஆகும். 70% குறைவான தாமதத்துடன், S22 Ultra 5Gயின் பரந்து விரிந்த திரையில் வழமையான விதத்தில் எழுதலாம் மற்றும் வரையலாம் என்பதுடன், புதிய வழிகளுக்கு Appகளைப் பயன்படுத்தவும் முடியும். S Pen உடன், S22 Ultra 5GMdJ ஆக்கபூர்வமாக இருக்கவும், விடயங்களைச் செய்யவும் புதிய வழிகளைத் திறக்கும் அதேவேளையில், குறிப்பின் மரபைக் கொண்டுள்ளது. இதன் விளைவாக முன்னெப்போதும் இல்லாத மொபைல் அனுபவத்தை வழங்குகிறது.




### Galaxy S22 5G தொடர்: பகல் அல்லது இரவில் பிரமிக்க வைக்கும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் எடுக்கும் வசதி கொண்டது

Galaxy S22 Ultra 5G ஆனது எந்த வெளிச்சத்திலும் உடனடியாகப் பதிவு செய்யக்கூடிய காட்சிகளைப் பிடிக்கக்கூடிய வசதிகளை வழங்குகிறது. Galaxy S22 Ultra 5G ஆனது 2.4um Pixel sensor மூலம் உருவாக்கப்பட்டுள்ளது - Samsung இன் மிகப்பெரிய Pixel Sensor. எனவே, சிறந்த புகைப்படங்களையும் வீடியோக்களையும் எடுக்கலாம். S22 Ultra 5G இன் மேம்பட்ட Super Clear Glass lens இரவுநேர வீடியோக்களை Flares இல்லாமல் எளிதாகவும், தெளிவாகவும் எடுக்க உதவுகிறது. வீடியோ Auto Framing மூலம், கெமரா எப்போதும் யாரை விரும்புகிறீர்களோ, அது ஒரு நபராக இருந்தாலும் சரி, அல்லது பத்து பேராக இருந்தாலும் சரி, தெளிவாகப் படமெடுக்கக் கூடிய வசதிகொண்டது. Galaxy S22 Ultra 5G ஆனது 100X Space Zoom மற்றும் சக்திவாய்ந்த Dual-tele Lens உடன் Quadruple-lens கெமராவுடன் வருகிறது. இது Samsung இன் மிகவும் சக்திவாய்ந்த கெமராவாகும்.

### கட்டுக்கடங்காத பலம் மற்றும் செயற்றிறன் கொண்டது

Galaxy S22 Ultra 5GMdJ ஆனது 6.8-இன்ச், Dynamic AMOLED 2X Display வசதிகளைக் கொண்டுள்ளதுடன், இது 1,750 nits உச்ச பிரகாசத்தை உருவாக்கி அனைத்தையும் அதிர்ச்சியூட்டும் விவரங்களுடன் உருவாக்குகிறது. Galaxy S22 5G ஆனது Dynamic AMOLED 2X டிஸ்ப்ளே பொருத்தப்பட்டுள்ளது. இது கேமிங் மற்றும் பார்ப்பதற்கு சிறந்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. Galaxy S22 5G பிரிமியம் 6.1 இன்ச் டிஸ்ப்ளே வசதி கொண்டு அமைந்துள்ளது. Galaxy S22 5G ஆனது 1300 nits இன் உச்ச பிரகாசத்தைக் கொண்டுள்ளது.

Galaxy S22 Ultra 5G மற்றும் S22 5G ஆகியவை விஷன் பூஸ்டர் தொழில்நுட்பத்துடன் பொருத்தப்பட்டுள்ளன. இது நாள் முழுவதும் பிரகாசத்தை மிகவும் சிறந்த விதத்தில் சரிசெய்ய திரையை செயல்படுத்துகிறது. பிரகாசமான சூரிய ஒளியில் கூட உங்கள் உள்ளடக்கத்தின் சிறந்த காட்சியைப் பார்வையிட முடியுமென்பதையும் உறுதிசெய்கிறது.

### நான்கு தலைமுறைக்கான மேம்படுத்தல்கள் வசதி

பாவனையாளர்களுக்கு சிறந்த மொபைல் செயற்றிறன் மற்றும் அனுபவத்தை வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக, KO Galaxy S22 5G Series நான்கு தலைமுறைகள் வரை Android OS மேம்படுத்தல்களால் ஆதரிக்கப்படும். இப்போது மில்லியன் கணக்கான Galaxy பாவனையாளர்கள் சமீபத்திய பாதுகாப்பு, உற்பத்தித்திறன் மற்றும் பிற அற்புதமான புதிய அம்சங்களை நீண்ட காலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் Galaxy சுற்றுச்சூழல் அமைப்பு முழுவதும் நீங்கள் முழுமையாக ஆதரிக்கப்படுவதை உறுதிசெய்ய Samsung இந்த முயற்சியை எங்கள் தயாரிப்பு வரிசையில் அளவிடும்.

### கிடைக்குமிடம், விலை மற்றும் சலுகைகள்

Galaxy S22 Ultra 5G (12/256 GB) இப்போது 319,999 ரூபா விலையில் Phantom Black, Burgundy மற்றும் Green வண்ணங்களில் முன்கூட்டிய ஓர்டருக்குக் கிடைக்கிறது. அதே நேரத்தில் Galaxy S22 Ultra 5G (8/256GB) முன்கூட்டிய ஓர்டருக்கு 229,999 ரூபா விலையில் Phantom Black, Pink Gold, Phantom White மற்றும் Green வண்ணங்களில் கிடைக்கிறது. Samsung Galaxy S22 Ultra 5G இன் முன்கூட்டிய ஓர்டர்களுக்கு Galaxy Buds2 மற்றும் 200 GB இலவச Dialog Data வை வழங்குகிறது. அதே நேரத்தில் Galaxy S22 Ultra 5G ஐ முன்கூட்டிய ஓர்டர் செய்யும் பாவனையாளருக்கு Galaxy Buds Live மற்றும் 150GB இலவச Dialog Dataவைப் பெறுவார்கள். Galaxy S22 Ultra 5G அல்லது Galaxy S22 5G ஐ முன்கூட்டிய ஓர்டர் செய்யும் நுகர்வோர் OneDriveஇல் 06 மாதங்களுக்கு 100GB சலுகையையும், 03 மாத Spotify பிரீமியம் சந்தாவையும், Adobe Photoshop Lightroom மற்றும் Adobe Creative Cloud Express இல் 02 மாத பிரீமியம் சலுகையையும் பெறுவார்கள்.

Galaxy S22 Ultra 5G இன் விலை ரூபா 59,999 (6GB+128GB) ஆகும். இதனை John Keels office Automation மற்றும் அங்கீகரிக்கப்பட்ட Softlogic mobile விநியோகஸ்தரிடம் பெற்றுக்கொள்ளலாம். இது அங்கீகரிக்கப்பட்ட பங்காளர்களான Softlogic Retail, Softlogic Max, Singer, Singhagiri மற்றும் Damro Network Partner Dialog, Mobitel மற்றும் Samsung EStore (samsungsrilanka.lk), My Softlogic.lk keellssuper.com மற்றும் Kapruka.com போன்ற இணையத்தளங்களில் பெற்றுக்கொள்ளலாம். Samsung Galaxy 5G தொடர்களைப் பற்றிய புதிய தகவல்களை தெரிந்து கொள்ள https://samsungsrilanka.lk/mobile/5g/ எனும் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

எங்கும் எப்போதும் நீங்கள் Samsung Galaxy Smartphone வாங்கும்போது மன அமைதியை அனுபவியுங்கள். Samsung members app சாதனத்தின் செயற்றிறனை எளிதாக்குகிறது. சிக்கல்களை தீர்க்க helpline உதவுகிறது.

இலங்கையின் Samsung most Love Electronic Brand ஆக தொடர்ச்சியான மூன்று வருடங்கள் Brand Finance Lankas நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இங்கையின் No:1 Smartphone Brand Samsung அனைத்து வயதினரிடமும் குறிப்பாக Gen Z மற்றும் millennial பிரிவுகளில் உள்ளது.

திகதி 06.03.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4698
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 10,871,130.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 6 5 8 8 7 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 53,300,273.20

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1046
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,637,360.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 239,581,278.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து L
சுப்பர் இலக்கம் 18
வெற்றி இலக்கங்கள் 02 09 41 47

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 728
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,129,260.00
G 20 63 64 72
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 100,895,527.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1220
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,902,220.00
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 9 2 9 3 3 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,382,130.80

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழில் போராட்டம் முன்னெடுப்பு




(யாழ். நிருபர்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (07) யாழ்ப்பாணத்தில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், “வரவேண்டும் வர வேண்டும் ஐ.நா. அமைதிப்படை வரவேண்டும், வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, அரசியல் கைதிகளை நிபந்தனையில்லாமல் விடுதலை செய், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு, சர்வதேசத்துக்கு நாம் அழுவது கேட்கவில்லையா?, வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேணடும், தமிழரின் படுகொலைக்கு அனைத்துலக விசாரணை வேண்டும், எங்கே எங்கே உறவுகள் எங்கே?” உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு காய்ச்சலினால் பாலகன் உயிரிழப்பு

## மீசாலையில் சம்பவம்

(யாழ். நிருபர்)

டெங்கு காய்ச்சல் காரணமாக ஒரு வயது 05 மாதங்கள் நிரம்பிய பாலகன் உயிரிழந்துள்ளான்.

கொடிகாமம், மீசாலை வடக்கைச் சேர்ந்த வாகீசன் விதுசன் என்ற பாலகனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

கடந்த 06 நாட்களாக காய்ச்சல் காரணமாக பாலகன் ஆயுர்வேத வைத்தியம் செய்தபின் கடந்த சனிக்கிழமை பிற்பகல் ஐந்து மணிக்கு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு பாலகன் மாற்றப்பட்டான். எனினும், பாலகன் சிகிச்சை பலனின்றி கடந்த சனிக்கிழமை இரவு உயிரிழந்தான் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

டெங்கு காய்ச்சல் காரணமாகவே பாலகனின் இறப்பு இடம்பெற்றதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் இறப்பு விசாரணையை நேற்று முன்தினம் மேற்கொண்டார்.

இதேவேளை, காய்ச்சலினால் பாதிக்கப்பட்டால் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெறுமாறு சுகாதார அமைச்சு கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் இராணுவ புலனாய்வாளர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையுடன் இணைந்து மன்னார் தாராபுரம் பிரதான வீதியில் வைத்து சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஐஸ் ரக போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (06) பகல் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் எருக்கலம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரிடமிருந்து சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஒரு கிலோ ஐஸ் போதைப்பொருள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபரும் கைப்பற்றப்பட்ட ஐஸ் ரக போதைப்பொருளும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# 13 ஆவது திருத்தம் அமுலாகியிருந்தால் 1987ஆம் ஆண்டே தமிழர்களுக்கு தீர்வு கிடைத்திருக்க வேண்டும்

## சார்ல்ஸ் எம்.பி. தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)

13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுலாகியிருந்தால், தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் என்றால் 1987ஆம் ஆண்டே தமிழர்களுக்கு தீர்வு கிடைத்திருக்க வேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தச் சட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருப்பது வேறு. தமிழர்களினுடைய தீர்வின் இலக்கு என்பது வேறு. தமிழர்கள் கௌரவமாக வாழக்கூடிய வகையில் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவந்தால் மட்டும்தான் தமிழர்களுடைய இனப் பிரச்சினைக்கு தீர்வாக இருக்கும். நான் இந்தியத் தூதுவர்களை சந்தித்த போது கூட 13ஆவது திருத்தச் சட்டத்தை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதென தெரிவித்திருந்தேன்.



13ஆவது திருத்தச் சட்டத்தில் எந்தவிதமான காணி அதிகாரங்களும் இல்லை. குறிப்பாக வடமாகாணத்தில் மட்டும் 44வீதமான நிலங்கள் வன இலாகாவிடம் இருக்கின்றன. வன இலாகாவிடம் மாத்திரம் 44வீதமான நிலங்கள் இருக்கின்றபோதும் மகாவலி, வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் போன்றன தன்னிச்சையாக நிலங்களை வர்த்தமானியூடாக கையகப்படுத்தும் அதிகாரம் இருக்கும்போது 13ஆவது திருத்தச் சட்டம் மூலம் அதனை தடுக்க முடியாது. அதில் காணி அதிகாரம் இல்லை. எப்படி 13ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களுக்கு தீர்வாக அமையும்.

13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் என்றால் 1987ஆம் ஆண்டே கிடைத்திருக்கும். மேலும், 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையான தீர்வாக அமையாது என்பது எனது கருத்து – என்றார்.

# மாமனிதர் சிவநேசனின் வித்துடல் புதைக்கப்பட்ட இடத்தில் கஜேந்திரன் எம்.பி. அஞ்சலி

(வவுனியா நிருபர்)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கி.சிவநேசனின் 14ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்று முன்தினம் (06) அவரது வித்துடல் புதைக்கப்பட்ட மல்லாவி, அணிச்சியன் குளம் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் அவரது கட்சியினர் சென்று அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

வட மாகாண பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத்தின் முன்னாள் பொது முகாமையாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாமனிதர் சிவநேசனின் 14ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினமாகும்.

விடுதலைப் புலிகளின் வேண்டுகோளை ஏற்று 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்



சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு 43 ஆயிரத்து 730 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றுக்கு தெரிவாகினார்.

தமிழ் மக்களை தேசிய விடுதலைப் போராட்டத்தின் பின்னால் மக்களை அணி திரட்டும் பணியில் தாயகத்திலும் புலம்பெயர்ந்த மண்ணிலும் ஈடுபட்டவர். ஐரோப்பாவின் பல நாடுகளுக்கும் பல தடவைகள் பயணம் செய்த இவர், ஐரோப்பிய நாட்டின் பல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பல இராஜதந்திரிகளையும் அந்தந்த நாடுகளில் சந்தித்து தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தின் நியாயப்பாடுகள் தொடர்பாகவும், தமிழ் மக்கள் மீது சிங்கள பௌத்த பேரினவாதம் மேற்கொண்டு வரும் இன அழிப்பு தொடர்பாகவும் எடுத்துரைத்து சர்வதேச சமூகத்தின் ஆதரவை திரட்டுவதில் பெரும் பங்காற்றியவர்.

அச்சுறுத்தல்கள் தனக்கெதிராக தொடர்ந்துகொண்டிருந்தபோதும் கூட மிரட்டல்களுக்கு பணியாது தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காக உழைத்த மாமனிதர் சிவநேசனும் சாரதி பெரியண்ணன் மகேஸ்வரராஜாவும் 06.03.2008 வியாழக்கிழமை அன்று கொழும்பிலிருந்து மல்லாவி நோக்கி சென்றுகொண்டிருந்தபோது பிற்பகல் 1.10 மணியளவில் கொல்லர் புளியங்குளம் பகுதியில் இலங்கை இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியினர் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் கொலை செய்யப்பட்டார்.

தேசியத் தலைவர், மாமனிதர் எனும் அதியுயர் விருதினை வழங்கியதுடன், வித்துடல் மல்லாவி அணிச்சியன் குளம் பிரதேசத்தில் பிரத்தியேகமாக விதைக்கப்பட்டது. விதைக்கப்பட்ட இடத்தில் இருந்த கல்லறை அழிவடைந்து காணப்பட்ட நிலையில் அவரது 14ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு குறித்த இடத்தில் அவரது கல்லறை அமைக்கப்பட்டது.

குறித்த கல்லறையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட கட்சிசார் உறுப்பினர்கள் சென்று அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

# கிளிநொச்சியில் 7 வருடங்களை கடந்தும் இடமாற்றம் செய்யப்படாத அதிபர்கள்

## கல்விச் சமூகம் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி வடக்கு மற்றும் தெற்கு கல்வி வலயங்களிலுள்ள பலபாடசாலைகளில் அதிபர்கள் ஏழு வருடங்களைக் கடந்தும் இடமாற்றம் வழங்கப்படாது தொடர்ந்தும் கடமையாற்றி வருகின்றனர் என பாதிக்கப்பட்டுள்ள ஏனைய அதிபர்கள் கவலை தெரிவித்துள்ளதோடு, கல்விச் சமூகமும் இது தொடர்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளில் அதிபர்கள் ஏழு வருடங்களைக் கடந்தும் தொடர்ந்தும் அதே பாடசாலைகளில் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அவர்கள், வழமையான இடமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இதனை விரைவாக மேற்கொள்ள மாகாண மற்றும் வலயக்கல்வித் திணைக்களங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, இது தொடர்பில் கிளிநொச்சி தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜனை தொடர்புகொண்டு வினவியபோது ஏழு வருடங்களை பூர்த்திசெய்த அதிபர்களின் இடமாற்றம் தொடர்பில் மாகாண கல்வி அமைச்சின் கவனத்துக்கு தகவல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

# நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்மன் கொடியேற்றம்



யாழ்ப்பாணம், நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்மன் தேவஸ்தான மஹோற்சவம் நேற்று முன்தினம் (06) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (யாழ். நிருபர்)

# நாடாளுமன்ற அமர்வுகள் இன்றிலிருந்து வெள்ளிவரை

## வேலையாட்கள் நஷ்டஈட்டு திருத்தச் சட்டமூலத்துக்கான இரண்டாவது மதிப்பீடு 10இல்

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் உள்ளிட்ட சில சட்டமூலங்கள் இந்த வாரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய நாடாளுமன்றம் இன்று (08) முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரை கூடவுள்ளது. இன்று முற்பகல் 10.00 மணிக்கு நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகவிருப்பதுடன், முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை புலமைச் சொத்து (திருத்தச்) சட்டமூலத்தை (இரண்டாவது மதிப்பீடு) விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், நாளை 09ஆம் திகதி முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இன்று மற்றும் நாளை ஆகிய இரு தினங்களில் முற்பகல் 10.00 மணி முதல் 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தினங்களில் பிற்பகல் 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப 4.50 மணி முதல் பி.ப 5.30 மணிவரையான காலப் பகுதியில் முறையே ஆளும் கட்சி, எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதமும் நடைபெறவுள்ளது.

10ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் பி.ப 12.30 மணி வரை வேலையாட்கள் நஷ்டஈடு (திருத்தச்) சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதன் பின்னர் மதிய போசன இடைவேளை இன்றி பி.ப 12.30 முதல் பி.ப 5.30 மணிவரை நாட்டில் நிலவும் எரிசக்திப் பிரச்சினை தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்துக்கு நேரம் ஒதுக்குவதற்கும் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதேநேரம், 11ஆம் திகதி மு.ப 10.00 மணி முதல் 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரனவால் முன்வைக்கப்பட்டுள்ள "60 வயதைத் தாண்டியவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்" தொடர்பான தனிநபர் பிரேரணையும், நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டாரவால் முன்வைக்கப்பட்டுள்ள "உள்நாட்டு விதை உற்பத்திச் செயன்முறையினை உயிர்ப்பூட்டுதல்" தொடர்பான தனிநபர் பிரேரணையும் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி விஜேரத்னவால் முன்வைக்கப்பட்ட "இலங்கையில் உளவியல் ஆலோசகர்களை / உளவியல் சிகிச்சையாளர்களை ஒழுங்குறுத்தல்" குறித்த தனிநபர் பிரேரணையும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதன் பின்னர் பி.ப 3.00 மணி முதல் பி.ப 5.30 மணி வரை காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலத்தை (இரண்டாவது மதிப்பீடு) விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.



ஹம்பாந்தோட்டை, மிரிஜ்ஜவில ஏற்றுமதி திட்ட வலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சீமெந்து தொழிற்சாலை நேற்று (07) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன)




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு கோரி ஐக்கிய நாடுகள் சபையின் சுய வேலைவாய்ப்பு வர்த்தக சங்கம் உள்ளிட்ட சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் நேற்று (07) கொழும்பு ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயத்தின் முன்னால் இடம்பெற்றது.

# இலங்கை - இந்தோனேஷிய இராஜதந்திர உறவுகளுக்கு 70 ஆண்டுகள் பூர்த்தி



இலங்கையும் இந்தோனேஷியாவும் பண்டைய காலங்களிலிருந்து சமய, கலாசார மற்றும் சமூக பொருளாதார உறவுகளைப் பகிர்ந்து கொள்வதாகவும், இந்த வருடம் இரண்டு நாடுகளும் இராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்ததன் 70ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கின்றது என்றும் இந்தோனேஷியாவுக்கான இலங்கைத் தூதுவர் யசோஜா குணசேகர குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை - இந்தோனேஷிய வரலாற்று உறவுகள் தொடர்பான இணைய வழியான கருத்தரங்கொன்றை இந்தோனேஷியாவிலுள்ள இலங்கைத் தூதரகம், களனிப் பல்கலைக்கழகம் மற்றும் இந்தோனேஷியா பல்கலைக்கழகத்துடன் இணைந்து அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. இதன்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்விமான்கள் உட்பட 104 பங்கேற்பாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்தோனேஷியா, இஸ்ரேல் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த வரலாறு, மொழி மற்றும் மதம் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற ஐந்து கல்வியியலாளர்கள் இந்நிகழ்வில் உரையாற்றினர்.

முதல் அமர்வில், மருத்துவ வரலாற்றாசிரியர் கலாநிதி. ஜமீர் கரீம், இலங்கையின் மலாய் சமூகத்தின் வரலாறு மற்றும் பாரம்பரியம் மற்றும் இலங்கைக்கான பங்களிப்பு குறித்து கலந்துரையாடினார். இந்தோனேஷிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பீட்டர் கேரி, 18ஆம் நூற்றாண்டில் சிலோன் மற்றும் டச்சு கிழக்கிந்தியத் தீவுகள் குறித்து விளக்கமளித்தார்.

இரண்டாவது அமர்வில், இஸ்ரேலின் ஹீப்ரு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ரோனிட் ரிச்சி இலங்கையில் உள்ள இந்தோனேஷிய மலாய் நாட்டைச் சேர்ந்த நாடுகடத்தப்பட்டவர்கள் குறித்து விரிவாகக் குறிப்பிட்டதுடன், இந்தோனேஷிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அஸ்யுமார்டி அஸ்ரா இலங்கை - இந்தோனேஷிய வரலாற்று உறவுகள் குறித்து மதக் கண்ணோட்டத்தின் மூலம் கலந்துரையாடினார். களனிப் பல்கலைக்கழகத்தின் கலாநிதி ரொமோலா ரஸோல் இலங்கை மலாய் மொழி குறித்து விளக்கமொன்றை நிகழ்த்தினார்.

மூன்றாவது அமர்வில், இந்தோனேஷிய பல்கலைக்கழகத்தின் மனிதநேய பீடத்தின் பீடாதிபதி கலாநிதி பொன்டன் கனுமோயோசோ மற்றும் களனி பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் நிலையத்தின் பணிப்பாளரும் பேராசிரியருமான நீலாக்ஷி சி.பிரேவர்தன ஆகியோர் இரு பல்கலைக்கழகங்களுக்கிடையில் எதிர்கால கல்வி ஒத்துழைப்பு குறித்து கலந்துரையாடினர்.

# எரிவாயு தட்டுப்பாட்டால் மக்கள் பெரும் அசௌகரியம்

## விரைந்து தீர்வை பெற்றுத்தருமாறும் கோரிக்கை




(செ. தி. பெருமாள்)

நாட்டில் பல பகுதிகளில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், பேக்கரிகள், உணவகங்கள், தேநீர்க்கடைகள் பல மூடப்பட்டுள்ளன.

மேலும் எரிவாயுவை உபயோகிக்கும் நகர, கிராம, பெருந்தோட்ட மக்கள் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக பல இன்னல்களை சந்தித்து வருவதாக புகார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து உடனே எரிவாயு தட்டுப்பாட்டை நீக்கி பாவனையாளர்களுக்கு எரிவாயு கிடைக்க வழி செய்யும்படி வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# உலக வங்கியின் நிதி உதவியில் வீதி அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பம்



உலக வங்கியின் உதவியுடன் இரத்தினபுரி மாவட்டத்தில் வீதி அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பமாகியுள்ளதாக நெடுஞ்சாலை அமைச்சு தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் உதவியுடன் முழு நாட்டையும் உள்ளடக்கிய 3000 கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் பல வீதிகளின் அபிவிருத்தித் திட்டங்கள் ஆளுந்தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

அதன்படி, கும்பகொட ஆரா சந்தியிலிருந்து கடதாசித் தொழிற்சாலை, தொழிற்சாலை - தலாவ வீதி (4.15 கி.மீ.), கலகெடி ஆரா - நுகே குறுக்கு வீதி (1 கி.மீ.), ஹிங்குர ஆரா - கெட்டகல் ஆரா வீதி, ஹிங்குரா ஆரா பழைய வீதி, ஹிங்குரா ஆரா கிராம வீதி (கி.மீ. 4.4), வெலேகும்புர சீதாகல, உட கந்த வீதி (8.10 கி.மீ), பம்பஹின்ன கிஞ்சிகுனே வீதி (2.8 கி.மீ) மற்றும் தம்புலுவான கல்துர வீதி (2 கி.மீ.) என்பவற்றின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக 833 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ 4.15 கிலோமீற்றர் நீளமான கும்பகொட ஆரா சந்தியிலிருந்து கடதாசி ஆலை - தலாவ வீதியின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

# விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும்

## ரோஹிணி குமாரி கவிரத்ன எம்.பி. வலியுறுத்து



(மாத்தளை நிருபர்)

மாத்தளை மாவட்ட லக்கல தேர்தல் தொகுதியில் மகாவலி விவசாயப் பகுதியின் விவசாயிகளுக்கான அரசினால் வழங்கப்படக்கூடிய நிவாரணங்கள் நிறுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பெரும் இன்னல்களை எதிர்நோக்கி யுள்ளதாக மாத்தளை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி கவிரத்ன தெரிவித்தார்.

மேலும், விவசாயிகளை பாதுகாத்து பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரம் சிறப்புற அரசு அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு சமையல் எரிவாயு, வாகனங்களுக்கான எரிபொருள் வரிசை, மண்ணெண்ணெய், குழந்தைகளுக்கான புட்டிப்பால் மற்றும் ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்காக மக்கள் நீண்ட வரிசைகளில் இரவு பகலாக நிற்பதை அவதானிக்க முடிகின்றது. இந்நிலை தொடருமானால் நாட்டின் எதிர்காலம் மேலும் மேலும் கேள்விக்குறியாகவே இருக்கும்.

அண்மையில், கட்டிய மனைவிக்கும் பெற்றெடுத்த குழந்தைகளுக்கும் உணவு வழங்க முடியாத ஒரு குடும்பத் தலைவன் தன்னுடைய வீட்டிலிருக்கும் மூன்று கதிரைகளை விற்று சாப்பாட்டு பொருட்களை வாங்கி கொடுத்துவிட்டு சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் நாட்டில் பொருளாதார நெருக்கடி அதலபாதாளத்துக்கு சென்றுகொண்டிருப்பதற்கான ஓர் சான்றாகும். இது போன்ற மோசமான நிலைமைகள் நாடு முழுவதும் மேலும் பரவுவதற்கு முன்னால் நாட்டையும் நாட்டு மக்களினதும் உயிர்களையும் பாதுகாத்திட அரசு அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நுவரெலியா கிளையின் திறப்புவிழா இன்று

(தலவாக்கலை நிருபர்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கிளை அலுவலகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில், இன்றைய தினம் (08) நுவரெலியாவில் மாவட்ட அலுவலகமொன்றை குயின் எலிசபெத் கட்டடத்தில் மேலுமொரு கிளை அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இலங்கையில் வாழும் இனங்களுக்கு மத்தியில் இந்திய வம்சாவளி தமிழ் இனத்தவரும் முக்கியமானவர்கள். இவர்கள் 19ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட ஆங்கிலேய ஆட்சியாளர்களால் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு நாட்டில் இயங்கி வந்த பெருந்தோட்டத்துறையில் பணிக்கமர்த்தப்பட்டனர்.

இந்திய வம்சாவளி மக்கள் நாட்டின் சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய ஏழ்மைநிலையில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் இக்குழுவில் அதிக கவனம் செலுத்தி அவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும், உரிமை மீறல்களின் போது எளிதாக அவர்கள் தங்களது பிரதேசத்தில் இருக்கும் அலுவலகத்துக்கு சென்று மீறல் சம்பந்தமான முறைப்பாட்டை மேற்கொள்வதற்கு வழி வகுக்கும் வகையில் இந்த அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இவ் அலுவலகத்தின் திறப்பு நிகழ்வானது இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் எஸ்.ஈ.ஸ்கொக்கினால் திறந்துவைக்கப்படவுள்ளதுடன், இந்நிகழ்வானது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான ரோஹினி மாரசிங்க தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களான சங்கைக்குரிய கலுபஹன பியரத்ன ஹிமி, கலாநிதி. விஜித நாணயக்கார, வைத்தியர் நிமல் கருணாசிறி மற்றும் அனுஷியா சண்முகநாதன் ஆகியோருடன் ஆணைக்குழுவின் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டக்ஸனின் பூதவுடல் நல்லடக்கம்





(மன்னார் நகர் நிருபர்)

தேசிய உதைபந்தாட்ட அணி வீரர் டக்ஸன் பியூஸ்லஸின் பூதவுடல் ஆயிரக்கணக்கான மக்களின் அஞ்சலிக்கு மத்தியில் நேற்று (07) நல்லடக்கம் செய்யப்பட்டது.

மன்னார் பனங்கட்டு கொட்டுப் பகுதியை சேர்ந்த டக்ஸன் பியூஸ்லஸ் மாவட்ட அணி, மாகாண உதைபந்தாட்ட அணி மற்றும் தேசிய அணி வீரராக பிரகாசித்து வந்த நிலையில் மாலைதீவு அணி ஒன்றுக்காக ஒப்பந்த ரீதியாக விளையாடிவந்த நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.

அன்னாரின் உடல் பொது மக்களின் அஞ்சலிக்காக அவரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று ஊர்வலமாக நல்லடக்கத்துக்காக எடுத்து செல்லப்பட்டது.

மதத்தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், விளையாட்டு வீரர்கள், இலங்கை உதைபந்தாட்ட அணி வீரர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் என பலர் இறுதி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

பியூஸ்லஸின் உடல் வீட்டிலிருந்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு புனித செபஸ்தியார் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாட்டுக்கு பின்னர் மன்னார் பொது மைதானத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் மன்னார் பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# குறைந்த வருமானம் பெறும் 626 குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவிக்கான காசோலைகள் வழங்கிவைப்பு





ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 576 கிராம சேவகர் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குறைந்த வருமானம் பெறும் 626 குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவிக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (06) தங்காலை மாநகர சபை மண்டபத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

''உங்களுக்கு வீடு – நாட்டுக்கு எதிர்காலம் வீடமைப்பு'' உதவித் திட்டத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்ட ஆரம்ப விழாவின் போது பிரதமரினால் குறியீட்டு ரீதியாக பத்து பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கிவைக்கப்பட்டன.

உங்களுக்கு வீடு – நாட்டுக்கு எதிர்காலம் வீடமைப்பு உதவித் திட்டத்தின்கீழ் 588 புதிய வீடுகள், மிஹிந்து நிவன வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தமது பிள்ளைகளை பௌத்த சாசனத்துக்கு அர்ப்பணித்த குறைந்த வருமானம் பெறும் 14 பயனாளிகளுக்கும், ஊனமுற்ற அல்லது மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கு வீடுகளை பெற்றுக் கொடுக்கும் செவன உதவித் திட்டத்தின் கீழ் 24 பயனாளிகளுக்கும் இதன்போது காசோலைகள் வழங்கப்பட்டன.

உங்களுக்கு வீடு – நாட்டுக்கு எதிர்காலம் வீடமைப்பு உதவித் திட்டத்தின் கீழ் ஒரு வீட்டுக்கு 6இலட்சத்து 50ஆயிரம் ரூபாவும், மிஹிந்து நிவஹன திட்டத்தின் கீழ் ஒரு வீட்டுக்கு 6இலட்சத்து 50ஆயிரம் ரூபாவும் செவர உதவித் திட்டத்தின் கீழ் ஒரு வீட்டுக்கு 7இலட்சத்து 50ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுவதுடன், அதற்காக மதிப்பிடப்பட்ட செலவு 402 மில்லியன் ரூபாவாகும்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின்பேரில் இந்த வீடமைப்பு உதவித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த நீர்ப்பாசனத்துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ,

மிகவும் இக்கட்டான காலப்பகுதியாக இருப்பினும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் உங்களின் துன்பங்களைப் போக்கும் அதே வேளையில் உங்கள் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு பிரதமரின் எண்ணக்கரு மற்றும் தொலைநோக்கு அடிப்படையில் நிதியை வழங்கி ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீடுகளை கட்டி மகிழ்ச்சியாக இருக்க உங்களுக்கு வாய்ப்பளித்துள்ளோம் என்று குறிப்பிட்டார்.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த,

இந்த திட்டத்துக்கான முழு ஆலோசனையும், அனுசரணையும் மற்றும் வழிகாட்டுதலும் பிரதமரால் வழங்கப்பட்டது. இந்த வருடத்துக்கான எமது இலக்கு 30ஆயிரம் வீடுகளாகும். இதுவரை 24ஆயிரம் வீடுகளின் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

உண்மையான பிரச்சினையை அடையாளம் கண்டு அவ்பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் அரசியல் பிரமுகர்கள் இந்த நாட்டில் மிகக் குறைவு. அவ்வாறான உண்மையான பிரச்சினைகளுக்கு பதில் சொல்லக்கூடிய அரசியல் பிரமுகர் ஒருவர் இருப்பாராயின் அது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒருவரேயாவார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் மக்களுக்கு நியாயமானதை வழங்குபவர்கள் தற்போதைய பிரதமர் உட்பட இந்த ராஜபக்ஷர்களே தவிர, வேறு யாரும் இல்லை என்பதை இந்த நாட்டு மக்களுக்கு நாம் பொறுப்புடன் கூறுகின்றோம் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, தென் மாகாண ஆளுநர் விலீ கமகே, இராஜாங்க அமைச்சர்களான டீ.வீ.சானக்க, இந்திக அனுருத்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான அஜித் ராஜபக்ஷ, தென் மாகாண சபையின் தவிசாளர் சோமவங்ச கோதாகொட உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 07.03.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 034 65 4 | 040 7 85 |
| கனேடியன் டொலர் | 043 7756 | 05 6306 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 20 0036 | 21 2683 |
| யூரோ | 103 8535 | 113 238 |
| ஜப்பான் யென் | 0 6061 | 0 6703 |
| சிங்கப்பூர் டொலர் | 034 767 | 038 7 3 |
| ஸ்ரேலிங் பவுன் | 15 5600 | 158 133 |
| சுவிஸ் பிரான்ங் | 103 1470 | 110 7288 |
| ஐ.அ.டொலர் | 087 4 7 | 1 1 8881 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 424 7543 |
| குவைட் | குவைட் தினார் | 554 7426 |
| ஓமான் | ஓமான் றியால் | 413 6613 |
| கட்டார் | கட்டார் றியால் | 44 046 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 42 74 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 44 42 |

# படகுக்காக அண்ணனை கொலை செய்த தம்பி

## கொக்கலவில் சம்பவம்

கொக்கல, மோதரகொட பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு வலுவடைந்ததில், நபரொருவர் தனது அண்ணனை தாக்கி கொக்கல ஓயாவில் வீசி கொலை செய்துள்ளதாக ஹபராதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொக்கல, மோதரகொட பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடைய மீனவரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான உயிரிழந்த நபரின் தம்பியும் மீனவர் என்பதுடன் படகொன்று தொடர்பில இருவருக்கும் இடையில் நீண்ட நாட்கள் முரண்பாடு நிலவிவந்துள்ளதாகவும், சந்தேகநபரான உயிரிழந்தவரின் இளைய சகோதரர் நேற்று (07) அதிகாலை 1.30 மணியளவில் தனது அண்ணனை தாக்கி வாவியில் தள்ளிவிட்டுள்ளார். அதன் பின்னர் அயலவர்கள் அவரை மீட்டு கராப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதுடன் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் அந்தப் பிரதேசத்திலிருந்து தப்பித்துச் சென்றுள்ளதுடன் ஹபராதுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் தலைமையில் பொலிஸ் பரிசோதகர் அசோக கருணாரத்ன உள்ளிட்ட அதிகாரிகளினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# லொறி – மோட்டார் சைக்கிள் விபத்து!

## நவகத்தேகம பகுதியைச் சேர்ந்த நபரொருவர் பலி

**(ரஸீன் ரஸ்மின்)**

ஆனமடுவ போதிக்கட்டுவ பகுதியில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம், நவகத்தேகம பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நபர் ஒருவரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார்.

நவகத்தேகம பகுதியிலிருந்து ஆனமடுவ பகுதியை நோக்கிச் சென்ற லொறியொன்றும், எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதியதில் இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவரை அங்கிருந்தவர்கள் உடனடியாக ஆனமடுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக இருவரும் அங்கிருந்து புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

எனினும், மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நபர், அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபரின் சடலம் புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆனமடுவ பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




### கொலைச் சம்பவம் - அம்பலாங்கொடை

அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தேகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் நபரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 05ஆம் திகதி இரவு வாடகை முச்சக்கரவண்டியில் உறவினரொருவரின் வீட்டில் நிறுத்திவிட்டு மீண்டும் வீடு திரும்பியபோது கந்தேகொட புகையிரத குறுக்கு வீதிக்கு அருகில் நபரொருவரினால் குறித்த நபர் தாக்கப்பட்டுள்ளார். இதனால், குறித்த நபர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார். கந்தேகொட, அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் பலத்த காயங்களுக்குள்ளான குறித்த நபர் சிகிச்சைக்காக பலபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

கந்தேகொட, அம்பலாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பலப்பிட்டிய மேலதிக நீதவானினால் நீதவான் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனைகள் நேற்று இடம்பெற்றிருந்தன.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய கந்தேகொட, அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாங்கொடை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

**கல்கிசை**

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை பிரதேசத்தில் நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு கல்கிசை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

48 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரின் நிரந்தர பதிவு உறுதி செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்ய சென்ற சந்தர்ப்பத்தில் அவ்விடத்திலிருந்து கண்ணாடி போத்தலை உடைத்து சந்தேகநபர் தனது கழுத்தை அறுத்துக்கொள்ள முயற்சித்துள்ளார். அதனை தடுக்க முயற்சித்த பொலிஸ் அதிகாரி காயங்களுக்குள்ளான நிலையில் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வருகிறார்.

குறித்த சந்தேகநபர் இதற்கு முன்னரும் இவ்வாறு கழுத்தை அறுத்துக்கொள்ள முயற்சித்துள்ளதுடன், கல்கிசை நீதவான் நீதிமன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வழக்கொன்று தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**ஹோமாகம**

ஹோமாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹோமாகம நகரில் நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 15 கிராம் 560 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொம்மாவேலி பிரதேசத்தில் யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய கடந்த 05ஆம் திகதி இரவு முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 189 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், சந்தேகநபர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பொம்மாவேலி பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவரை எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**மாளிகாவத்தை**

மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகாவத்தை மற்றும் பபாபுள்ளே பிரதேசத்தில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 10 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவரும் மேலும் 10 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாளிகாவத்தை மற்றும் கொழும்பு 15 ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 38 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். மாளிகாவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**அங்குலாணை**

அங்குலாணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சயுருபுர தொடர்மாடி குடியிருப்பு பிரதேசத்தில் அங்குலாணை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அங்குலாணை பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரான குறித்த பெண் நேற்று முன்தினம் மொரட்டுவை நீதவான் நீதிமன்றத்தில் அஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அங்குலாணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெதோதிஸ்த பள்ளி பிரதேசத்தில் அங்குலாணை பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும் அங்குலாணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமுத்ராசன்ன பிரதேசத்தில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட மற்றுமொரு சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அங்குலாணை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை அங்குலாணை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### கோடாவுடன் நபரொருவர் கைது

**கட்டுநாயக்க**

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹினடியன பிரதேசத்தில் நேற்று முன்தினம் கட்டுநாயக்க பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சட்டவிரோத மதுபான தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் ஆயிரத்து 181 லீற்றர் கோடாவுடன் (06கோடா பீப்பாய்) நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹினடியன பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். மினுவாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### மோட்டார் சைக்கிள்களை திருடிய இருவர் கைது

**மஹஓய**

ஹீரோ ஹொண்டா ரகத்தைச் சேர்ந்த மோட்டார் சைக்கிளொன்றை திருடிய சம்பவம் தொடர்பில் கடந்த 05ஆம் திகதி மஹஓய பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து, குறித்த மோட்டார் சைக்கிள் மற்றும் சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் பொல்லேபெத்த பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மஹஓய பிரதேசத்தைச் சேர்ந்த 21 மற்றும் 36 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மஹஓய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**தொகுப்பு:- நா.தினுஷா**




# அம்பாறை மாவட்டத்திலும் எரிவாயு தட்டுப்பாடு; முக்கிய நிறுவனங்களுக்கு கட்டுப்பாடுகளுடன் விநியோகம்

## பொதுமக்கள் பெரும் அசௌகரியம்





(பாறுக் ஷிஹான்)

நாடளாவிய ரீதியில் மீண்டும் பாரிய சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகின்றமையினால் அம்பாறை மாவட்டத்தில் அதன் தாக்கத்தை அவதானிக்க முடிகின்றது. கடந்த 4 நாட்களுக்கு மேலாக அம்மாவட்டத்தில் உள்ள பல்வேறு விற்பனை முகவர்களிடம் இருந்து எரிவாயு சிலிண்டர்களை நுகர்வோர் பெறமுடியாமல் சிரமப்படுவதைக் காண முடிகின்றது.

மேலும், எந்தவொரு சமையல் எரிவாயு சிலிண்டர்களும் சில தினங்கள் விநியோகப் படாமையினால் பல பகுதிகளிலும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு உணரப்பட்டுள்ளது.

இது தவிர வைத்தியசாலைகள், இராணுவ முகாம்கள், தகனசாலைகள், தொழிற்சாலைகள், உணவகங்கள், பேக்கரிகள் ஆகியவற்றுக்கு கையிருப்பில் இருந்த எரிவாயு கட்டுப்பாடுகளுடன் விநியோகம் செய்யப்பட்டு வந்தன.

தற்போது எரிவாயு முடிவடைந்துள்ளதுடன், கையிருப்பில் களஞ்சியப்படுத்தப்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் முடிவடைந்தமையினால் பெரும் சிரமங்களை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் பல உணவங்கள், சுமார் 100க்கும் அதிகமான பேக்கரிகள் சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளன. பல உணவகங்களில் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. வீடுகளிலும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 02 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு கையளிப்பு




(மட்டக்களப்பு நிருபர்)

காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் இரண்டு மில்லியன் பெறுமதியான 06 ஒட்சிசன் பிறப்பாக்கி இயந்திரங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (05) மாலை 7.30 மணியளவில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கிவைக்கப்பட்ட குறித்த இயந்திரத்தை காத்தான்குடி பத்ரிய்யாஹ் ஜும்ஆப் பள்ளிவாயலின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ்.எம்.ஜாபிரிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வானது வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ்.எம்.ஜாபிர் தலைமையில் இடம்பெற்றதுடன், பத்ரிய்யாஹ் ஜும்ஆப் பள்ளிவாயல் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், தாதி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.

# சுரகிமு கங்கா வேலைத்திட்டத்தில் கிளிவெட்டி ஆற்றில் நீர்வாழைத் தாவரங்கள் பிரித்தெடுப்பு



(மூதூர் நிருபர்)

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைவாக "ஆறுகளை பாதுகாப்போம்" சுரகிமு கங்கா எனும் தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் மாவிலாறு நீர்ப்பாசன பிரிவின்கீழ் உள்ள கிளிவெட்டி ஆற்றில் உள்ள நீர்வாழைத் தாவரங்களை எடுத்து சேதனப்பசளைத் தயாரிப்பதற்காக பிரித்தெடுப்பதற்காக நீர்வாழைத் தாவரங்களை பிரித்தெடுக்கும் வேலைத்திட்டம் நேற்று (07) கிளிவெட்டி ஆற்றில் முன்னெடுக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் கிளிவெட்டி ஆற்றிலிருந்து மாவிலாறு ஆறு வரையிலான சுமார் 06 கிலோ மீற்றர் தூரமுள்ள நீர்வாழைத் தாவரங்கள் அகற்றப்படவுள்ளன.

இவ் நீர்வாழைத் தாவரங்களை பிரித்தெடுக்கும் பணியில் சேருநுவர சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் முன்னெடுத்திருந்தனர். இந்த தேசிய வேலைத்திட்டத்தின் திருகோணமலைக்கான வேலைத்திட்டம் கிளிவெட்டி ஆற்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிழக்கு மாகாண பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிழக்கு மாகாண பணிப்பாளர் ம.சிவக்குமார், சேருநுவர உதவிப் பிரதேச செயலாளர் வி.துலாஞ்சனன், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருமலை சிறைக்கைதிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு






(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை சிறைச்சாலையும் திருகோணமலை சிறைச்சாலை சிறைக் கைதிகள் நலன்புரி சங்கமும் இணைந்து திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் 75 பிள்ளைகளுக்கு பாதணி மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப் தலைமையில் திருகோணமலை நகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் சிறைக்கைதிகள் மற்றும் விளக்கமறியல் கைதிகளின் பிள்ளைகளுக்கே கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்த குமார டேப், பிரதான சிறைப்பாதுகாவலர் சம்பத் ஜெயவர்த்தன, திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய நோயல் இம்மானுவேல் ஆண்டகை, சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் பாஸ்கரன் மற்றும் சங்கத்தின் உறுப்பினர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், கைதிகளின் பிள்ளைகள், பாதுகாவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

## போடியார் புலம்பல்!



பொருளாதார நெருக்கடிய சமாளிக்க தியாகங்களை மேற்கொள்ள வேண்டுமாம் எண்டு அந்த காணி பிடிக்கிற கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா பொடிச்சி சொன்னதக்கேட்டன்...

சோக்கான திட்டம்தான் ஒரேயடியா எல்லோரையும் சாகடிக்கிறதுக்கு இது நல்லம்... முதலில அந்த அண்ணன் தம்பி சித்தாப்பா மகன் எல்லாரையும் தோளுல போட்ட சிவப்பு துண்ட கோமணம் கட்டித்து தியானம் பண்ண சொல்லுங்க புள்ள! எல்லாம் சரிவரும்...!

# ஆரையம்பதியில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தினம் - 2022



(மட்டக்களப்பு நிருபர்)

உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தினை முன்னிட்டு அதன் முதலாவது நிகழ்வு மண்முனைப்பற்று பிரதேச செயலகத்தினால் ஆரையம்பதி சிறுவர் பூங்காவுக்கு அருகில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வானது, மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி. ந.சத்தியானந்தி தலைமையில் நேற்று முன்தினம் (06) பி.ப. 3.30 மணிக்கு ஆரம்பமானதுடன், இதில் குடும்ப வன்முறை தொடர்பான வீதியோர நாடகம் சூரியா கலாசார குழுவினரால் அளிக்கை செய்யப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.வி.லோகினி, கிராமசேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஆரையம்பதி கிழக்கு மாதர் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், சிறுவர் கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தென்கிழக்குப் பல்கலையில் நியமனம் பெற்ற புதிய விரிவுரையாளர்களுக்கு பயிற்சிப்பட்டறை

(மாளிகைக்காடு நிருபர்)

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டவாறு, ஜனாதிபதியின் திட்டத்தை யதார்த்தமாக்கும் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் எண்ணக்கருவில் உருவான, பல்கலைக்கழகத்தில் புதிதாக நியமனம்பெற்ற விரிவுரையாளர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான பயிற்சிப்பட்டறை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று (07) பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வு ஊழியர்கள் மேம்பாட்டு மையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் ஏ.ஜெஃபர் ஆதம்பாவா தலைமையில் நடைபெற்றது.

மேலும், இந்நிகழ்வின் பயிற்சிப்பட்டறையின் வளவாளராக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டு விரிவுரை நிகழ்த்தினார். தனது விரிவுரையில், நிகழ்காலத்தில் இலங்கை போன்ற நாடுகளில் இத்தகைய விரிவுரையாளர்கள் பணி தொடர்பான புதிய நோக்கமும் தேவையும் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது தொடர்பிலும் பொறுமையாக விருத்தி செய்யவேண்டிய சமூகப் பிரிவினராக விரிவுரையாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை தொடர்பிலும் விரிவுரையாளர்கள் மிக விரிவான



பாடத்திட்டங்களை தயாரித்து தொடர்ச்சியாக அவற்றை மீட்டுக்கொண்டிருத்தல் வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், பல்கலைக்கழக கல்வி நிறுவனங்களில் போதியளவு அறிவை வழங்குதல் மட்டும் போதுமானதன்று. அத்தகைய அறிவை நடைமுறை வாழ்வில் பிரயோகிப்பதற்கான தேர்ச்சிகளை விருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்துதல், சமூக இலக்குகள், சமூக தொழிற்பாடுகள், சமூக அசைவியக்கம், சமூக முன்னேற்றம் போன்ற ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இயங்கியல் நடைமுறைகளில் மையச் சக்கரமாக தொழிற்படும் வினைத்திறனையும், விளைத்திறனையும் தீர்மானிப்பவர்கள் விரிவுரையாளர்களே என்றும் விரிவுரையாளர்கள் என்ற நோக்கில் மாத்திரமின்றி சமூக மாற்றங்களை வழிப்படுத்துபவர்கள், விசைப்படுத்துபவர்கள் என்ற முறையிலும் முக்கியமானவர்கள்.

பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்கள் இயல்பாக உயரிய சமூகத் தொடர்புகளை பெறுவதால், உயரிய சமூக அங்கீகாரத்தைப் பெறுகின்றனர். பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்களுக்கான சமூக அந்தஸ்து ஒப்பீட்டு ரீதியில் உயர்வானது என்றும் குறிப்பிட்டார். தொடர்ந்தும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணியாற்றுவதற்கான மொழியறிவு, விடய உள்ளடக்கம், கற்பித்தல் நுட்பங்கள் மற்றும் சமூக திறன்கள் என்பன போதுமானதாகயில்லை என்று உணரப்பட்டுள்ளது. புத்துணர்ச்சி நோக்கமும் தொடர்கல்வி ஊக்கமும், பன்மொழித் தேர்ச்சியும், தகவல் தொழில்நுட்பத் தகைமையும், எங்கும் எப்போதும் பணியாற்றும் மனப்பாங்கும் கொண்டவர்களே விரிவுரையாளராக பணியாற்ற முடியும் என்ற புதிய எண்ணக்கரு வலுப்பெற்றுள்ளது. இவ்வாறு செய்யுமிடத்து விரிவுரையாளர்கள் மாறிவரும் வகிபங்கினை வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் சமூக பொறுப்புணர்வுடனும் நிறைவேற்ற முடியும். இவை தொடர்பான ஆய்வுகளும் எதிர்காலத்தில் ஊக்குவிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

# அம்பாறையில் வெள்ளரிப்பழ விற்பனை அதிகரிப்பு




(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக கரையோரப் பகுதிகளில் பிரதான வீதியோரங்களில் அங்காங்கே வெள்ளரிப்பழ விற்பனை அதிகரித்துள்ளது.

குறிப்பாக சம்மாந்துறை - அம்பாறை பிரதான வீதி, கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியோரங்களில் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டிகளில் வெள்ளரிப்பழத்தினை வியாபாரிகள் கொண்டுவந்து விற்பனைசெய்து வருகின்றனர். இதனை பொதுமக்கள் ஆர்வத்துடன் இவ்வெள்ளரிப்பழத்தினை கொள்வனவில் ஈடுபடுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இம்மாவட்டத்தில் தற்போது நிலவி வருகின்ற வறட்சியான காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள உடல் உஸ்ணத்தை தவிர்ப்பதற்காக இவ்வெள்ளரிப்பழம் உட்பட ஏனைய பழ வகைகளை சாப்பிடுவதில் மக்கள் அதிக நாட்டம் கொண்டு வருகின்றனர்.

இது தவிர, தற்போது அதிக வெப்பம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் வெள்ளரிப்பழத்துக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன், 150 ரூபா முதல் சுமார் 350 ரூபா வரை இவ் வெள்ளரிப்பழம், சிறியது முதல் பெரியது வரையான பருமனுக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

பெரும்பாலும் வெப்பமான காலங்களிலேயே அதிகமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான்குளம், செங்கலடி, களுதாவளை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பெருமளவில் வெள்ளரிப் பயிர்ச்செய்கை பண்ணப்பட்டு வருவதுடன், இவை ஏனைய ஊர்களுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன.

# மத்துகம பெண் கொலை விவகாரம்! சந்தேகநபரொருவர் கைது

மத்துகம பிரதேசத்தில் பெண்ணொருவரை துப்பாக்கிச்சூடு நடத்தி கொலைசெய்ய முயற்சித்தாக தெரிவிக்கப்படும் பெண்ணொருவர் நேற்று முன்தினம் (06) கைதுசெய்யப்பட்டதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்துகம, பாலிகாவ வீதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி இரவு மத்துகம காமினி மாவத்தையைச் சேர்ந்த சந்திமா திலானி பெரேரா (40 வயது) என்பவர் தலையில் துப்பாக்கிச்சூடு நடத்தி கொலைசெய்யப்பட்டிருந்தார்.

அதற்கமைய, இந்த கொலைச் சம்பவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியது தொடர்பில் மத்துகம பிரதேசத்தில் திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குழுத் தலைவரின் மனைவி களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணை கொலைசெய்ய ஒத்துழைப்பு வழங்கிய நபர் களுத்துறை கெலிடோ கடற்கரையில் காத்திருப்பதாக கிடைத்த தகவலுக்கமைய இவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரின் பயணப் பொதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பயன்படுத்தப்படாத கைக்குண்டொன்றும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்துகம பிரதேசத்தில் இரு பாதாள குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற முரண்பாட்டின் விளைவாக குறித்த பெண் கொலைசெய்யப்பட்டுள்ளதுடன், எதிர்த்தரப்பிலிருந்து அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற அச்சத்தில் கைக்குண்டொன்றை குறித்த பெண் வைத்திருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# 'புடெக்ஸ் சவூதி 2022' கண்காட்சியில் இலங்கை பங்கேற்பு









சவூதி அரேபியாவின் முன்னணி சர்வதேச உணவு மற்றும் குடிபானங்கள் தொடர்பான வர்த்தகக் கண்காட்சியான 'புடெக்ஸ் சவூதி 2022' கண்காட்சியில் ரியாத்திலுள்ள இலங்கைத் தூதரகமும், ஜெட்டாவிலுள்ள இலங்கைத் தூதரகமும் இணைந்து இலங்கை தேயிலை சபையின் ஒருங்கிணைப்புடன பங்கேற்றுள்ளன.

இந்தக் கண்காட்சி சவூதி அரேபியாவின் ஜெட்டா நகரில் கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 03ஆம் திகதிவரையான காலப்பகுதியில் இடம்பெற்றது.

இலங்கை தேயிலை சபைக் குழு நிலைப்பாட்டின் கீழ் பசிலூர் தேயிலை ஏற்றுமதி (பிரைவேட்) லிமிடெட் மற்றும் இலங்கை தேயிலை சபைக் குழு நிலைப்பாட்டை ஆக்கிரமித்துள்ளன. இந்த நிகழ்வில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களும் சுமார் 80 கண்காட்சியாளர்கள் தமது தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தினர்.

சவூதி அரேபியாவிற்கான இலங்கைத் தூதுவர் பி.எம். அம்சா புடெக்ஸ் சவூதி 2022 கண்காட்சியில் இலங்கைக் கூடத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைத்தார். ஜெட்டாவிலுள்ள இலங்கை துணைத் தூதரகத்தின் பதில் துணைத் தூதுவர் டி.எவ்.எம்.ஆஷிக் மற்றும் ரியாத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தின் அமைச்சர் (வர்த்தகம்) சஞ்சீவ பட்டிவில ஆகியோர் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஊக்குவிப்பு உத்தியோகத்தர் காவிந்த இல்லேபெரும நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

தொழில் வல்லுநர்களிடையேயான வணிக சந்திப்புகளுக்கும் அமைப்பாளர்கள் வழிவகுத்தனர். சிலோன் தேயிலையை இறக்குமதி செய்வது குறித்து அறிந்துகொள்வதற்காக பல சவூதி தேயிலை இறக்குமதியாளர்கள் இலங்கை தேயிலை சபையின் கூடத்திற்கு விஜயம் செய்தனர்.









கொழும்பு மத்திய இந்து வித்தியாலயத்தில் சிவராத்திரி விழா அண்மையில் அதிபர் பத்மரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக வைத்தியர் ராமஜெயம், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சுதர்ஷன் ஆகியோர் கலந்துகொண்டதுடன், பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# சர்வதேச குளுக்கோமா வாரம் ஆரம்பம்

சர்வதேச குளுக்கோமா வாரம் நேற்றுமுதல் ஆரம்பமாகியுள்ளது. மக்களுக்கு குளுக்கோமா தெளிவுபடுத்துவதற்காக நாடு முழுவதும் பல்வேறு வேலைத்திட்டங்கள் இந்த விசேட வாரப்பகுதியில் முன்னெடுக்கப்படுவதாக தேசிய கண் வைத்தியசாலையின் விசேட கண் வைத்தியர் பிரதிபா கே ஸ்ரீவர்தன தெரிவித்துள்ளார்.

குளுக்கோமா நோயினால் கண் பார்வை இழக்கும் அபாயம் இருப்பதாக குறிப்பிட்ட அவர் 40 வயதுக்கு மேற்பட்டோர் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, நாட்டிலுள்ள குளுக்கோமா நோயாளர்களை கண்டறிவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருள் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு!

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவிப்பு

நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ள எரிபொருளை இறக்கும் பணிகள் தற்போது இடம்பெறுவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க தெரிவித்துள் ளார்.

Ceylon Petroleum Corporation

இதனால், நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கான தேவை இல்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் நேற்று (07) வெளியிட்ட அறிவிப்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இதனிடையே, களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் உள்ளிட்ட ஏனைய மின்னுற்பத்தி நிலையங்களுக்கு டீசல் வழங்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது.

எண்ணாயிரம் மெற்றிக் தொன் டீசல் மின்னுற்பத்தி நிலையங்களுக்கு வழங்கப் படவுள்ளது. மின்னுற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான 37 ஆயிரம் மெற்றிக்தொன் மசகு எண்ணெயை ஏற்றிய கப்பலொன்று நாட்டை வந்தடையவுள்ளது.

அந்த எரிபொருள் களனிதிஸ்ஸ உள்ளிட்ட மின்னுற்பத்தி நிலையங்களுக்கு வழங்கப் படவுள்ளது.

இதனிடையே, அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தலைமையில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் இலங்கை மின்சார சபைக்கும் இடையில் விசேட பேச்சுவார்த்தையொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மின்சார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு குறுகிய மற்றும் நீண்டகாலத் திட்டங்கள் குறித்து இதன் போது ஆராயப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித் துள்ளார்.

இதேவேளை, எரிபொருள் பிரச்சினை எதிர்வரும் தினங்களில் தீர்க்கப்படும் என அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். அதேசமயம் எரிபொருள் மற்றும் மின்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இதுவரை எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இரு பெண்கள் துஷ்பிரயோகம்: சந்தேகநபரான கிராமசேவகர் சரீரப் பிணையில் விடுதலை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இளம் வயது யுவதிகள் இருவரை பலாத்காரம் செய்த சம்பவம் தொடர்பாக அம்பலாந்தோட்டை ஜங்சகம பிரதேச கிராம சேவை உத்தியோஸ்தர் கடந்த சனிக்கிழமை முதல் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஹம்பாந்தோட்டை அரசாங்க அதிபர் எசஇ;பி சுமணசேகரவின உத்தரவின் பேரில் இவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் இதுதொடர்பான கடிதம் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளருக்கு அனுப்;ப்பட்டுள்ளது.

தனது மேலதிக வகுப்பிற்கு சமூகமளித்த 2 இளம் யுவதிகளே இவ்வாறு துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்..

சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் தற்போது நிர்வாக ரீதியாக இடம்பெற்று வருவதுடன், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் மேலதிக விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

சந்தேகநபரான கிராம சேவை உத்தியோகத்தர் அம்பலாந்தோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஹம்பாந்தோட்டை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்






மின்வெட்டை கண்டித்தும், நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கக் கோரியும் ஐக்கிய மக்கள் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் (06) தொம்பே நகரில் இடம்பெற்றது.

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மூக்குக்கண்ணாடிகள் வழங்கிவைப்பு

(இக்பால் அலி)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அகில வை.எம். எம்.பேரவையின் சகோதர அமைப்பான வை.டபிள்யூ.எம்.ஏயின் அனுசரணையுடன் நுவரெலியா வை.எம்.எம்.ஏயின் ஏற்பாட்டில் இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு விதவைத் தாய்மார்களுக்கான சுயதொழில் வேலைவாய்ப்புக்காக சமையல் பாத்திர இயந்திர உபகரணங்கள் வழங்கி வைத்தல் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் பிரதம அதிதியாக அகில





நேற்று முன்தினம் (06) நுவரெலியா வஜிரபுர, புலுஎல சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. இதில் 500 வரையிலானவர்கள் கண் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு 350 பேருக்கு மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து நுவரெலியா, ஹாலி-எல பள்ளிவாசலின் மேல் மாடியில் சுயதொழில் பயிற்சி நிலைய மாணவிகளின் தையல்கலைக் கைப்பேணிக் கண்காட்சியைத் திறந்துவைத்தல், நுரெலியா மாவட்ட வைத்தியசாலையின் ஜனாஸாக்களை சுத்தம் செய்யும் அறைக்கு மின் இயந்திர உபகரணம் கையளித்தல், பொரகஸ் பள்ளிவாசல் ஒன்றுக்கு ஜனாஸா தூக்கும் சந்தக்கு கையளித்தல் மற்றும் கணவனை இழந்த வறிய இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் சஹீட். எம். ரிஸ்மி , வை.டபிள்யூ.எம்.ஏயின் தலைவி பவாசா தாஹா தலைமையிலான வை.டபிள்யூ.எம்.ஏ குழுவினரும் கலந்துகொண்டனர்.

இக்குழுமத்திலுள்ள சகல சகோதரிகளும் மகளிர் தின நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்தனர். அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் தலைவரும் மலேசியா இலங்கை வர்த்தக நட்புறவு ஒன்றியத்தின் தலைவர் காலீத் பாரூக் மற்றும் நுவரெலியா வை.எம்.எம்.ஏ. பேரவையின் மாவட்ட பணிப்பாளர் ரஹீம். பள்ளிவாசல் தலைவர் நுவரெலியா மாவட்ட வை.எம்.எம்.ஏ. கிளையின் தலைவர்கள் அங்கத்தவர்கள் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

# பாதுகாப்புத்துறைக்கு பெண்கள் வழங்கும் பங்களிப்பு அளப்பரியது







"இயலாதவையென ஒன்றுமில்லை" என்ற கூற்றை உண்மையாக்கும் வல்லமைகொண்ட அமைப்பாக இலங்கை இராணுவம் இன்றளவில் பல்வேறு துறைகளிலும் பரிணமித்து வருகின்றது. துறைசார் நிபுணத்துவம்கொண்டவர்களை உள்ளடக்கிய அமைப்பாகவும் நிபுணத்துவ திறன்களை பயிற்சிகள் மூலம் பகிர்ந்தளிக்கக்கூடிய அமைப்பாகவும் விளங்குகின்றமை சிறப்பம்சமாகும்.

பல்வேறு துறைகளிலும் இன்றியமையாத பங்களிப்புகளை வழங்கிவரும் பெண்கள்,

இராணுவத்திலும் இணைந்துகொண்டு அதன் நிபுணத்துவம், பல்துறை அம்சங்களை உள்ளடக்கிய செயற்பாடுகளுக்கும் பங்களிப்பை வழங்கிவருகின்றனர்.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்கான இராணுவ சேவைகளில் இணைந்துகொண்டு திறன்மிக்கச் சேவைகளை வழங்கி வருகின்றனர். சாதாரண மனிதர்களுக்கும் பல வேறுபாடுகள் உண்டு என்ற வகையில் "இராணுவ பலமே பலமான ஆயுதம்" என்ற எண்ணக்கருவினூடாக வழங்கப்படும் சேவைகளுக்கும் பெண்கள் தங்களது பங்களிப்புகளை வழங்கி வருகின்றனர்.

அதற்கமைய, "உறுதியான மனம் ஆயுத பலமிக்க கரங்கள்" என்ற எண்ணக்கருவை மூலாதாரமாகக்கொண்டு 1979ஆம் ஆண்டில் இலங்கை மகளிர் படையணி அப்போதைய தளபதி காலஞ்சென்ற ஜெனரல் ஜே.ஈ. டி பெரேராவினால் உருவாக்கப்பட்டது.

மகளிர் படையணியின் தலைமையகம் 1977ஆம் ஆண்டு கொழும்பு பொரளையில் நிர்வாகச் செயற்பாடுளை இலகுபடுத்துவதற்கு ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் உருவாக்கப்பட்டது.

மகளிர் படையணியின் சிப்பாய்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அதன் மற்றுமொரு சிறப்பம்சமாகும். ஆண்களுக்கு இணையாக தற்போது, இராணுவத்தின் அனைத்து துறைகளிலும் மகளிர் படையணியினர் அமைதிகாக்கும் பணிகளுக்கும் பங்களிப்புச் செய்து வருகின்றனர்.

குறிப்பாக தடகள, தற்காப்பு கலை, குறிபார்த்துச் சுடுதல் போன்ற விளையாட்டுகளில் சர்வதேச மட்டத்தில் குறிப்பிடத்தக்க இலக்குகளை அடைந்துள்ளனர். குறிப்பாக, ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கைக்கு முதலாவது வெள்ளி பதக்கம் வென்றுகொடுத்த வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்க இராணுவத்தைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராணுவத்தின் தற்போது சேவையிலுள்ள சிரேஷ்ட பெண் அதிகாரியாக பிரிகேடியர் (வைத்தியர்) டீ.என்.டி முனசிங்க செயற்படுகிறார். பரசூட் பயிற்சிகளிலும் தங்கள் பங்களிப்பை வழங்க தவறாத மகளிர் படையணியில் முதல் பரசூட் பயிற்சிபெற்ற அதிகாரியாக கெப்டன் வீ.என்.எஸ்.விதானகேவும், பரசூட் பயிற்சிபெற்ற இலங்கை இராணுவத்தின் முதலாவது வீராங்கனையாக கோப்ரல் ஆர்.ஏ.என். ஹேமந்தயும் அறியப்படுகின்றனர்.

இராணுவத்தின் கீழுள்ள படையணிகளில் இன்றளவில் 200இற்கும் மேற்பட்ட பெண் அதிகாரிகளும், 3500 இற்கும் மேற்பட்ட பெண் சிப்பாய்களும் சேவையாற்றுகின்றனர்.

இராணுவத் தளபதியின் எண்ணக்கருவிற்கமைய விசேட ரோந்து பணிகளுக்கான மோட்டார் சைக்கிள் பயிற்சிகளுக்காக மகளிர் சிப்பாய்கள் விடுவிக்கப்பட்டுள்ளமையும் சிறப்பம்சமாகும்.

இவ்வாறு தங்கள குடும்ப வாழ்க்கைக்கு அப்பால் தேசத்தின் நலனுக்காகவும் தங்களை அர்ப்பணிக்கும் விதமாக இராணுவ சேவையில் இணைந்துகொண்டிருக்கும் அனைத்து வீராங்கனைகளுக்கும் பாதுகாப்பு பதவிநிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வா உள்ளிட்ட அனைத்து இராணுவ உறுப்பினர்களின் மகளிர் தின வாழ்த்துகள்.

(இராணுவ ஊடக பிரிவு)

# பாலமுனையில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை முன்னெடுப்பு



(பாலமுனை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் வாழும் 20 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.அகிலனின் மேற்பார்வையின்கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக பாலமுனை பிரதேசத்திலுள்ள பாலமுனை ஐந்து கிராமசேவகர் பிரிவுகளுக்குமான 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் (06) பாலமுனை உதுமாபுர சுகாதார நிலையத்தில் இடம்பெற்றது. இதில் பாலமுனை பிரதேசத்துக்கான சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.பி.மிஹியார் தலைமையிலான சுகாதார உத்தியோகத்தர்கள் குழுவினரின் பங்குபற்றுதலுடன் இத்தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை, தீகவாபி போன்ற பிரதேசங்களில் வாழ்கின்ற 20 வயதுக்கு மேற்பட்ட முதலிரண்டு தடுப்பூசிகளை செலுத்தி மூன்று மாதம் கடந்தவர்களுக்கே இத்தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் காலங்களில் கொரோனா தடுப்பூசி போடாதவர்கள் பொது இடங்களுக்குச் சென்றால் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை வகுப்புகள் தொடர்பில் கல்வியமைச்சின் சுற்றுநிருபத்தால் மாணவர்கள் வெகுவாக பாதிப்பு

## தென்கிழக்கு கல்விப் பேரவை சுட்டிக்காட்டு

(சாய்ந்தமருது நிருபர்)




பாடசாலை வகுப்புகள் தொடர்பில் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தினால் மாணவர்களின் கல்வி வெகுவாக பாதிக்கப்படும் -என தென்கிழக்கு கல்விப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஓரளவு சீர்செய்யப்பட்டு வருகின்ற நிலையில், எரிபொருள் தட்டுப்பாட்டை காரணங்காட்டி பாடசாலைகளில் வகுப்புகளை பிரித்து நடத்துமாறு கல்வி அமைச்சு சுற்றுநிருபம் வெளியிட்டிருக்கிறது.

கொரோனா காலத்தின் பாதிப்புகளால் இழந்த கல்வியை மாணவர்கள் இன்னமும் ஈடுசெய்ய முடியாமலும் வகுப்பேற்றம் நடைபெறாமலும் மாணவர்கள் பல்வேறு மனஉளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை கல்வி அமைச்சு அதிகாரிகள் கவனத்திற்கொள்ளவில்லையென்பது கவலைக்குரியதாகும்.

விடுமுறைக்குப் பின்னர் அரச பாடசாலைகள் மீண்டும் திறக்கப் பட்டுள்ள நிலையில், கல்வி அமைச்சு சகல பாடசாலைகளும் நடத்தப்பட வேண்டிய முறை பற்றி சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

இதற்கமைவாக ஒரு வகுப்பில் 20இற்கு குறைவாக மாணவர்கள் இருப்பின் தினசரி அவ்வகுப்புகள் இடம்பெறவேண்டும் எனவும் ஒரு வகுப்பில் 21 முதல் 40 வரையான மாணவர்கள் இருப்பின் அவர்களை இரு குழுக்களாக பிரித்து வாரத்திற்கு ஒரு குழு வீதமும் 40இற்கு மேற்பட்ட மாணவர்கள் ஒரு வகுப்பில் இருப்பின், அவர்களை மூன்று குழுக்களாக பிரித்து பொருத்தமான ஏற்பாட்டுடன், வகுப்புகளை நடத்துமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவின் ஒப்பத்துடன் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது மாணவர்களின் கல்வியை இன்னுமின்னும் பாதிப்படையவே செய்யும் என தென்கிழக்கு கல்விப் பேரவை மேலும் தெரிவித்துள்ளது.

# மட்டக்களப்பில் அருவி பெண்கள் அமைப்பின் வர்த்தகக் கண்காட்சியும் பரிசளிப்பு நிகழ்வும்






(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் மகளிர் தினத்தையொட்டி போட்டி நிகழ்வுகளும் வர்த்தகக் கண்காட்சியும் நேற்று முன்தினம் (06) மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

"பாராபட்சத்தை உடைத்தெறி - பெண் சமத்துவத்தை மதித்திடு'' எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி குறித்த போட்டி நிகழ்வுகள் இரண்டு நாட்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள பிரதேச மட்ட அணிகள் எல்லே மற்றும் கயிறு இழுத்தல் போட்டிகளின் பங்குபற்றியிருந்ததுடன், அதன் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்று அதற்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இதன்போது கயிறிழுத்தல் போட்டியில் முதலாவது இடத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மகளிர் அணியும், இரண்டாவது இடத்தை கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மகளிர் அணியும் பெற்றுக்கொண்டதுடன், எல்லே விளையாட்டில் முதலாவது இடத்தை கிரான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மகளிர் அணியும், இரண்டாவது இடத்தை வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மகளிர் அணியும் பெற்றுக்கொண்டன.

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சட்டத்தரணி திருமதி மயூரி ஜனன் தலைமையில் குறித்த நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், இதன்போது பெண்களின் சுதந்திரத்தை சுட்டிக்காட்டும் வகையில் அதிதிகளினால் பல வர்ண பலூன்கள் வானில் பறக்கவிடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி சிறிகாந்த் பிரதம அதிதியாக கலந்துகொண்ட நிகழ்விற்கு மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் அ.நவேஸ்வரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வன்னியசிங்கம் வாசுதேவன், மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன், அகம் மனிதாபிமான வளநிலைய பணிப்பாளர் கண்டுமணி லவகுசராசா, விளையாட்டு உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# தற்போது மாற்ற வேண்டியது அமைச்சர்களை அல்ல; அரசையே!

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்

(சம்மாந்துறை நிருபர்)



தற்போது மாற்றவேண்டியது அமைச்சர்களை அல்ல, அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும், பொருளாதாரத்தை பிழையாக வழிநடத்தும் நிதி அமைச்சரையுமே - என்று அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

இவர்கள் மக்களை ஏமாற்றுவதற்காகவே அமைச்சரவையில் சில மாற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். இந்த மாற்றம் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கொவிட் காலத்தில் சுகாதார அமைச்சராக இருந்தவர் கொவிட் தடுப்பூசி பெறுவதற்கு முன்னர் தம்மிக்க பாணியை அருந்தியவர். இன்று ஏழு மணித்தியாலங்கள் மின் துண்டிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவருக்கு மின்சார அமைச்சு வழங்கப்பட்டிருக்கிறது. மீண்டும் ஒரு தம்மிக்க பாணியைபோன்று மின்சாரம் சம்பந்தமான பாணியை அருந்துகின்ற சூழலை உருவாக்குவார்களா என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது.

இரண்டு மூன்று அமைச்சர்களை மாற்றிவிட்டு அந்த கிழமை மாத்திரம் அதை ஊடகங்களில் பரப்புகின்ற நிலையை கொண்டுவந்து மக்களை ஏமாற்றுவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்தவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மாமனிதர் சிவநேசனின் 14ஆவது நினைவுதினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு





(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு வாழைச்சேனை சுங்காங்கேணி எழுச்சி கிராமத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சிவநேசன் கிட்ணனின் 14ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியினால் நினைவுகூரப்பட்டதுடன், நிகழ்வு பிரதேச சபை உறுப்பினர் கு.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது.

உயிர்நீத்த நாடாளுமன்ற உறுப்பினர் யுத்த காலத்தில் மக்களுக்கு ஆற்றிய சேவைகள் நினைவுகூரப்பட்டதுடன், மௌன, மலர் அஞ்சலி செலுத்தியதுடன், ஈகைச் சுடரேற்றி நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், மாவட்ட அமைப்பாளர் க.குககுமாரராஜா ஆகியோருடன் சிறுவர்முதல் முதியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு நினைவஞ்சலி செலுத்தினார்கள்.

இதன்போது தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் உரையாற்றுகையில், மாமனிதர் சிவநேசன் கிட்ணன் 2008.03.06ஆம் திகதி எதிரிகளால் கொல்லப்பட்டார். 2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் 43 ஆயிரத்து 370 வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியிருந்தார். கட்சி அரசியல் தாண்டி தமிழினம் என்ற ரீதியில் செயற்பட்டவர்.

சர்வதேச மட்டத்தில் குரல் கொடுத்த மாமனிதர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் மற்றும் சிவநேசன் போன்றவர்கள் தமிழ் மக்களுக்காக விட்டுக்கொடுக்காமல் தமிழ் மக்களின் உரிமைகளை உலகத்திற்கு பறைசாற்றியமையினாலேயே இவர்கள் கொல்லப்பட்டனர். எனவே, இவர்கள் தமிழ் மக்களினால் நினைவுகூரப்படுவது வரலாற்றுக் கடமையாகும்.

அவரது காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவருடன் இருந்தனர். ஆனால், இவரது நினைவேந்தலைக்கூட செய்யமுடியாதவர்களாக உள்ளனர். எனவே, இவ்வாறானவர்களை யார் என்று மக்கள் உணரவேண்டும் என்று தர்மலிங்கம் சுரேஸ் குற்றஞ்சாட்டினார்.

# ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் ஐரோப்பிய சக்திகளின் பணம் இருப்பதாக சந்தேகிக்கிறோம்

## ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாரக் அப்துல் மஜீத்



(மாளிகைக்காடு நிருபர்)

முஸ்லிம் திருமணச் சட்டத்தில் எதையும் நீக்கவேண்டாம் என எவரும் சொல்லவில்லை என்பதால் இந்த ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் ஐரோப்பிய சக்திகளின் பணம் இருப்பதாக சந்தேகிக்கிறோம். முஸ்லிம் திருமணச் சட்டத்திலுள்ள எதையும் நீக்கக்கூடாது என்று சொல்லவைக்க இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தோரால் முடியுமா என சவால் விடுக்கிறோம் - என்று ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

நேற்று (07) ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

முஸ்லிம் திருமணச் சட்டம் முழுமையாக ஒழிக்கப்படாமல் திருத்தப்படவேண்டும் என அண்மையில் பெண்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். ஜனாதிபதி கோட்டாபய அரசு ஜனநாயகத்தை மதிக்கும் அரசு என்பது இந்த ஆர்ப்பாட்டம் எந்த இடையூறுமின்றி நடந்ததன் மூலம் நிரூபிக்கப்படுகிறது.

எமது கட்சியைப் பொறுத்தவரை முஸ்லிம் திருமணச் சட்டத்தில் எதையும் நீக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். அன்று ரவூப் ஹக்கீம் நீதி அமைச்சராக இருந்தபோது முஸ்லிம் திருமணச் சட்டம் திருத்தப்பட வேண்டும், காதி மன்றம் ஒழிக்கப்பட வேண்டும் என ஐரோப்பிய பணத்துக்கும் சொகுசுக்கும் அடிமையான சில முஸ்லிம் பெண்கள் மாற்று மத பெண்களுடன் சேர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தபோது, அதற்கு ஹக்கீம் ஆதரவு தெரிவித்தபோது முஸ்லிம் பெண்களும் அமைப்புகளும் வீதிக்கு இறங்கி அந்த பெண்களுக்கும் அவர்களின் தாளத்துக்கு ஆடும் ஹக்கீமுக்கும் எதிராக இறங்கியிருந்தால் இப்பிரச்சினை வளர்ந்திருக்காது.

அப்போது முஸ்லிம் சமூகமும் பெண்களும் ஹக்கீமுக்கு பயந்து ஒடுங்கியிருந்தனர். அன்று உலமா கட்சி (இன்றைய ஐக்கிய காங்கிரஸ்) மட்டுமே முஸ்லிம் திருமணச் சட்டத்தில் எந்தத் திருத்தமும் செய்யக்கூடாது என்று பகிரங்கமாக சொல்லியது. அப்போது தூங்கியிருந்த சமூகம் இப்போது மிக தாமதமாக ஆர்ப்பாட்டம் செய்துள்ளது. ஆனாலும் திருமணச் சட்டத்தை திருத்த வேண்டும் என்றே இவர்களின் ஆர்ப்பாட்டம் இருந்துள்ளமை கண்டிக்கத்தக்கதாகும்.

திருத்தப்போனால் எதைத் திருத்துவது என்ற இழுபறியும் முழு சட்டமும் இல்லாமல் போகும் என்பதை அன்றுமுதல் நாம் எச்சரிக்கிறோம். அத்துடன், இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மாற்று மத பெண்கள் முஸ்லிம் திருமணச் சட்டத்தை திருத்த வேண்டும் என சொல்வதன் மூலம் இவர்கள் மேற்படி திருமணச் சட்டத்தை கேவலப்படுத்த முனைந்துள்ளனர் என தெரிவித்தார்.

# எமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்க நாம் ஒன்றாக இணைந்து செயற்படுவோம்!

## கோவிந்தன் கருணாகரம் அழைப்பு!

(கல்லடி நிருபர்)

அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவோமாக இருந்தால் நமது மக்களின் தீர்வு விடயத்தில் இன்னும் விரைவாகக் கூடுதலான பெறுபேறுகளை நாங்கள் பெற்றுக் கொள்ள முடியும். பாதிக்கப்பட்டு உரிமை இழந்து நிற்கும் எமது தமிழினத்திற்காக நாங்கள் ஒன்றாகச் செயற்படவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் மார்ச் மாதத்தில் 46/1 தீர்மானம் மனித உரிமைகள் ஆணையகத்தினால் நிறைவேற்றப்பட்டது. அந்த அடிப்படையில், இலங்கையில் பொறுப்புக்கூறல் என்பது பின்னடைவைச் சந்தித்துள்ளதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் கூறியிருக்கின்றார்.

ஒவ்வொரு முறையும் ஐ.நா. கூட்டத்தொடர் இடம்பெறும்போது பாதிக்கப்பட்ட எமது தரப்பிலிருந்து பிரதிநிதிகள் நேரடியாகச் சென்று அக்கூட்டத்தொடர்களில் பங்கேற்பதும், நேரடியாகப் பங்கேற்காமல் இங்கிருந்து உரிமை மீறல்களைக் கடிதம் வாயிலாக அனுப்பிவைப்பதுமான செயற்பாடுகளே நடைபெற்றன.

அந்தவகையில் இவ்வருடமும் ஐ.நா. கூட்டத்தொடரை முன்னிறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் விபரமாக கடிதம் அனுப்பியிருந்தது. அத்தோடு, தமிழீழ விடுதலை இயக்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், தமிழ்த் தேசிய கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய கட்சி ஆகிய ஐந்து கட்சிகளும் ஒன்றிணைந்து விவரமான அறிக்கையினை அனுப்பியிருந்தோம்.



அந்தக் கடிதத்தின் அடிப்படையில் ஐ.நா. அதிகாரிகள் மெய்நிகர் மூலமாக இந்த ஐந்து கட்சிகளின் தலைவர்களுடனும் உரையாடியிருந்தார்கள். இதன்போது உரையாடப்பட்டதும், ஐந்து கட்சிகளினால் அனுப்பப்பட்ட கடிதத்திலுள்ளதுமான பல விடயங்கள் ஆணையாளரினால் 48 அங்கத்துவ நாடுகளுக்கும் கொடுக்கப்பட்ட 13 பக்க அறிக்கையிலே உள்ளடக்கப்பட்டிருப்பது எங்களுக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தருகின்றது.

அந்த அறிக்கையின் பிரகாரம் இலங்கையில் பொறுப்புக் கூறல் என்பது முறையாக நடைபெறவில்லை. எனவே, இவ்விடயத்தில் சகலராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியலமைப்பினூடாக நிரந்தர அரசியல் தீர்வினைக் காண்பதற்குரிய முக்கியத்துவம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதற்கும் மேலாக அண்மையில் இடம்பெற்ற மெய்நிகர் கலந்துரையாடலில் இந்தியா சார்பில் கலந்துகொண்ட ஐ.நா. அதிகாரி 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளடங்கலாக ஒருசிலர் இங்கு கொக்கரிப்பதுபோல் 13ஆவது திருத்தச் சட்டம் மாத்திரமல்ல. 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளடங்கலாக இலங்கையில் தமிழர்கள் சமத்துவமாக - சுய நிர்ணய உரிமையுடன் கூடிய வாழ்க்கையை வாழ்வதற்கான அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய ஓர் அரசியல் தீர்வு கொண்டுவரப்பட்டு, விரைவாக மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டுமென வலியுறுத்தியிருக்கின்றார்.

இவைகளையெல்லாம் பார்க்கும்போது எமக்கான ஒரு தீர்வு மிக விரைவில் கிடைக்குமென்ற நம்பிக்கை ஏற்படுகின்றது. இந்நிலையில், இவ்வாறான காலகட்டத்தில் தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும் - என்றார்.

**13 நாட்களாக ரஷ்யா தொடர் தாக்குதல்; பரிதவிக்கும் உக்ரைன்; அமைதிக் காக்கும் சர்வதேசம்**

உலக செய்திகள்



# ரஷ்யா மீதான போர்க்குற்ற விசாரணை சர்வதேச நீதிமன்றத்தில் ஆரம்பம்







ரஷ்யா மீதான போர்க்குற்ற விசாரணை சர்வதேச நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

உக்ரைன் மீது ரஷ்யா இன்று 13ஆவது நாளாகவும் தாக்குதல் நடத்திவரும் நிலையில், இந்த விவகாரம் குறித்து சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை தொடங்கியுள்ளது.

**3ஆம் கட்ட சமாதான பேச்சு**

இதனிடையே போர் நிறுத்தம் தொடர்பாக ரஷ்யா - உக்ரைன் இடையே ஏற்கனவே 2 சுற்று பேச்சுவார்த்தை நடந்துள்ளது. எனினும், அதில் எவ்விதத் தீர்வுகளும் எட்டப்படவில்லை. போர் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில், பெலாரஸ் எல்லையில் நேற்று 3ஆம் கட்ட பேச்சுவார்த்தை நடைபெறுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

**ரஷ்யா - உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் நேரடியாக பேச்சு**

ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோ மற்றும் உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் திமிட்ரோ குலேபா ஆகியோர் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக் கொண்டதாக உக்ரைன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவருக்கிடையிலான பேச்சு நாளைமறுதினம் 10ஆம் திகதி துருக்கி கடற்கரை மாகாணமான அண்டல்யாவில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பெலாரஸில் இருநாட்டு பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள சூழலில் அடுத்தகட்டமாக அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் உத்தரவைத் தொடர்ந்து கடந்த 24ஆம் திகதி ரஷ்யாவின் முப்படைகள் உக்ரைன் மீது போர்த் தொடுத்தன. அன்றுமுதல் இன்று 13 நாட்களாக ரஷ்யப் படைகள் உக்ரைன் மீது மும்முனைத் தாக்குதல் நடத்தி பல முக்கிய நகரங்களை கைப்பற்றியுள்ளன.

உக்ரைனில் 38 குழந்தைகள் உட்பட 500இற்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் படுகாயமடைந் துள்ளனர்.

## தாய்நாட்டைவிட்டு 17 இலட்சம் பேர் அகதிகளாக அண்டைநாடுகளில் தஞ்சம்



உக்ரைனின் பல நகரங்களில் கட்டடங்கள், வாகனங்கள் என ஏவுகணை பீரங்கி குண்டுத் தாக்குதல்களால் சிதைவடைந்த நிலையில் போரின் தாக்கத்தை வெளியுலகத்துக்கு எடுத்துக்காட்டுவதாக காணப்படுகின்றது.

ரஷ்யத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் உக்ரைன் படைகள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் ரஷ்யப் படைகளும் பல்வேறு இழப்புகளை சந்தித்துள்ளன.

மோதலில் 11,000 ரஷ்ய வீரர்கள் உயிரிழந்துள்ளதுடன், ரஷ்யாவின் 1,000 கவச வாகனங்கள், 290 டாங்கிகள், 68 ஹெலிகொப்டர்கள், 46 விமானங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பிற வன்பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளதாக உக்ரைன் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ரஷ்யத் தாக்குதலால் உருக்குலையும் உக்ரைனிலிருந்து அண்டைநாடுகளுக்கு 16 இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். இன்னும் பலர் இடம்பெயர காத்துக்கொண்டிருக்கின்றனர்.

ரஷ்யத் தாக்குதலுக்கு சர்வதேச அளவில் பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. தொடர்ந்தும் சர்வதேச நாடுகள் பல ரஷ்யா மீது பல்வேறு தடைகளை விதித்து வருகின்றன.

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் தாக்குதலை உடனடியாக நிறுத்த உத்தரவிடக் கோரி உக்ரைன் தரப்பில் நெதர்லாந்திலுள்ள சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கை சர்வதேச நீதிமன்றம் நேற்று விசாரிக்கத் தொடங்கிய நிலையில், இந்த விசாரணைகள் இன்றும் தொடரும் என தெரிவிக்கப்படுகிறது.

## "எங்களை உயிருடன் பார்ப்பது இதுவே கடைசியாக இருக்கலாம்" - ஸெலன்ஸ்கி உருக்கம்

## "உலக வரைபடத்தில் உக்ரைன் என்ற நாடே இருக்காது" - புட்டின் பகிரங்க எச்சரிக்கை









**உக்ரைன் போருக்கு போப் பிரான்சிஸ் கண்டனம்**

உக்ரைனில் இரத்தமும் கண்ணீரும் ஆறாகப் பாய்வதாகத் தெரிவித்துள்ள போப் பிரான்சிஸ், போரை நிறுத்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உக்ரைனில் ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தியதில் ஏராளமானோர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலில் இருநாட்டுப் படைவீரர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், போப் பிரான்சிஸ் விடுத்துள்ள செய்தியில்,

உக்ரைனில் இரத்தமும், கண்ணீரும் ஆறாகப் பாய்கின்றன. இது வெறும் இராணுவ நடவடிக்கை அல்ல. உயிரிழப்பு, பேரழிவு, துயரம் ஆகியவற்றை விதைக்கும் போர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகளை உடனடியாக செய்யவேண்டுமெனவும் போப் பிரான்சிஸ் இதயபூர்வமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட டுவிட்டர் பதிவில்,

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்குத் தேவையான மனிதாபிமான நடவடிக்கைகள் உண்மையாக இருக்க வேண்டும்.

முற்றுகையிடப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள மக்களுக்குத் தேவையான உதவிகள் மற்றும் அங்கு செல்வதற்கான நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று இதயபூர்வமாக வேண்டுகோளை விடுப்பதாக தெரிவித்துள்ளார்.

**புட்டினுடன் பேசிய துருக்கி ஜனாதிபதி**

இதனிடையே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் தொலைபேசியில் பேசிய துருக்கி ஜனாதிபதி அர்துகான், உடனடியாகப் போரை நிறுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொண்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

**உருக்குலைந்த வினிட்ஷா விமான நிலையம்**

ரஷ்ய இராணுவத்தின் 8 ரொக்கெட்டுகள் ஒருசேர தாக்கியதில் வினிட்ஷாவிலுள்ள விமானநிலையம் மக்கள் இனி பயன்படுத்த முடியாதளவுக்கு உருக்குலைந்துள்ளது என உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையின் 12ஆவது நாளான நேற்று, ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாடுகளின் எல்லை நகரான வினிட்ஷாவை ரஷ்யப் படைகள் தாக்கின.

இதன்போது ரஷ்யப் படைகளின் 8 ரொக்கெட்டுகள் வினிட்ஷா விமானநிலையத்தில் வீழ்ந்து வெடித்ததால் விமானநிலையம் பயன்படுத்த முடியாதளவுக்கு உருக்குலைந்துள்ளது என ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.



அதேபோல் அரச கட்டடம் மற்றும் எரிபொருள் சேமிப்புக் கிடங்கு மீது ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்ததாகவும், தீயணைக்கும் பணி தொடர்வதால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**17 இலட்சம் பேர் வெளியேற்றம்**

போர் காரணமாக உக்ரைனிலிருந்து இதுவரை குழந்தைகள், பெண்கள் என 17 இலட்சம் பேர் அண்டைநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். இதில் உக்ரைனின் அண்டைநாடான போலந்தில் 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அடைக்கலமடைந்துள்ளனர்.

இதனை "தாய்நாட்டிலிருந்து வெளியேறுவதை யாரும் மறக்க மாட்டார்கள்" என உக்ரைனியர்கள் உருக்கமாக தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் - ரஷ்யப் போர் இன்று 13ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், 12ஆவது நாளான நேற்று தலைநகர் கீவ், கார்கீவ், மரியுபோல் மற்றும் சுமி ஆகிய நகரங்களில் சிக்கித் தவிக்கும் மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்காக தற்காலிக போர் நிறுத்தத்தை ரஷ்யா அறிவித்தது.

## ரஷ்யாவை தொடர்ந்தும் இறுக்கும் சர்வதேசத்தின் பொருளாதாரத் தடைகள்

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 24ஆம் திகதி போர் தொடுத்து நேற்றுடன் 12 நாட்கள் கடந்துள்ளன. இந்த 12 நாட்கள் போரில் 17 இலட்சம் பேர் உக்ரைனை விட்டு வெளியேறி அண்டைநாடுகளான போலந்து (10,27,603 பேர்), ருமேனியா (78,977 பேர்), சுலோவாகியா(1,28,169 பேர்), ஹங்கேரி (1,80,163 பேர்), மோல்டோவா (82,762 பேர்) பெலாரஸ் (406 பேர்) மற்றும் ரஷ்யா (53,300 பேர்) உள்ளிட்ட நாடுகளிலும் 1,83,688 பேர் மேலும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

உக்ரைனில் போர் தொடர்ந்தால் ஐரோப்பிய நாடுகளில் குடியேறும் அகதிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஆம் பக்கம் பார்க்க...

# ''உக்ரைனில் இரத்தமும் கண்ணீரும் ஆறாகப் பாய்கின்றது; உடனடியாக போரை நிறுத்துக''

## - பாப்பரசர் பிரான்சிஸ் வேண்டுகோள்









14ஆம் பக்கத் தொடர்ச்சி...

தாம் அகதிகளாக பிற நாடுகளில் தஞ்சம் புகுவதை ''தாய்நாட்டிலிருந்து வெளியேறுவதை யாரும் மறக்க மாட்டார்கள்'' என உக்ரைனியர்கள் தங்களது வலைத்தள பக்கங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

இர்பின் நகரில் குண்டு வீசிய ரஷ்யாவை ''இன அழிப்பு செய்யும் நாசக்காரன்'' என இர்பின் நகர வாசியொருவர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் பச்சிளம் குழந்தை மற்றும் செல்லப்பிராணிகளுடன் மக்கள் வெளியேறும் படம் வெளியாகியுள்ளது. பலரும் தங்களது இருப்பிடங்களை விட்டு புலம்பெயர்ந்து வரும் காட்சியை பகிர்ந்துள்ள பதிவில், ''உலகத்துக்கு தெரிய வரட்டும்'' என குறிப்பிடப்பட்டுள்ளனர்.

**இர்பின் நகர் மீது ரஷ்யப் படை தீவிர தாக்குதல்**

இந்நிலையில், உக்ரைனின் இர்பின் நகர் மீது ரஷ்ய இராணுவம் தாக்குதலைத் தீவிரப்படுத்தியதால், அங்கு வசிப்பவர்கள் பாதுகாப்பாக வெளியேற உக்ரைன் இராணுவம் உதவியுள்ளது.

தலைநகர் கீவிலிருந்து 24 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இர்பின் நகர் மீது ரஷ்யப் படைகள் தொடர் பீரங்கித் தாக்குதல் மற்றும் வான் தாக்குதல்களை நிகழ்த்தி வருகின்றன.

அந்நகரை விட்டு வெளியேற எஞ்சியிருக்கும் ஒரே பாதை வழியாக மக்கள் தங்கள் உடைமைகள் மற்றும் வளர்ப்புப் பிராணிகளுடன் தப்பிச் செல்கின்றனர்.

**தற்காலிக போர் நிறுத்தம்**

உலக நாடுகளின் தலைவர்கள் கேட்டுக்கொண்டதையடுத்து உக்ரைன் தலைநகர் கீவ், கார்கீவ், சுமி, மரியுபோல் ஆகிய நான்கு நகரங்களில் நேற்றுக் காலை 9 மணிமுதல் ரஷ்ய இராணுவம் தற்காலிகப் போர் நிறுத்தத்தை அறிவித்தது.

முற்றுகையிலுள்ள நகரங்களிலிருந்து பொதுமக்களும் வெளிநாட்டவரும் வெளியேறுவதற்கும், அங்குள்ள மக்களுக்கு உணவுப்பொருட்கள், மருந்துகள் வழங்கவும் மனிதநேய அடிப்படையில் போர் நிறுத்தம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மக்களை அழைத்துச் செல்வதற்காகக் கிழக்குத் துறைமுக நகரான மரியுபோலில் நூற்றுக்கணக்கான பஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

உக்ரைனில் குடியிருப்புப் பகுதிகள் மீது ரஷ்ய விமானங்கள் குண்டுவீசித் தாக்கியதில் கட்டடங்களும், வாகனங்களும் சேதமடைந்துள்ளதுடன், பல கட்டடங்கள் தீக்கிரையாகி அதிலிருந்து புகை வெளியேறிய வண்ணம் உள்ளன.

இதேவேளை, ரஷ்யாவின் தாக்குதலுக்குள்ளான உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்க்கிவ் நகரிலிருந்து வெளியேறுவதற்காக அங்குள்ள ரயில் நிலையத்தில் ஆயிரக்கணக்கானோர் கூடியுள்ளனர்.

சைட்டோமிர் மண்டலத்தின் ஓவ்ருச் என்னுமிடத்தில் ரஷ்ய இராணுவத்தினர் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தியதில் 30 வீடுகள் சேதமடைந்தன. இவற்றில் 5 வீடுகள் முற்றிலும் இடிந்து தரைமட்டமாயின.

உக்ரைன் படையில் இணைந்து போரிடுவதற்காக பிரிட்டனிலிருந்து முன்னாள் இராணுவத்தினர் பலர் வந்துள்ளதாகத் தகவலும் காட்சியும் வெளியாகியுள்ளன.

லுகான்ஸ்கில் எண்ணெய்ச் சேமிப்புக் கிடங்கின் மீது ரஷ்ய இராணுவம் குண்டு வீசித் தாக்கியதில் அது கரும்புகை மூட்டத்துடன் தீப்பற்றி எரிந்தது.

ரஷ்ய ஆதரவாளர்களிடமுள்ள டொனட்ஸ்க் நகரின் மீது அமெரிக்கப் படையினர் தாக்குதல் நடத்தியதாகக் குற்றஞ்சாட்டும் மக்கள் பாதி எரிந்த நிலையிலுள்ள ஏவுகணைகளைச் சேகரித்து வைத்துள்ளனர்.

கீவ் நகரைக் கைப்பற்றும் நோக்குடன் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலான ரஷ்யப் படையினர் குவிந்துள்ளதாகக் கூறப்படுகிறது. செச்சன்ய பிரிவினைவாதிகளை அடக்கி ஒடுக்கிய இராணுவப் பிரிவுகள் கதிரோவ் தலைமையில் குரோஸ்னியிலிருந்து உக்ரைனுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மரியுபோல் நகரை முற்றுகையிட்டுள்ள ரஷ்யப் படையினர் அதன் புறநகர்ப் பகுதிகளில் முகாமிட்டுள்ளனர்.

**ஸெலன்ஸ்கி உருக்கம்**

உக்ரைன் வான்பரப்பை 'விமானங்கள் பறக்க தடை செய்யப்பட்ட பகுதி' என அறிவிக்க வேண்டுமென உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி நேட்டோ மற்றும் அமெரிக்காவிடம் தொடர்ந்து வலியுறுத்துகிறார். இவ்வாறு அறிவிப்பதன் மூலம், உக்ரைன் மீது பறக்கும் ரஷ்ய போர் விமானங்களை நேட்டோ படையும், அமெரிக்கப் படைகளும் சுட்டு வீழ்த்த முடியும். ஆனால், இது ரஷ்யாவுக்கு எதிராக நேரடி போரில் களமிறங்குவது போலாகும் என்பதால் நேட்டோவும், அமெரிக்காவும் தயங்குகின்றன. இதனால் விரக்தியடைந்துள்ள உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தனிப்பட்ட முறையில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடியோ தகவலொன்றை அனுப்பியுள்ளார்.

அதில், ''இதுவே நீங்கள் என்னை உயிருடன் பார்க்கும் கடைசி தருணமாகக் கூட இருக்கலாம். உக்ரைன் வான்பரப்பை விமானங்கள் பறக்க தடைசெய்யப்பட்ட பகுதியாக அறிவிப்பதன் மூலமும், எங்களுக்கு அதிக போர் விமானங்களை வழங்குவதன் மூலமும் உக்ரைன் தன்னை தற்காத்துக் கொள்ள முடியும். அதற்கு உதவ வேண்டும்'' என்றார்.

ஐரோப்பிய நட்பு நாடுகள் உக்ரைனுக்கு மிக் ரக விமானங்களை வழங்கத் தயாராகவுள்ளன. ஆனால், அந்த விமானங்களுக்கு மாற்றாக அமெரிக்காவின் எவ்-16 ரக போர் விமானங்கள் விநியோகத்தை ஐரோப்பிய நாடுகள் எதிர்பார்த்துள்ளன. இதனை விநியோகிக்காமல் அமெரிக்கா தொடர்ந்து தாமதித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**உக்ரைன் என்ற நாடு எதிர்காலத்தில் இருக்குமா என்ற கேள்வி எழும்**

''உக்ரைனில் நடக்கும் அனைத்து அவலத்திற்கும் அந்நாட்டின் தலைமைதான் காரணம். இதை அந்நாட்டின் நிர்வாகம் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் செய்வதை இனியும் தொடர்ந்தால், உக்ரைன் என்ற நாடு எதிர்காலத்தில் இருக்குமா? என்ற கேள்வி எழக்கூடும். அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டால், அதற்கு அவர்களே முழு பொறுப்பேற்க வேண்டும்'' - என ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தெரிவித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ''உக்ரைன் அரசு ஆபத்தில் இருக்கிறது. தற்காலிக போர் நிறுத்த முயற்சியை நாசம் செய்துவிட்டது. உக்ரைனுக்கு ஆதரவாக மேற்கத்தேய நாடுகள் ரஷ்யா மீது தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதிக்கின்றன. திணிக்கப்படும் இந்தத் தடைகள், ஒருவகையில் போர் அறிவிப்பதற்கு சமமானவை. ஆனால், கடவுளுக்கு நன்றி, நாங்கள் இன்னும் அந்த அளவிற்கு செல்லவில்லை'' - இவ்வாறு புட்டின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ரஷ்ய விமான நிறுவனங்களுக்கு தடை விதித்துள்ள நிலையில், ரஷ்ய அரசுக்கு சொந்தமான விமான நிறுவனமான ஏரோபிளோட் இன்றுமுதல் பெலாரஸ் தவிர அனைத்து சர்வதேச விமானங்களையும் நிறுத்தத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

**மனிதாபிமானத்தை கொன்ற ரஷ்யா**

உக்ரைன் தலைநகர் கீவ் புறநகர் பகுதியில், போரில் காயமடைந்த மக்களையும், இராணுவ வீரர்களையும் மீட்டு மருத்துவ சிகிச்சையளித்து வந்த பணியில் ஈடுபட்ட மனிதாபமானமிக்க பெண் மருத்துவப் பணியாளர் வெலன்டினா புஷித், ரஷ்ய இராணுவத்தின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார்.

டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் அதிக சம்பளத்தில் வேலை பார்த்து வந்த அவர், கடந்த 2016ஆம் ஆண்டு கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்திய கிழக்கு உக்ரைனில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க இராணுவ மருத்துவப் பணியாளராக பணியில் சேர்ந்தார். தற்போது உக்கிரமான போரில், கடுமையான துப்பாக்கிச்சூடு நடக்கும் பகுதிகளுக்கும் துணிச்சலாக சென்று காயமடைந்த பலரின் உயிரை வெலன்டினா காப்பாற்றி வந்தார். இந்நிலையில், அவரே துப்பாக்கிக் குண்டுக்கு இரையானார். அவரது சடலத்தை கட்டிப்பிடித்து பெண்கள் பலர் கதறி அழுதனர். வெலன்டினா இறந்து கிடந்த சுவர் அருகில் மலர்களை வைத்து மக்கள் பலர் அஞ்சலி செலுத்தினர்.

**500 கிலோ வெடிகுண்டால் குலுங்கியது செர்னிஹிவ்**

தலைநகர் கீவ்வின் வடக்கில் அமைந்துள்ள செர்னிஹிவ் நகரில் ரஷ்ய இராணுவம் சக்திவாய்ந்த வெடிகுண்டை குடியிருப்புப் பகுதியில் வீசி தாக்குதல் நடத்தியுள்ளது.

எப்ஏபி-500 எனப்படும் 500 கிலோ எடை கொண்ட வெடிகுண்டை போர் விமானம் மூலமாக வீசியது. பொதுவாக, இந்த வகை வெடிகுண்டுகள் இராணுவ தொழிற்சாலைகள் மற்றும் இராணுவ கட்டட கட்டமைப்புகள் மீது வீசப்படும். ஆனால், அதை குடியிருப்புகள் மீது ரஷ்ய இராணுவம் வீசி தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் பல குடியிருப்புகள் இடிந்து நாசமாகியுள்ளன. 17 பொதுமக்கள் பலியானதாக கூறப்படுகிறது. வானில் பறந்த ரஷ்ய போர் விமானத்தை உக்ரைன் இராணுவம் சுட்டு வீழ்த்திய வீடியோ காட்சிகளை வெளியிட்ட நிலையில், ரஷ்யாவின் இந்த பயங்கரத் தாக்குதல் நடந்துள்ளது.

**உக்ரைன் இராணுவத்துக்கு வலுசேர்க்கும் பொதுமக்கள்**

உக்ரைனில் நாளுக்குநாள் பலி எண்ணிக்கை அதிகரித்தபோதிலும், தாய்நாட்டை பாதுகாக்க அந்நாட்டு மக்கள் பலர் இராணுவத்தில் ஆர்வத்துடன் சேர்ந்து வருகின்றனர். 18 முதல் 60 வயதுடைய ஆண்கள் நாட்டைவிட்டு வெளியேற உக்ரைன் அரசு தடை விதித்துள்ளது. அப்படியிருக்கையில், பல இளைஞர்கள் இராணுவத்தில் சேர வரிசையில் காத்திருக்கிறார்கள்.

அவர்கள் கூறுகையில், ''நாங்கள் ஏன் நாட்டில் இருக்கவேண்டும் என்பதை நாங்கள் அறிவோம். ரஷ்யப் படையை எதிர்த்துப் போராடி வரும் எங்கள் சகோதரர்களுக்கு துணையாக நாங்களும் போராடுவோம்'' என்றனர்.

இதுதவிர, பிரித்தானியா உள்ளிட்ட பிற நாட்டைச் சேர்ந்தவர்களும் தாமாக முன்வந்து உக்ரைன் இராணுவத்தில் சேர்ந்து ரஷ்யாவுக்கு எதிராக போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**'என்ன அழகிய உலகம் இது'**

உக்ரைனின் மேற்கு பகுதியிலுள்ள லிவ் நகரத்தை மட்டும் ரஷ்யப் படைகள் இன்னும் பெரியளவில் தாக்காமல் விட்டுவைத்துள்ளன.

இங்குள்ள ரயில் நிலையத்தின் மூலமாகவே, கார்கிவ், கீவ் உள்ளிட்ட மற்ற நகரங்களை சேர்ந்த மக்கள், அண்டை நாடுகளுக்கு ரயில்களில் தப்பிச் செல்கின்றனர். இந்த பரபரப்புக்கும் இடையே, இந்த ரயில் நிலையத்துக்கு வந்த இளம்பெண்ணொருவர், தனது நாட்டின் நிலையை நினைத்து, 'என்ன அழகிய உலகம் இது' என்ற பாடலை பியானோவில் மனம் உருகும் வகையில் வாசித்துள்ளார். இந்த வீடியோ உலகளவில் வைரலாகியுள்ளது.

**ரஷ்ய பெரு முதலீட்டாளர்கள் மீது பொருளாதாரத் தடைகள்**

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையை நிறுத்த அடுத்தகட்டமாக ரஷ்ய பெரு முதலீட்டாளர்கள் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கவும் அவர்களின் சொத்துகளை முடக்கவும் ஜி7 நாடுகள் முடிவு எடுத்துள்ளதாக ஜேர்மனி தெரிவித்துள்ளது.



அணு மின் நிலையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து ரஷ்யா மீது ஜி7 நாடுகள் கூட்டமைப்பு கடந்த வெள்ளிக்கிழமை கடும் பொருளாதாரத் தடைகளை அறிவித்தது.

இந்நிலையில் ஜனாதிபதி புட்டின் மூலம் ஆதாயம் பெற்று பெரும் முதலீட்டாளர்களாக மாறிய ரஷ்யர்கள் மீது கடும் பொருளாதார நடவடிக்கை எடுக்கவும், அவர்களின் சொத்துகளை முடக்கவும் ஜி7 நாடுகள் மாநாட்டில் முடிவெடுக்கவுள்ளதாக ஜேர்மனி தெரிவித்துள்ளது.

**ரஷ்யாவில் பணப்பரிவர்த்தனையை நிறுத்துவதாக அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்**

விசா மற்றும் மாஸ்டர் கார்ட் நிறுவனங்களைத் தொடர்ந்து அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனமும் ரஷ்யாவில் அதன் பணப் பரிவர்த்தனை சேவையை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து ரஷ்யா மீது அமெரிக்கா பல்வேறு பொருளாதாரத் தடைகளை அறிவித்ததன் ஒரு பகுதியாக அமெரிக்கன் எக்ஸ்பிரஸும் அதன் சேவையை நிறுத்துவதாக தெரிவித்துள்ளது.

ரஷ்யாவுக்கு உதவியதாக பெலாரஸிலும் அனைத்து சேவைகளையும் தற்காலிகமாக நிறுத்துவதாக அமெரிக்கன் எஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.

ரஷ்ய வங்கிகளால் உள்நாட்டில் வழங்கப்படும் பற்றட்டைகளான அமெக்ஸ் கார்ட்களை வெளிநாடுகளில் பயன்படுத்துவதையும் இரத்துசெய்வதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

**புட்டினுக்கு எதிராக போராடிய 4,400 பேர் கைது**

ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கெதிராக அவரது சொந்த ஊரான செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் உட்பட ரஷ்யாவின் 56 நகரங்களில் போராட்டம் நடத்திய 4,400இற்கும் மேற்பட்டோரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு வெளிநாடுகளைபோல் சொந்த



நாட்டு மக்களும் எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றனர். போர் நிறுத்தம் தொடர்பான பல்வேறு ஹெஷ்டேக்குகள் சமூக வலைதளங்களில் ட்ரெண்டாகி வருகின்றன.

மொஸ்கோ, செயின்ட் பீட்டர்ஸ்பெர்க் உள்ளிட்ட 56 நகரங்களில் புட்டினுக்கு எதிராக போராடிய 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

**ரஷ்யாவை விட்டு தற்காலிகமாக வெளியேறுகிறது டிக் டொக்**

ரஷ்ய இராணுவத்திற்கு எதிராக போலி தகவல்களை வெளியிடுவோருக்கு 15 ஆண்டுகள் உள்ளிட்ட சிறை நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அந்நாட்டு ஜனாதிபதி புட்டின் அறிவித்ததையடுத்து பணியாளர்கள் பாதுகாப்புக் கருதி நேரலை ஒளிபரப்பு மற்றும் புதிதாக வீடியோக்கள் பதிவிடுவதை தற்காலிகமாக நிறுத்திக்கொள்வதாக டிக் டொக் நிறுவனம் அதன் ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

அதேநேரம் செய்தி பகிர்வு தடை செய்யப்படாது என்றும் சேவைகள் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதும் முழு வீச்சில் மீண்டும் இயங்கத் தொடங்கும் என டிக்டொக் தெரிவித்துள்ளது.

**பிரித்தானியாவில் போராட்டம்**

இதேவேளை, பிரித்தானியாவில் ரஷ்யாவின் போர் நடவடிக்கையை கண்டிக்கும் வகையில் நடந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உக்ரைன் நாட்டு தேசிய கீதத்தை பாடி எதிர்ப்பினை பதிவுசெய்தனர்.

லண்டனில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் திரளானோர் கலந்துகொண்டனர். மேலும் நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் ரஷ்ய எதிர்ப்புப் பேரணிகளும் நடைபெற்றன. இந்நிலையில், ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற போர் எதிர்ப்புக் குழுவினர் அந்நாட்டின் தேசிய கீதத்தை பாடி தங்கள் ஆதரவை உக்ரைனுக்கு தெரிவித்தனர்.

**மெக்சிக்கோவில் ஆர்ப்பாட்டம்**

மேலும் மெக்சிக்கோவில் உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்து ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மெக்சிக்கோ சிட்டியிலுள்ள முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக சென்ற அவர்கள் ரஷ்யாவிற்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பியவாறும், எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும் சென்றனர். இந்த கண்டனப் பேரணியில் மெக்சிக்கோ மக்களும், அகதிகளாக சென்ற உக்ரைன்வாசிகளும் கலந்துகொண்டனர். மேலும் ஆர்ப்பாட்டத்தில் உக்ரைன் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு ரஷ்யாவிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

# செச்சென்யா - சிரியாவில் கையாண்ட போர் தந்திரங்களை உக்ரைனில் கையாளும் ரஷ்யா

உக்ரைனில் மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளை குறிவைத்தே ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவதாக தெரிவித்துள்ள பிரித்தானியா, செச்செனியா, சிரியாவில் கையாண்ட போர் தந்திரங்களை உக்ரைனிலும் ரஷ்யா கையாள்வதாக தெரிவித்துள்ளது.

சுற்றுப்புறத்திலிருந்து ஒட்சிசனை உறிஞ்சி அதிக வெப்பநிலையுடன் வெடிக்கும், மனித உடல்களை ஆவியாக்கும் மோசமான தன்மை கொண்ட வேக்யூம் வெடிகுண்டு எனப்படும் தெர்மோபரிக் ஆயுதத்தை செச்செனியா, சிரியாவில் ரஷ்யா பயன்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குண்டுவெடிப்பு மற்றும் கனரக பீரங்கிகள், ஏவுகணை தாக்குதலால் உக்ரைனில் ஏராளமானோர் கொல்லப்பட்டிருப்பதாக ஐ.நா. தெரிவித்திருந்த நிலையில், மக்கள் அதிகம் வசிக்கும் தலைநகர் கீவ், செர்னிகிவ், கார்கீவ் போன்ற நகரங்களைதான் ரஷ்யா குறிவைத்து தாக்குகிறது என பிரித்தானிய உளவுத்துறை தெரிவித்துள்ளது.

கடந்த 1999இல் வெடித்த செச்சென்யா போரிலும், 2016இல் நடந்த சிரியா போரிலும் ரஷ்யப் படைகளுக்கு கடும் பதிலடி கொடுக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த ரஷ்யப் படைகள், இரு நாடுகளையும் நாசமாக்கின. அதேபோல், உக்ரைன் படைகளின் மன உறுதியை சீர்குலைக்கும் வகையில், குடியிருப்புகளை ரஷ்யப் படைகள் நாசமாக்கி வருகின்றன என பிரித்தானிய உளவுத்துறை தெரிவித்துள்ளது. மக்கள் வசிக்கும் பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படுவதாக பிரித்தானியா கூறும் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது.

# சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை பீப்பாய்க்கு 139 டொலராக அதிகரிப்பு

ரஷ்யாவின் மசகு எண்ணெய்க்கு மேற்கத்தேய நாடுகள் தடை விதிக்க திட்டமிடுவதன் எதிரொலியாக சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை பீப்பாய்க்கு 139 டொலராக அதிகரித்துள்ளது.

2008ஆம் ஆண்டிற்கு பின்னர் மசகு எண்ணெய் விலை இந்த உச்சத்தை தொடுவது இதுவே முதன்முறையாகும். உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் இன்று 13ஆவது நாளை எட்டியுள்ள நிலையில் மசகு எண்ணெயின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஆண்டனி பிளிங்கன், ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை தடை செய்வதற்கான வாய்ப்பு குறித்து ஐரோப்பிய மற்றும் நட்பு நாடுகளுடன் பேசி வருகிறோம். அதே சமயத்தில், சர்வதேச சந்தையில் போதுமான எண்ணெய் விநியோகம் இருப்பதையும் உறுதி செய்யப்படும் எனவும் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்திருந்தார்.

ஆண்டனி பிளிங்கன் தெரிவித்த கருத்துகளின் எதிரொலியாக நேற்று சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை உயர்ந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் காரணமாக கடந்த வாரம் மசகு எண்ணெயின் விலை பாரியளவில் அதிகரித்தது. இந்நிலையில், ரஷ்ய உற்பத்திகளுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் தடை விதிப்பு மற்றும் ஈரான் நாட்டுடனான மேற்கத்தேய நாடுகளின் அணுசக்தி ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தை தாமதமாகிய காரணங்களால் மசகு எண்ணெயின் விலை மேலும் 10% வரை உயர்ந்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் பிரண்ட் மசகு எண்ணெயின் விலை பெரல் ஒன்றுக்கு சுமார் 13 டொலர் அதிகரித்து, 131 டொலருக்கு வர்த்தகமாகிறது. இதேபோன்று அமெரிக்கா மசகு எண்ணெய் விலை 125 டொலராக உயர்ந்துள்ளது.

உக்ரைன் மீதான தொடர் தாக்குதலை கண்டித்து ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய் வாங்குவதை உலக நாடுகள் பெரியளவில் குறைத்துள்ளன. இதனால் மசகு எண்ணெய்க்கு அதிகப்படியான தட்டுப்பாடு உருவாகி விலை அதிகரித்துள்ளது.

இந்நிலையில், உக்ரைன் - ரஷ்யா போரால் மசகு எண்ணெயின் விலை இந்த வாரம் இதற்கு முன்னர் இல்லாத வகையில் 150 டொலர் வரை உயரக்கூடும் என்று வர்த்தக நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

**மத்திய கிழக்கு நாடுகளில் அதிகரிக்கும் உணவு தானிய விலை**

உக்ரைன் - ரஷ்ய போரால் மத்திய கிழக்கு நாடுகளில் உணவு தானியம் பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

உலகளவில் கோதுமை ஏற்றுமதியில் ரஷ்யா முதலிடத்திலும், உக்ரைன் நான்காமிடத்திலும் உள்ளன. இந்த இருநாடுகளும் சேர்ந்து உலகக் கோதுமை ஏற்றுமதியில் 30 சதவீதத்தையும், மக்காச்சோள ஏற்றுமதியில் 19 சதவீதத்தையும் கொண்டுள்ளன.

உக்ரைனில் பல வாரங்களுக்குப் போர் நீடித்தால் விவசாயிகள் கோதுமை பயிரிட முடியாத நிலை ஏற்படும். அதேநேரத்தில் மேலைநாடுகளின் பொருளாதாரத் தடையால் ரஷ்யா விளைவித்த தானியங்களை ஏற்றுமதி செய்ய முடியாது.

இதனால் உக்ரைன், ரஷ்ய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் எகிப்து, லெபனான், லிபியா, துருக்கி ஆகிய நாடுகளில் தானியங்கள், பால், இறைச்சி ஆகிய உணவுப் பொருட்களின் விலை கடுமையாக உயரும் அபாயமுள்ளது.

### ஆறு மாத கைக்குழந்தையுடன் மைதானத்திற்கு வந்த பாக். அணித்தலைவி

# போட்டி முடிந்ததும் கொஞ்சி விளையாடிய இந்திய வீராங்கனைகள்

ஐ.சி.சி. மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நியூசிலாந்தில் நடைபெற்றுவரும் நிலையில், இந்திய – பாக். அணிகளுக்கிடையிலான போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. குறித்த போட்டியில் பங்கேற்க வந்த பாகிஸ்தான் மகளிர் அணியின் தலைவி பிஸ்மா மரூஃப் தனது 6 மாத கைக்குழந்தையுடன் மைதானத்திற்கு வந்தார்.

போட்டிக்கு நடுவே தனது குழந்தையை பார்த்துக்கொண்டு அவர் கிரிக்கெட் விளையாடியது ரசிகர்களிடையே பிரமிப்பில் ஆழ்த்தியது. பிஸ்மா மரூஃப்பின் குழந்தையை அவ்வப்போது இந்திய வீராங்கனைகள் கொஞ்சி விளையாடினர். இந்நிலையில், போட்டி முடிந்ததும் குழந்தையை பார்ப்பதற்காக இந்திய வீராங்கனைகள் அனைவரும் பாகிஸ்தான் வீராங்கனைகளின் அறைக்குச் சென்றனர்.

அப்போது குழந்தை பாத்திமாவுடன் சுற்றிநின்ற இந்திய வீராங்கனைகள் அவருடன் கொஞ்சி விளையாடினர். குழந்தை பாத்திமாவுடன் இந்திய வீராங்கனைகள் போட்டோவும் வீடியோவும் எடுத்துக்கொண்டனர். பின்னர் குழந்தைக்காக சொக்லெட்டையும் பரிசாக இந்திய வீராங்கனைகள் கொடுத்தனர். இந்திய வீராங்கனைகளின் இந்தச் செயல் கிரிக்கெட் ரசிகர்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. களத்தில் ஆக்ரோஷமாக விளையாடினாலும் களத்துக்கு வெளியே ஒரு குடும்பம்போல், நண்பர்கள்போல் இரு நாட்டு வீராங்கனைகளும் இருந்தனர்.





# ரஷ்யக் கொடியை அகற்றிய டென்னிஸ் வீரர்கள்

உக்ரைனில் ரஷ்யா நடத்தும் போர் காரணமாக விளையாட்டு உலகம் ரஷ்யாவைத் தடைசெய்துள்ளது. இதன் விளைவாக முதல்நிலை வீரரான டேனியல் மெட்வெடேவ், ஒலிம்பிக் வெள்ளிப் பதக்கம் வென்ற கரேன் கச்சனோவ் ஆகியோர் தங்கள் இன்ஸ்டாகிராம் கணக்குகளிலிருந்து ரஷ்யக் கொடியை அகற்றியுள்ளனர்.

ரஷ்ய, பெலாரஷ்ய வீரர்கள் தங்கள் நாட்டின் பெயர் அல்லது கொடியின் கீழ் விளையாடுவதை சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் தடை செய்திருந்தாலும், வீரர்கள் சுற்றுப்பயணத்திலும் கிராண்ட்ஸ்லாம்களிலும் பங்கேற்க அனுமதித்துள்ளது.

டென்னிஸ் சம்மேளனத்தின் நடவடிக்கையைத் தொடர்ந்து மெட்வெடேவ், கச்சனோவ் ஆகியோர் ரஷ்யக் கொடியை தங்கள் இன்ஸ்டாகிராம் கணக்குகளில் நீக்கியுள்ளனர். ஆனால், அது அவர்களின் ட்விட்டர் சுயவிவரங்களில் உள்ளது. டென்னிஸ் வல்லுநர்கள் சங்கம் மற்றும் பெண்கள் டென்னிஸ் சங்கம் ஆகிய இரண்டும் ஒக்டோபர் மாதம் ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நடைபெறவிருந்த ஆண்கள் மற்றும் பெண்கள் போட்டியை நிறுத்திவைக்க முடிவு செய்துள்ளன.



ஒலிம்பிக் வெண்கலப் பதக்கம் வென்றவரும் உலகின் 15ஆம் நிலை வீரருமான உக்ரைனின் எலினா ஸ்விடோலினா, மெக்சிக்கோவில் நடைபெற்ற மான்டேர்ரி ஓபனில் ரஷ்யாவின் அனஸ்தேசியா பொடாபோவாவுக்கு எதிரான ஆட்டத்திலிருந்து முதலில் வெளியேறி டென்னிஸ் சர்வதேச நிர்வாகக் குழுவின் அறிக்கைக்குப் பிறகு விளையாட்டுக்குத் திரும்பினார்.

உக்ரைனியரான எலினா ஸ்விடோலினா, ரஷ்ய அனஸ்தேசியா பொட்டாபோவாவுடன் விளையாட மறுத்துவிட்டார். அதற்கு முன் ஐ.டி.எவ், ஏ.டி.பி. மற்றும் டபிள்யூ.டி.ஏ. ஒரு கூட்டறிக்கையை வெளியிட்ட பிறகு ரஷ்யாவின் நடவடிக்கைகளைக் கண்டித்து அவர்கள் ஒற்றுமையாக இருப்பதாகக் கூறினர்.



# டெஸ்ட் அரங்கில் புதிய மைல்கல்லை எட்டிய அஸ்வின்

இலங்கை அணியுடனான முதல் டெஸ்ட்டில் இந்திய அணியின் வெற்றிக்கு பந்துவீச்சில் முக்கிய காரணமாக திகழ்ந்த சுழற்பந்துவீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வீரர்கள் பட்டியலில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளார்.

சுற்றுலா இலங்கை அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான இரு போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை மொஹாலியில் ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஜடேஜாவின் சதம் மற்றும் விஹாரி, பண்ட், அஸ்வின் ஆகியோரது அரைச்சதங்கள் மூலம் 574 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி, இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்திருந்தது. மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த இலங்கை, ஜடேஜா மற்றும் அஸ்வினின் சுழலில் சிக்கி முதல் இன்னிங்ஸில் 174 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. 400 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த இலங்கை அணி, இரண்டாவது இன்னிங்ஸிலும் இந்திய வீரர்களின் சுழலில் சிக்கி திக்குமுக்காடியது. குறுகிய இடைவெளியில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்த இலங்கை அணி, 178 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இந்திய தரப்பில் அஸ்வின் மற்றும் ஜடேஜா ஜோடி தலா 4 விக்கெட்டுகளை சரித்தனர். இந்தப் போட்டியினூடாக டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் கபில்தேவை பின்னுக்குத் தள்ளி ரவிச்சந்திரன் அஸ்வின் இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

கபில்தேவ் 131 போட்டிகளில் 434 விக்கெட்டுகள் வீழ்த்தியிருந்த நிலையில், அஸ்வின் அந்த எண்ணிக்கையை 435 விக்கெட்டுகளை எடுத்து கடந்துள்ளார். அஸ்வின் வெறும் 85 போட்டிகளிலேயே இந்த சாதனையை முறியடித்துள்ளார். இந்தப் பெருமைமிகு பட்டியலில் அனில் கும்ளே 619 விக்கெட்டுகளுடன் முதலிடத்தில் உள்ளார்.



விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# அந்–நூரியன்ஸ் கிரிக்கெட் சுற்றுப்போட்டி: 2019 பழைய மாணவர் அணி சம்பியன்

(பொத்துவில் நிருபர்)

அட்டாளைச்சேனை அந்-நூர் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட அந்-நூரியன்ஸ் சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 2019ஆம் ஆண்டு பழைய மாணவர் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

அந்-நூர் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களை ஒன்றிணைக்கும் நோக்கில் அப்பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட அந்-நூரியன்ஸ் சம்பியன் கிண்ணம் - 2022 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் அந்-நூர் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.



அணிக்கு 7 பேர் 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் 2010ஆம் ஆண்டு மற்றும் 2019ஆம் ஆண்டு பழைய மாணவர் அணிகள் மோதிக்கொண்டன. இதில் 2019ஆம் ஆண்டு பழைய மாணவர் அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இச்சுற்றுப்போட்டியின் சிறப்பாட்டக்காரர் மற்றும் இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக என். நபாத், சிறந்த துடுப்பாட்ட வீரராக ஏ.எல்.நியாஸ், சிறந்த பந்துவீச்சாளராக எஸ்.எல்.றிஸ்கான் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அந்-நூர் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் எவ்.ஹலிம் தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஏ.சீ.எம்.சுபையிர் பிரதம அதிதியாகவும், அந்-நூர் மகா வித்தியாலய அதிபர் ஏ.எம்.அஸ்மி கௌரவ அதிதியாகவும், கோணாவத்தை ஜூம்ஆ பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம்.எம். அமீன் மற்றும் பிரதி அதிபர் எம்.எச்.எம். றமீஸ் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.



# அமெரிக்க வீராங்கனையை கைதுசெய்த ரஷ்யா



சட்டவிரோத போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் அமெரிக்க கூடைப்பந்து வீராங்கனை பிரிட்னி கிரினரை ரஷ்யா கைதுசெய்தது. உக்ரைனில் போர் நடைபெற்றுவரும் நிலையில், இதை மையமாக வைத்து அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே கடும் மோதல் போக்கு நிலவி வருகிறது.

ரஷ்யா மீது அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் பொருளாதாரத் தடைகளை தொடர்ச்சியாக விதித்து வருகின்றன.

இந்நிலையில், அமெரிக்க கூடைப்பந்து வீராங்கனை பிரிட்னி கிரினர், தனது பெட்டியில் திரவ வடிவ போதைப்பொருளை வைத்திருந்ததாகக் கூறி அவரை ரஷ்ய சுங்க அதிகாரிகள் கைதுசெய்தனர்.

கைதான வீராங்கனை பிரிட்னி கிரினர், இரு முறை தங்கப்பதக்கம் வென்ற அமெரிக்க கூடைப்பந்து அணிகளில் இடம்பெற்றிருந்தவர். இந்த கைது நடவடிக்கை கடந்த மாதமே நடந்திருந்த நிலையில், அதை ரஷ்ய சுங்கத்துறை தற்போது அறிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து தங்கள் நாட்டு வீராங்கனையை மீட்பதற்காக சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# "மூன்று நாட்களுக்குள் போட்டி முடியுமென நினைத்துப் பார்க்கவில்லை"

## தோல்வியின் பின்னர் திமுத்



இந்திய அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியை சந்தித்த நிலையில், குறித்த தோல்வியின் பின்னர் இலங்கை அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

மூன்று நாட்களுக்குள் இந்தப் போட்டி முடியுமென நாங்கள் நினைத்துப் பார்க்கவில்லை. துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பாக விளையாட பழகிக்கொள்ள வேண்டும். இந்திய அணியை போன்ற வலுவான அணிக்கு எதிராக விளையாடும்போது ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்பாக விளையாடி நல்ல ஆரம்பம் அமைத்துக் கொடுப்பது முக்கியம். ஆனால், நாங்கள் அதை செய்ய தவறிவிட்டோம்.

பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்டு, இந்திய வீரர்களின் விக்கெட்டுகளை விரைவாக கைப்பற்றியிருந்தால் கூட அது எங்களுக்கு சாதகமாக இருந்திருக்கும். புதிய பந்தில் பந்துவீச்சாளர்கள் சிறப்பாக பந்துவீசினர். ஆனால், நேரம் செல்லச் செல்ல எங்களது எந்தத் திட்டத்தையும் செயற்படுத்த முடியவில்லை. தவறுகளை நிச்சயம் திருத்திக்கொள்வோம். துடுப்பாட்ட வீரர்கள் தங்களது பொறுப்பை உணர்ந்து அதிகமான ஓட்டங்கள் குவித்துக் கொடுக்கவேண்டும் - என தெரிவித்தார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7